Vol.1, Issue 12 | Annual Subscription ₹ 420

மே 2019

@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்



# சிக்காகோவில் சில மணி துளிகள்



RC பெங்களூர் ஆர்ச்சார்ட்ஸ் தலைவர் D ரவிசங்கர் மற்றும் அவர் மனைவி பவோலாவும் சிக்காகோவில் பால் ஹாரிஸ் வீட்டின் முன்.




D ரவிசங்கர், பவோலா, RI தலைவர் பாரி ரஸ்ஸின் மற்றும் எஸ்தருடன்.



ரவிசங்கர், பவோலா PRIP KR ரவீந்திரன் மற்றும் TRF அறங்காவலர் குலாம் வஹன்வதியுடன்.

# உள்ளே


**12** **இந்திய ரோட்டரி அமைப்பினரின் அடையாளம் தொண்டுள்ளம் தான்: மார்க் மலோனி**
RIPE மார்க் மெலோனி உடன் ஒரு நேர்காணல்.

**24** **மடகாஸ்கரில் மகத்தான மருத்துவ சேவை**
ஆப்பிரிக்க தீவில் ஆயிரக்கணக்கான நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவ முகாம்.

**30** **ரோட்டரி சட்ட விதிகளுக்கான கவுன்சில் கூட்டம்**
சமீபத்தில் சிகாகோவில் நடந்து முடிந்த CoL பற்றிய ஒரு தொகுப்பு.

**34** **மாவட்ட ஆளுநர்களுக்கான RIயின் நிதி ஒதுக்கீடு ஒரு கோடி டாலர்**
கொல்கத்தாவில் புதிய மாவட்டத் தலைவர்களுக்கான திஷா பயிற்சி கருத்தரங்கத்தில் PRIP K R ரவீந்திரன் உரையின் சுருக்கம்.

**40** **ரோட்டரியில் 31 ஆண்டுகளாக ஜொலிக்கும் மகளிர்**
RID 3201 ரோட்டரி மகளிரை கொண்டாடுகிறது.

**42** **பள்ளிகளை மேம்படுத்தும் மெட்ராஸ் சென்ட்ரல் சங்கம்**
ரோட்டரியால் சிறந்த வசதிகளைப் பெற்ற இரு அரசுப்பள்ளிகள்.

**48** **பிஞ்சு இதயங்களை காக்கும் மீனம்பாக்கம் ரோட்டரி சங்கம்**
CHD நோயால் பாதிக்கப்பட்ட 100 குழந்தைகளின் உயிர்களை காப்பாற்றிய சங்கம், மேலும் பணியாற்றத் தயாராக உள்ளது.

**60** **புடாபெஸ்ட், இஸ்தான்புல் நகரங்களில் துருக்கி கெபாப்**
துருக்கி நாட்டின் சில சிறந்த உணவுகளின் ஒரு தொகுப்பு.




















**அட்டை:** மும்பை சத்ரபதி சிவாஜி மகாராஜ் மியூசியத்தில் RIPE மார்க் மலோனி மற்றும் கேய்.


**படம்:** ஜெய்ஸ்ரீ

## இந்திய ரோட்டரி கிரீடத்தில் ‘வாபி’ ஒரு வைர ஆபரணம்

*நிலைத்திருக்கும் மற்றும் மனிதாபிமான திட்டப்பணிக்கு உத்வேகமூட்டும் கதையாக இருந்தது (மார்ச் இதழில்) வாபி ரோட்டரி மருத்துவமனை குறித்த கட்டுரை. பள்ளிக் குழந்தைகள், செவிலியர் பயிற்சிப் பள்ளிகள், மருத்துவமனைகள் மற்றும் கல்லூரிகளுக்கான நிறைய சேவைத் திட்டப்பணிகளை RC வாபி நிறைவேற்றியுள்ளது. இவையனைத்திற்கும் காரணம் அற்புதமான ரொட்டேரியன் PRIP கல்யான் பானர்ஜி. 2007ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் PRIP வில்ஃப் வில்கின்சன் உடன் சேர்ந்து வாபியை பார்வையிடும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. தன்னுடன் வாபிக்கு வருமாறு என்னை அவர் அழைத்தார், ஹரியா LG ரோட்டரி மருத்துவமனையின் ரோட்டரி அதிநவீன ஸ்கேன் மையத்தின் அடிக்கல் நாட்டு விழாவில் பானர்ஜி முன்னிலையில் வில்கின்சன் தொடங்கிவைக்கும் போது நான் அங்கே இருந்தேன். கல்யாண்ஜி அவர்களின் சேவையினை நான் பார்த்தேன்... எப்பேர்ப்பட்ட கருணையுள்ளம், அடக்கம், எளிமை, அர்ப்பணிப்பு, ஈடுபாடு மற்றும் பேரார்வம் கொண்ட ரொட்டேரியனாக இருக்கிறார்.*

*அஸ்வினி கர், RC புவனேஷ்வர் மீடோஸ் — D 3262*

*சுத்தம் சுகாதாரம் குறித்த தன்னுடைய நோக்கத்தில் RID C பாஸ்கர் வெளிப்படையாக இருக்கிறார். இந்திய கிராமப்புறங்களில் குறிப்பாக வளர்ச்சி யடையாத கிராமங் களில் இது ஒரு மிகப் பெரிய பிரச்சனையாக இருக்கிறது. சமூகத்தில் நினைவுகூறத்தக்க திட்டப்பணிகளை ரோட்டரி நிறைய கொண்டு வந்திருந் தாலும் கூட சுகா தாரத்தை மேம்படுத்த நாம் அதிகமாகத் திட்டமிட வேண்டும்.*



*குவிந்த மாலைகள் அட்டகாசமான கட்டுரை மற்றும் வண்ணமயமாகவும் இருந்தது, நமது பாரம்பரியம் மற்றும் VIPகளை வரவேற்கும் இந்திய கலாச் சாரத்தை வெளிக்காட்டியது. வாபியில் உள்ள ரோட்டரி மருத்துவமனை குறித்த மற்றொரு கட்டுரை சுவாரஸ்யமாக இருந்தது. இந்தியாவில் ரோட்டரி நகரத்தைப் பிரபலப்படுத்துவதற்கு கனவு கொண்ட PRIP கல்யான் பானர்ஜி என்ற மிகவும் மதிக்கத்தக்க தலைவரை அந்த நகரம் கொண்டுள்ளது. வாபியில் எந்த பகுதிக்கு நீங்கள் சென்றாலும் அங்கே ரோட்டரியைக் காணலாம், இது நமது தலைவரின் பெருமையை காட்டுகிறது. இந்திய ரோட்டரி கிரீடத்தில் வாபி ஒரு வைர ஆபரணம்.*

*நலம் தரும் மனம் என்ற கட்டுரை தகவல் நிறைந்ததாகவும் பயனுள்ள வகையிலும் இருந்தது. சங்க சேவைகள் உண்மையிலேயே அழகானப் புகைப்படங்களுடன் கவர்ச்சிகரமாக இருந்தது மற்றும் இது தங்களின் சமூகத் திட்டப்பணிகளை செயல்படுத்த சங்கங்களுக்கு நல்ல ஊக்கம் கொடுப்பதாக இருக்கிறது.*

*PRN சந்திரமௌலி RC பெர்ஹாம்பூர் மிட்டவுண் — RID 3262*

## தெளிவான வெளிப்படையாக செய்தி

ரோட்டரி தொட்டு விட்டு போவதற்கல்ல RIDE பரத் பாண்டியா வின் உரையை கூறும்போது, சுற்றி வளைத்துப் பேசாமல் நேரடியாக குறிப்பிட்ட விஷயங்களை தெளிவாக கூறியுள்ளார் ரஷ்தா பகத். “மோசமான திட்டமிடல் மற்றும் சரியில்லாத தலைமைப் பதவிகள் போன்றவை மற்றொரு பாதகமான அம்சம்.” இது தான் உண்மை. சரியில்லாத திட்டத்துடன், சங்கங்கள் விருப்ப மில்லாதவர்களை தலைமை பொறுப்பில் அமர்த்துகிறது, இதனால் அவர்கள் சோபிக்கத் தவறி விடுகிறார்கள்.

“என் சங்கம் இப்படித்தான், இது தான் எங்கள் மரபு, எங்கள் சங்கத்திற்கு பெண்களோ இளம் உறுப்பினர்களோ தேவையில்லை.” இந்த செய்தி நெற்றிப் பொட்டில் அடித்தது போல இருக்கிறது. மூத்த மற்றும் முன்னாள் தலைவர்களும் வழிகாட்டியாக இருக்க வேண்டுமே தவிர ஆதிக்கம் செலுத்துபவர்களாக அல்ல. தலைமைப் பொறுப்புகளை வகிக்க புதிய உறுப்பினர்களை ஊக்கப்படுத்தும் யுக்தியை சங்கத் தலைவர்கள் கொண்டிருக்கவேண்டும்.

V V நாராயணன், RC சென்னை K K நகர் — RID 3232

## ரோட்டரி நியூஸ் ‘சுவையாக’ மாறியது

ஏப்ரல் மாத இதழில் பாரம்பரிய உணவுகள் குறித்த கட்டுரை வியப்பாக



இருந்தது. சமையல் குறித்த பொருள்கள் என் நினைவலைகளைக் கிளப்பியது. ரோட்டரி நியூஸ் இதழ் சுவையாகவும் சுண்டியிழுக்கும் கதைகள் கொண்ட கதம்பமாக இருந்தது.

J V ரெட்டி — RID 3160

மார்ச் மாத இதழ் வண்ணமயமான புகைப்படங்கள் மற்றும் நல்ல கதைகளுடன் உற்சாகம் தருவதாக இருந்தது. சங்க சேவைகள் வாசிக்க உத்வேகம் கொண்டதாக இருக்கிறது.

சுதிர் குமார் கார்க் RC முஜாஃபர்நகர் — RID 3100

2019 RI மாநாட்டின் தலைவர் ஜான் ப்ளவுன்ட் எழுதிய, மாநாட்டுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரசிடென்டை அனுப்புவோம் என்ற கட்டுரையை முழுவதுமாக வாசித்து மகிழ்ந்தேன். RI மாநாட்டுக்கு புதிய தலைவர்களை

அனுப்புவதில் உள்ள பயன்களை அழகாக விளக்கியுள்ளார், இது சங்கங்களை ஊக்கப்படுத்தி நிதி திரட்ட வைக்கும்.

M V சுப்ரமணியம்
RC புரோட்டத்தூர் — RID 3160

RI மாநாட்டுக்கு புதிய தலைவர்களை அனுப்பக்கூடிய யோசனை அருமை, இதன் மூலம் அவர்கள் சுமார் 200 நாடுகளுக்கு அதிகமான ரொட்டேரியன்களைச் சந்தித்து, யோசனைகளையும் நிதி திரட்டும் வழிகளையும் கலந்துரையாடும் ஒரு வாய்ப்பினையும் பெறுவார்கள். ரோட்டரியின் முக்கிய நோக்கங்களான: தலைமைப்பண்பு, ஒற்றுமை, சேவை, பன்முகம் மற்றும் தோழமை போன்றவைகளையும் அந்த சங்கம் கற்றுக்கொள்ளும். ஜெய்ஸ்ரீ எழுதிய உதவிக்கரம் நீட்டினோம் என்ற திட்டப்பணி தனித்துவமானது, இதில் ரோட்டரி சங்கங்கள், உறுப்பு துண்டிக்கப்பட்ட வர்களுக்கு செயற்கை உறுப்புகளை வழங்குகிறது.

நவீன் R கார்க்
RC சுணம் — D 3090

RC மேட்டுப்பாளையம், RC புனே டவுண்டவுண் சங்கத்துடன் இணைந்து செயல்படுத்திய LN-4 முகாம் அற்புதம். RID 3000 சங்கத் தலைவரின் மனைவி திருமதி ச ரளா கண்ணன் தன் குழுவினருடன் இணைந்து அதேமாதிரியான LN 4 முகாமை இந்த ஆண்டு ஏற்பாடு செய்தனர். வெள்ளம் பாதித்த கேரளாவிற்கு ஆஸ்தர் குழுமத்தைச் சேர்ந்த Dr ஆசாத் மூபென் ரூபத்தில் ஒரு நன்கொடையாளர் கிடைத்துள்ளார், இவர் நீடூடி வாழ்க!

S முனியாண்டி, RC திண்டுக்கல் ஃபோர்ட் — RID 3000

தமிழில் ரோட்டரி நியூஸ் வாசிப்பது மனநிறைவாகவும் மனதைத் தொடுவதாகவும் இருக்கிறது. சுத்தம், சுகாதாரம் குறித்த RI இயக்குனரின் செய்தி, RI தலைவர், பேரி ராஸின் அவர்களின் உத்வேகம் கொண்ட செய்தி மற்றும் ரஷீதா பகத் எழுதிய ரோட்டரியின் கதவுகளை அடைக்க வேண்டாம் போன்றவை வாசிக்க சுவாரஸ்யமாக இருந்தது.

வாபி ரோட்டரி மருத்துவமனை, செயற்கை கை, கதகளி மற்றும் Dr மூபென் போன்றவை குறித்தான மற்ற கண்கவரும் கட்டுரைகள் வாசகர்களை சுண்டியிழுத்தது. RIPE மார்க் மெலோனி அவர்களின் சுற்றுப்பயணம் அழகான படங்களுடனும் கட்டுரைகளுடனும் விவரிக்கப்பட்டுள்ளது. தமிழ் பதிப்பிற்கும் பாராட்டுக்கள்.

பொன் முத்தையன்
RC ஆடுதுறை — RID 2981

உலகம் முழுவதும் பயணம் செய்து ஒரு ரொட்டேரியனாக என் அனுபவங்கள், RI தலைவர் பேரி ராஸின் அவர்களின் ஏப்ரல் மாத செய்தியில் அழகாகப் பிரதிபலித்தது. உலகம் முழுவதும் சுற்றும்போது சக ரொட்டேரியன்கள் எனக்கு வரவேற்பு கொடுக்கிறார்கள்.

கடந்த ஆறு மாதங்களில், ஆறு நாடுகளில் உள்ள பல்வேறு ரோட்டரி சங்கங்களைச் சேர்ந்த ரொட்டேரியன்களை சந்தித்துள்ளேன். ஒரு உறுப்பினராக ரோட்டரி எனக்கு வழங்கியுள்ள வாய்ப்பிற்கும் உலகம் முழுவதும் உள்ள ரொட்டேரியன்களை சந்திக்கையில் எனக்கு கிடைக்கும் உபச்சாரத்தையும் பாராட்டுகிறேன்.

ரோட்டராக்டர்களைப் பற்றி வெளிப்படுத்திய செய்தியும் முக்கியத்துவம் வாய்ந்தது. ஷிஷு மந்திர் ரோட்டராக்ட் சங்கத்தில் நான் கண்ட ஆற்றலும் உற்சாகமும் கற்பனைக்கு எட்டாதது. ரொட்டேரியன்களாக ரோட்டராக்டர்களுடன் சேர்ந்து அவர்களை வழிநடத்துவது அருமையாக இருக்கும்.

மனோஜ் காப்ரே
RC பெங்களூர் ஓயிட்ஃபில்டு சென்ட்ரல் — RID 3190

## உறுப்பினர்ச் சேர்க்கை சரிவை நிறுத்துங்கள்

உறுப்பினர்ச் சேர்க்கையில் தொடர்ச்சியாக சரிவு ஏற்படும் பிரச்னையை உங்கள் இதழ் மூலமாக RI தலைவர் பேரி ராஸின், RIPE மார்க் மெலோனி, மற்றும் RIPN சுஷீல் குப்தா ஆகியோரின் கவனத்திற்குச் கொண்டு வரவிரும்புகிறேன். தங்கள் துணைகளை ரோட்டரியில் இணைப்பது, RI கட்டணங்களை பாதியாகக் குறைப்பது மற்றும் தரமான உறுப்பினர்களைச் சேர்ப்பது போன்றவற்றை ஊக்கப்படுத்த வேண்டும். DG-க்கள் வருகைப் பதிவுகளை கண்காணிக்க வேண்டும். போலியோவிற்குப் பிறகு, புதிய மருத்துவ திட்டங்களை அமைக்க வேண்டிய நேரம் இது.

சனத் ஜெயின், RC ராய்பூர் ஹெரிடேஜ் — RID 3261

## அனைவருக்கும் வாய்ப்பு கொடுங்கள்

சில காலமாக, தென்னிந்திய திட்டப்பணிகளைப் பற்றிய செய்திகளே ரோட்டரி நியூஸ் இதழில் அதிகம் இடம்பெறுகிறது. இந்தியா முழுவதுமான ரோட்டரி திட்டப்பணிகளுக்கு சமமான முக்கியத்துவம் கொடுத்தால் சரியிருக்காதா என்ன? இந்த விஷயத்தில் அனைத்துவிதமான உதவிகளைச் செய்ய நான் தயாராக இருக்கிறேன்.

Rtn அணில் சாஹ்னி — RID 3011

To revert to
**English or Hindi**
version please mail to us at
*rotarynews@rosaonline.org.*

*உங்களுடைய கருத்துக்களை நாங்கள் வரவேற்கிறோம்.*
*ஆசிரியருக்கு எழுதுங்கள்: rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com*

## Governors Council

| | | |
|---|---|---|
| RI Dist 2981 | DG | S Piraiyon |
| RI Dist 2982 | DG | Nirmal Prakash A |
| RI Dist 3000 | DG | RVN Kannan |
| RI Dist 3011 | DG | Vinay Bhatia |
| RI Dist 3012 | DG | Subhash Jain |
| RI Dist 3020 | DG | Guddati Viswanadh |
| RI Dist 3030 | DG | Rajiv Sharma |
| RI Dist 3040 | DG | Gustad Anklesaria |
| RI Dist 3053 | DG | Priyesh Bhandari |
| RI Dist 3054 | DG | Neeraj Sogani |
| RI Dist 3060 | DG | Pinky Patel |
| RI Dist 3070 | DG | Barjesh Singhal |
| RI Dist 3080 | DG | Praveen Chander Goyal |
| RI Dist 3090 | DG | Dr Vishwa Bandhu Dixit |
| RI Dist 3100 | DG | Deepak Jain |
| RI Dist 3110 | DG | Arun Kumar Jain |
| RI Dist 3120 | DG | Stuti Agrawal |
| RI Dist 3131 | DG | Dr Shailesh Palekar |
| RI Dist 3132 | DG | Vishnu S Mondhe |
| RI Dist 3141 | DG | Shashi Sharma |
| RI Dist 3142 | DG | Dr Ashes Ganguly |
| RI Dist 3150 | DG | Ramesh Vangala |
| RI Dist 3160 | DG | Konidala Muni Girish |
| RI Dist 3170 | DG | Ravikiran Janradan Kulkarni |
| RI Dist 3181 | DG | Rohinath P |
| RI Dist 3182 | DG | Abhinandan A Shetty |
| RI Dist 3190 | DG | Suresh Hari S |
| RI Dist 3201 | DG | A Venkatachalapathy |
| RI Dist 3202 | DG | Dr E K Ummer |
| RI Dist 3211 | DG | E K Luke |
| RI Dist 3212 | DG | K Raja Gopalan |
| RI Dist 3231 | DG | C R Chandra Bob |
| RI Dist 3232 | DG | Babu Peram |
| RI Dist 3240 | DG | Dr Sayantan Gupta |
| RI Dist 3250 | DG | Kumar Prasad Sinha |
| RI Dist 3261 | DG | Nikhilesh M Trivedi |
| RI Dist 3262 | DG | Bhabani Prasad Chowdhury |
| RI Dist 3291 | DG | Mukul Sinha |

## Board of Permanent Trustees & Executive Committee

| | | |
|---|---|---|
| PRIP | Rajendra K Saboo | RI Dist 3080 |
| PRIP | Kalyan Banerjee | RI Dist 3060 |
| RIPN | Sushil Gupta | RI Dist 3011 |
| PRID | Sudarshan Agarwal | RI Dist 3011 |
| PRID | Panduranga Setty | RI Dist 3190 |
| PRID | Ashok Mahajan | RI Dist 3141 |
| PRID | Yash Pal Das | RI Dist 3080 |
| PRID | Shekhar Mehta | RI Dist 3291 |
| PRID | P T Prabhakar | RI Dist 3232 |
| PRID | Dr Manoj D Desai | RI Dist 3060 |
| RID | C Basker | RI Dist 3000 |
| TRF Trustee | Gulam A Vahanvaty | RI Dist 3141 |
| RIDE | Dr Bharat Pandya | RI Dist 3141 |
| RIDE | Kamal Sanghvi | RI Dist 3250 |

### Executive Committee Members (2018–19)

DG Rajiv Sharma — RI Dist 3030
Chair – Governors Council

DG Pinky Patel — RI Dist 3060
Secretary – Governors Council

DG Subhash Jain — RI Dist 3012
Secretary – Executive Committee

DG A Venkatachalapathy — RI Dist 3201
Treasurer – Executive Committee

DG Shashi Sharma — RI Dist 3141
Member – Advisory Committee



## ROTARY NEWS / ROTARY SAMACHAR

**Editor**
Rasheeda Bhagat

**Senior Assistant Editor**
Jaishree Padmanabhan



## Send all correspondence and subscriptions to

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers, 34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India. Phone : 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org
Website : www.rotarynewsonline.org



Printed by P T Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by P T Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.



The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced, but with permission from RNT.



# ஜனநாயகத் தேர்தலைக் கொண்டாடுவோம் !

ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை கிடைக்கும் வாய்ப்பு மீண்டும் கிடைத்துள்ளது. அதுதான் பொதுத் தேர்தல். இந்த முறை உலகின் மிகப் பெரிய தேர்தலில் 90 கோடிப் பேர் ஏழு கட்டங்களில் வாக்களிக்கத் தொடங்கி, புதிய அரசைத் தேர்ந்தெடுக்கப் போகிறார்கள்.

வாக்களிப்பது நமது அரசியல் சட்டத்தில் ஓர் அங்கமாகும். அதுதான் இந்தியாவை ஜனநாயக நாடாக மாற்றியது.

நம் நாட்டில் ஜனநாயக முறைப்படி தேர்ந்தெடுக்கப் பட்ட ஓர் அரசு ஒரே வோட்டில் கூட கவிழ்ந்து விடலாம். 1999ம் ஆண்டு வாஜ்பாய் அரசுக்கு அளித்த ஆதரவை அஇஅதிமுக பொதுச் செயலாளர் ஜெ. ஜெயலலிதா விலக்கிக் கொண்டதை அடுத்து, 13 மாதத்தில் ஆட்சி கவிழ்ந்தது. வாஜ்பாய் நாடாளுமன்றத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க உரையை நிகழ்த்திவிட்டு, ஆட்சியிலிருந்து இறங்கினார். ஆனால், அடுத்து நடந்த தேர்தலில் அவர் மிகப் பெரிய வெற்றி பெற்று மீண்டும் நிலையான ஆட்சியை நடத்தினார். ஐந்து ஆண்டுகள் ஆட்சியில் இருந்தார். அப்படி நமது ஜனநாயகம் கொண்டாடத்தக்கது!

வாக்காளர்கள் என்ற முறையில் வாக்குச் சாவடியில் வாக்கைப் பதிவு செய்வது நமது கடமையாகும். பணக்காரர்கள், உயர் நடுத்தர வர்க்கத்தினர், வாய்ப்பந்தல் போடும் பிரிவினர் செல்வாக்கு குறைந்த கட்சிகளிடம் அரசியல் ஞானம் பேசுவார்கள். ஆனால், உண்மையில் வாக்குப் பதிவு செய்யமாட்டார்கள். வாக்குப் பதிவு நாளை ஒட்டி வார விடுமுறை தினம் அமைந்தால், விடுப்பு எடுத்துக் கொண்டு அனுபவிப்பார்கள்.

எம்எல்ஏ-க்கள், எம்பி-க்கள் ரோட்டரி உறுப்பினர்களாக இருப்பதிலிருந்து இந்திய ரோட்டரி அமைப்பினரும் அரசியல் உலகமும் நெருக்கமாக இருக்கின்றன என்பதைப் புரிந்து கொள்ளலாம். மத்திய ரயில்வே அமைச்சர் பியுஷ் கோயல் ஜெய்ப்பூரில் நடந்த ரோட்டரி கூட்டத்தில் பேசுகையில், தான் ஒரு ரோட்டரி உறுப்பினர் என்று குறிப்பிட்டது நினைவுக்கு வருகிறது. சில ரோட்டரி வாட்ஸ்அப் குழுமத்தில் நடைபெறும் மக்களவைத் தேர்தலில் போட்டியிடும் ரோட்டரி அமைப்பினரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. அவர்கள் வெற்றி பெறுவதற்கு நமது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வோம்.

வாக்கு செலுத்த வேண்டும் என்பது ஒரு புறம் இருக்க, படித்த, அறிவாளிகளான நாம் வாக்குச் சாவடியில் விரலில் மையைப் பதிவு செய்துகொண்டு அதை சமூக வலைதளங்களில் பதிவு செய்வதுடன் நிற்கக் கூடாது. நமது பிரதிநிதியாக நாடாளுமன்றத்தில் சிறந்த, நேர்மையானவரைத் தேர்ந்தெடுப்பதற்கு ஏற்ப மனத்தைச் செலுத்தவேண்டும், சிந்திக்க வேண்டும். அவர் நேர்மையாகப் பணியாற்றுபவராகவும் அடுத்த ஐந்து ஆண்டுகளில் நாட்டில் நல்ல வளர்ச்சியை எட்டுவதற்காக விடாமல் முயல்பவராகவும் இருக்கவேண்டும்.


130 கோடி பேரின் கனவுகளைக் கொண்டது நம் நாடு; நம் நாட்டைச் சரியான பாதையில் செலுத்தும் நல்லவர்களை மக்களவைக்கு அனுப்ப வேண்டும். அந்த சரியான பாதை என்பது பொருளாதார மேம்பாடு, வளர்ச்சி, அனைவருக்குமான நீதி, சமத்துவம் கிடைக்கும் பாதைக்கு இட்டுச் செல்ல வேண்டும்.

சமூகத்தின் நமக்கு அனைத்துத் தரப்பினருக்கும் பிரதிநிதியாக மக்களவைக்குச் செல்பவர்தான் நமக்குத் தேவை. ஏழை பணக்காரர், நகர்ப்புறவாசி - கிராமப்புறத்தைச் சேர்ந்தவர், நமக்கு உணவளிப்பதற்காக வயலில் கடுமையாக வேலை செய்யும் விவசாயிகள், நிலமில்லாத கூலிகள், கொளுத்தும் வெயிலில் வயலில் கடுமையாக வேலை செய்யும் கோடிக்கணக்கான பெண்கள் ஆகியோரின் நலனுக்காகப் பாடுபடுவோர் மக்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.


இதனிடையே உரத்த குரலில் பரப்புரை செய்த நமது அரசியல் தலைவர்கள் குரல் தணிந்து பேசுவர் என நம்புகிறேன். தேர்தல் பிரசாரத்தின்போது, தரக்குறைவான மொழியில் பேசியவர்கள் மீது அரசியல் கட்சிகள் நடவடிக்கை எடுக்கும் என கருதுகிறோம்.

அத்தகைய மனிதர்களின் செயல்பாடுகள் எந்த நம்பிக்கையையும் தரவில்லை. அவர்களது செயல்பாடுகளின் முடிவுகள் அரசியல் கட்சியினரின் கைகளில் இருக்கின்றன. MP பதவியை எதிர்பார்த்து செயல்படும் அவர்களிடம் கண்ணியத்தை எதிர்பார்ப்பது அதிகம். இந்திய வாக்காளர்களிடமும் ஒரு சில கண்ணியமான, நாணயமான செயல்பாடுகளை காணும் உரிமை பெற்றவர்கள்.

இதனிடையே, இலங்கையில் வெடித்த குண்டு வெடிப்பில் அப்பாவி மக்கள் இறப்பு, ரோட்டரியின் அமைதி காக்கும் திட்டத்தின் முக்கியத்துவத்தை மேலும் வலியுறுத்துகிறது.



ரஷீதா பகத்



# இளைஞர்களுக்கு வழி வகுப்போம்

BE THE INSPIRATION

என்னை முழுவதுமாகப் புரிந்துகொண்டவர்களான என் குடும்பத்தினருக்குத் தெரியும் ரோட்டரி மீது எனக்குள்ள ஆர்வம் எல்லையற்றது என்று. நான் ரோட்டரியில் ஈடுபட்டிருப்பது போன்றே அவர்களும் ஈடுபட வேண்டும் என நான் எதிர்பார்க்க மாட்டேன் என்றும் அவர்களுக்குத் தெரியும். இது அவரவர் விருப்பத்தைப் பொறுத்தது. ஆனால் அவர்கள் சரியான முடிவை எடுக்கும்போது, என்னால் தவிர்க்க முடியவில்லை என்பதை நான் கட்டாயம் ஒப்புக்கொள்ளவேண்டும்.

போன வருடம் டொரான்டோ மாநாட்டின் முடிவில், எனது 12 வயது பேத்தி, நான் ஏதாவது செய்யணும்னு நினைக்கிறேன். என்ன செய்யலாம்? என்று என்னைப் பார்த்துக் கேட்டாள். இயல்பாகவே, மற்ற ரொட்டேரியன் தாத்தாவால் என்ன செய்ய முடியுமோ அதையே தான் நான் செய்தேன்: அவளுடைய பள்ளியில் ஒரு இன்டராக்ட் சங்கம் இருக்கிறதா என்று கேட்டேன். அங்கே இல்லையென்று தெரிந்தபின்பு, புதிதாக ஒன்றை அமைக்க முயற்சி செய்தாள். துரதிருஷ்டவசமாக, அவளுடைய பள்ளி முதல்வரின் முடிவோ வேறுமாதிரியாக இருந்தது, ஆனால் நம்மால் முடியும்போதெல்லாம், ரோட்டரி இளைஞர் திட்டங்களுக்கு உதவி செய்ய ஒருபோதும் உற்சாகம் குறையக்கூடாது, ஏனெனில் அவர்கள் விலைமதிப்பற்றவர்கள்.

உதாரணமாக ரோட்டரி இளம் தலைவர் விருதினை எடுத்துக்கொள்ளுங்கள். இது இளைஞர்களை மேலும் நம்பிக்கை கொண்டவர்களாகவும், தங்களைச் சுற்றியுள்ள உலகத்தை நன்கு புரிந்து இலட்சியவாதிகளாகவும் மாற்றுகிறது - எனது 16 வயது பேரன் இதில் பங்கெடுத்த பிறகு அவனில் ஏற்பட்ட மாற்றங்களைப் பார்க்க அருமையாக இருந்தது.

என் குடும்பம் வெறும் தொடக்கமே. நான் செல்லும் இடங்களிலெல்லாம், நமது இளைஞர் திட்டங்களால் வாழ்வில் மாற்றம் ஏற்பட்ட அனைத்து விதமான மக்களைச் சந்திக்கிறேன். ஐந்து அல்லது 15 அல்லது 25 வருடங்களுக்கு முன்பு, ரோட்டரி இளைஞர் கலாச்சாரப் பரிமாற்ற குழுவினர் எப்படி ஒரு புதிய மொழியை கற்றுக்கொடுத்தார்கள் அல்லது ஒரு புதிய கலாச்சாரத்தை அறிமுகப்படுத்தினார்கள் என்பதை என்னிடம் சொல்கிறார்கள். புதிய தலைமுறை சேவைப் பரிமாற்றம், எப்படி அவர்களுடைய தொழில் வளர்ச்சிக்கு உதவியது அல்லது ரோட்டராக்ட் உறுப்பினர் சேர்க்கை இந்த சமூகத்திற்கு நல்லது செய்ய தங்களின் ஆர்வத்தை எப்படி தூண்டியது எனபதைப் பற்றி அவர்கள் பேசும்போது பிரகாசம் அடைகிறார்கள்.

இளம் தலைவர்களுக்கான ரோட்டரி திட்டங்கள், ஒவ்வொரு வருடமும் நூற்றுக்கணக்கான ஆயிரக் கணக்கான இளைஞர்களுக்கு நமது ரோட்டரியின் எல்லைகளைத் தாண்டி, நமது சேவைக் குறிக் கோள், நட்புறவு மற்றும் தலைமைப்பண்பு வளர்ச்சி போன்றவற்றைப் பரப்புகிறது. இளைஞர்களுடன் இணைந்தும் அவர்களுக்காக திட்ட ஆதரவாளர்களாகவும், திட்டப்பணி கூட்டாளிகளாகவும் மற்றும் குருவாகவும் பணிசெய்யும் போது - இது நம்மிடையும் ரோட்டரியிலும் பல அற்புதங்களை வெளிக்கொணருகிறது.

மே மாதம் இளைஞர் சேவை மாதம், உங்கள் ரோட்டரி சங்கம் பல வழிகளில் கொண்டாடலாம். ஒரு இன்டராக்ட் சங்கம் அல்லது ரோட்டராக்ட் சங்கத்திற்கு நிதி ஆதரவு கொடுங்கள், அதன்மூலம் உங்கள் சமூகத்தில் உள்ள இளைஞர்களுக்கு செயலில் இறங்கவும், தலைவர்களாக மாறவும் ஒரு உலகளாவிய கண்ணோட்டத்தைப் பெறுவதற் குமான வழிமுறைகளை அவர்களுக்கு உங்கள் ரோட்டரி சங்கம் வழங்கும். ஒரு சேவைத் திட்டப்பணிக்காக உங்கள் உள்ளூர் ரோட்டராக்ட் சங்கத்துடன் ஒன்றிணையுங்கள். இளம் தலைவர்களுக்காக ரோட்டரி திட்டங்களில் பங்கெடுத்துக் கொண்டிருப்பவர்களைப் பற்றி அறிந்து, அவர்களுடைய கதைகளை உங்கள் சமூகத்தில் எடுத்துரையுங்கள்.

இந்த மாதம், நமது சமூகத்தில் உள்ள இளம் தலைவர்களை அர்த்தமுள்ளத் திட்டப்பணிகளில் வழிநடத்தி, அவர்களுக்கு உந்துசக்தியாக இருப்போம். இது எதிர்காலத்திற்கும் நமக்குப் பிறகு அவர்கள் வாழப்போகிற இந்த உலகத்திற்கும் ஒரு மூலதனம். மேலும் இது அவர்களுடைய வாழ்வையும் நம்மையும் எப்போதும் மேம்படுத்தக்கூடிய பணி.

பேரி ரஸின்
தலைவர், ரோட்டரி இண்டர்நேஷனல்



# இளைஞர்கள் கையில் எதிர்காலம்

ஆசியாவில் தான் உலகில் அதிக எண்ணிக்கையிலான இளைஞர்கள் இருக்கிறார்கள், சிறந்த மற்றும் பாதுகாப்பான விதத்தில் நாளைய உலகை வடிவமைப்பதற்கு பயன்படுத்தப்படாத அபரிதமான ஆற்றல் நமது இளைஞர்களிடம் இருக்கிறது என்பதைக் காட்டுகிறது. 2020ம் ஆண்டில் உலக மக்கள் தொகையில் சுமார் 35 சதவீத இளைஞர்கள் இந்தியாவில் இருப்பார்கள். 18 முதல் 30 வயதில் இருப்பவர்களைத் தான் இளைஞர் என்று ரோட்டரி வர்ணிக்கிறது. இந்தக் கட்டத்தில் தான், அவர்களுள் புதுப்புது யோசனைகள், உற்சாகம், உத்வேகம், துடிப்பார்வம், இலட்சியவாதம் போன்றவை பொங்கி வழியும். மற்றவர்களுக்கு நல்லது செய்யவேண்டும் என்கிற உத்வேகம், நலிவுற்றவர்களின் நலனுக்கு பாடுபடுவது வேரூன்றுகிறது, இதை நன்றாகப் பராமரித்து வந்தால், பிறகு துடிப்பார்வம் கொண்ட வாழ்க்கையாகவே இது மாறிவிடும். சமூக பழக்கவழக்கத்திலும் கண்ணோட்டத்திலும் அர்த்தமுள்ள மாற்றத்தைக் கொண்டுவர நமது இளைய சமுதாயத்தை உந்துசக்தியாக பயன்படுத்தக்கூடிய நேரம் இது. இளைஞர்கள் குறித்த குறுகிய மனப்பான்மையைக் களைந்து, சிறந்த நடைமுறைகளை ஏற்றுக்கொண்டு மாறுபட்ட கோணத்தில் அவர்களால் சிந்திக்க முடியும்.


சமீபத்தில் நான் வாசித்த ஒரு சுவாரஸ்யமான மற்றும் உத்வேகம் கொண்ட ஒரு உண்மைக் கதையை சொல்கிறேன். இந்தக் கதையை மையமாக வைத்து விறுவிறுப்பான திரைக்கதை அமைத்து ஒரு படம் தயாரித்தால், பாலிவுட்டில் தூள்கிளப்பும் ஒரு படமாக இருக்கும்.

கிழக்கு உத்திரப்பிரதேசத்தில் குஷி நகர் மாவட்டத்தில் உள்ள பட்ரானா பகுதியில் பிவாரி தோலான் என்ற சிறிய கிராமம் உள்ளது, அங்கே ஒவ்வொரு நாள் காலையிலும் தீபக் (17) மற்றும் ராஜு (15) என்ற இருவர் தங்களுடைய சாதாரண முடிதிருத்தும் கடையைத் திறந்து, தொழிலை ஆரம்பிப்பார்கள். வாடிக்கையாளர்கள் வழக்கமாக முடிவெட்டுவது, முகம் மழிப்பது மற்றும் சிலநேரங்களில் தலை மசாஜ் செய்வது போன்றவற்றிற்காக இந்த இரண்டு பையன் களிடம் வருவார்கள். ஆனால் உண்மையிலேயே தீபக் என்பவர் ஜோதி, ராஜு என்பவர் நேஹா, இருவரும் சகோதரிகள், இவர்களுடைய அப்பா பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட பிறகு வறுமையில் வாடினர், பிறகு ஐந்து வருடங்களுக்கு முன்பு சொந்தமாக இந்தக் கடையை ஆரம்பித்தனர். சமூக விமர்ச னம் மற்றும் ஆண்களிடமிருந்து தேவையற்ற கவனத்தைத் தவிர்க்க இந்த சகோதரிகள் சிலகாலத்திற்கு முன்பு பொது இடத்தில் ஆண்கள் போல ஆடையணிந்து நடந்துகொள்ள ஆரம்பித்தார்கள். ஆனால் அவர்கள் வளர வளர தங்களை மறைத்துக் கொள்வது சிரமமாக இருந்தது. ஆனால் அந்த நேரத்தில் இது மிகவும் தாமதம். அவர்கள் தங்களுடைய அனைத்து ஆண் வாடிக்கையாளரின் விரும்பத்தகாத செய்கைகளில் இருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள மனஅழுத்தம் ஏற்பட்டு வீட்டுக்கு சென்றிருக்கலாம் அல்லது இதுகுறித்து ஏதாவது செய்திருக்கலாம். சில குற்றச்சாட்டுகள் அந்த பெண்களின் குடும்பத்தினரிடமிருந்தே வந்தது, இது ஆண்களுக்கான தொழில் என்று சொல்லி, இந்தத் தொழிலைச் செய்ய அவர்களுக்கு எதிராக இருந்தனர். ஆனால் அவர்கள் பிழைப்பிற்காகவே தான் வந்தார்கள், தாங்களாக விருப்பப்பட்டு வரவில்லை. தங்கள் குடும்பத்தின் வறுமையைப் போக்க அவர்களுக்கு வேறு வழி தெரியவில்லை. இந்த சகோதரிகள் தத்தளிக்கும் தங்கள் குடும்பத்தை காப்பாற்றியது மட்டுமல்லாது, கடையில் வேலை செய்வதுடன் சேர்த்து பள்ளிக்கும் சென்றனர். ஆனால் அவர்களின் பொருளாதார நெருக்கடியால் ஜோதி பன்னிரெண்டாம் வகுப்புடனும் நேஹா பத்தாம் வகுப்புடனும் நின்று விட்டனர். இந்த கடை உள்ளூருக்கு ஏற்றபடி நன்றாக இருக்கிறது, மேலும் ஒருநாள் ஒரு அழகுநிலையத்தை ஆரம்பிக்கவும் கனவு கொண்டுள்ளனர். இந்த பெண்கள் தங்கள் குடும்பத்தைக் கவனித்துக்கொண்டது மட்டுமல்லாது சமூக குற்றச்சாட்டு உட்பட அனைத்து தடைகளையும் தகர்த்தெறியப் போராடியுள்ளனர். மனோதிடம் மற்றும் உறுதியுடன் இந்த பதின்ம வயதினர் மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளனர். அவர்களின் உத்வேகத்தைப் போற்றுகிறோம்.

பலவழிகளில் இந்த நிஜக்கதை உண்மையாக என் மனதைத் தொட்டது. மனிதாபிமானத்துடன் செய்யக்கூடிய அனைத்து விஷயங்களிலும் இளைஞர்களுடன் ரோட்டரி சங்கங்கள் கட்டாயம் கைகோர்க்கவேண்டும்.

C பாஸ்கர்
இயக்குநர், ரோட்டரி இன்டர்நேஷனல்.

# Sushil Gupta resigns as RI President Nominee



My Fellow Rotarians,
It is with a heavy heart that I announce my resignation as the president-nominee of Rotary International. While it was my dream to serve as your president, my health prevents me from giving my absolute best to you and the office of the president at this time. I believe Rotary deserves nothing less than that from those elected to represent this great organisation of ours.

I have made this difficult decision after much soul-searching and conferring with my family. This is not only a disappointment for us, but I am also keenly aware that this will be a disappointment for many Rotarians in India who were so proud to see someone from our country again named as president. I know that this is what is best for Rotary International.

I have been a Rotarian for more than 40 years and it has given me everything I could ask for. I can think of no higher honour than to have been selected by the Nominating Committee as president of Rotary for the 2020–21 Rotary year. I will continue to proudly serve as a Rotary member and pursue some major initiatives that I wanted to accomplish during my year as president, because I know that we are poised to achieve more great things in the future.

I wish nothing but the best to the candidate who succeeds me as president-nominee and thank you all for the support and encouragement you have shown me in the past year.

*Sushil Gupta*


# Selecting a new President Nominee

Following the announced resignation of president-nominee Sushil Gupta due to health reasons, the 2018–19 Nominating Committee for President will convene electronically to select a new president-nominee. The goal is to conclude the selection process no later than Friday, May 10, 2019.

If no challenges to the nomination are received by May 31, 2019, RI President Barry Rassin will declare the selection of the Nominating Committee to be the new president-nominee.

When the new president-nominee is selected, an announcement will be posted on *Rotary.org*.

Message from RI President



Dear fellow Rotarians,
This is a sad moment for Rotary, as I must inform you that Sushil Gupta has resigned as president-nominee of Rotary International due to health reasons.

This was a difficult decision for Sushil to make, and I understand and fully respect his choice to prioritise his health. He is firmly committed to continuing his work as a valued and respected member of our organisation.

The 2018–19 Nominating Committee for President of Rotary International will convene electronically in the coming weeks to select Sushil's replacement.

I have no doubt we will pick an excellent candidate to serve as RI President for the 2020–21 Rotary year. Please join me in wishing Sushil a complete and rapid recovery, and thank him for his service and dedication to Rotary.

Sincerely,



**Barry Rassin**
President,
Rotary International

NiveshGuru™
SAMPATTI KI UNATTI

# GROW YOUR WEALTH

NiveshGuru, a one-stop solution for all your investment needs.





Nivesh Guru Advisors Private Limited
68-B, Nariman Bhavan, Nariman Point, Mumbai - 400021

+91 22 2288 0808 info@niveshguru.in www.niveshguru.in



RIPE *மார்க் மலோனி*

# இந்திய ரோட்டரி அமைப்பினரின் அடையாளம் தொண்டுள்ளம்தான்: மார்க் மலோனி

ரஷீதா பகத்

*ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மார்க் மலோனி இளம் வயதிலேயே தலைமைப் பொறுப்புகளை ஏற்றுப் பணியாற்றியவர். அலபாமா டெகாடர் ரோட்டரி சங்கத்தின் தலைவராக 31 வயதிலேயே பொறுப்பேற்றார். 34 வயதில் மாவட்ட ஆளுநராகவும் 44 வயதில் ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநராகவும் பதவி வகித்துள்ளார். வழக்குரைஞரான அவர் தன்னார்வத் தொண்டான ரோட்டரி பணி முழுநேரப் பணியாக மாற்றப்பட்டால், இளம் தொழிலதிபர்கள், வணிகர்கள் ரோட்டரி தலைமையை ஏற்க முன் வர மாட்டார்கள் என்கிறார். 21 ஆண்டுகளாக இந்தியாவுடந் தொடர்புள்ள அவர் கோல்கத்தாவில் நடைபெறும் ரோட்டரி நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக கடந்த பிப்ரவரி மாதம் வந்திருந்த அவரது ஓய்வு நேரத்தில் உரையாடினோம். ரோட்டரி நியூஸ் இதழுக்கு அவர் அளித்த நேர்காணல்:*

**இந்தியாவுக்கு 21 ஆண்டுகளாக வருகை புரிகிறீர்கள். இந்தக் காலக் கட்டத்தில் இந்தியாவிலும் இந்திய ரோட்டரியிலும் என்ன மாற்றத்தைக் காண்கிறீர்கள்?**

21 ஆண்டுகளாக இரண்டிலும் மகத்தான மாற்றம் ஏற்பட்டுள்ளது. சுதந்திரம் கிடைத்தது முதல் இந்தியா ஜனநாயக நாடாகவே எப்போதும் திகழ்கிறது. அந்த நிலைப்பாட்டில் மாற்றம் ஏதுமில்லை. அதே சமயம் பொருளாதார முன்னேற்றம், வணிக முன்னேற்றம், கட்டுமானம், நகரங்களின் வளர்ச்சி மற்றும் நவீனமயம் ஆகியவற்றில் இந்தியா மிகச் சிறந்த முன்னேற்றம் கண்டுள்ளது.

ரோட்டரியைப் பொறுத்தவரையில் இந்தியா நமது வேகமான வளர்ச்சி கண்ட நாடு. கடந்த 10 ஆண்டுகளில் ரோட்டரி உறுப்பினர்களின் எண்ணிக்கை 56 சதவீதம் அதிகரித்துள்ளது. பல நிதியுதவிகளை இந்தியாவுக்கு வெளியிலிருந்து பெற்று வந்தாலும், TRFக்கு நன்கொடை அளிப்பதில் இரண்டாவது இடத்தில் இந்திய ரோட்டரி உள்ளது. அது டாலர அளவிலாகட்டும், அதிக நன்கொடையாளர்களாக இருக்கட்டும், ஆர்ச் கிளம்ப் சொசைட்டி (AKS) உறுப்பினர்கள் ஆகட்டும் இந்தச் சிறப்பைப் பெற்றிருக்கிறது இந்திய ரோட்டரி.

**TRF பொறுத்தவரையில் 1.47 கோடி டாலர் (இந்திய மதிப்பில் ரூ.100 கோடி) பெரும் கொடை அளித்த D ரவிசங்கர் பற்றி**

நம்ப முடியாத மாபெரும் செயல் இது. அதை விட என்னவென்றால், தனது சொத்தில் 70 முதல் 85 சதவீதத்தை வாரிக் கொடுத்துள்ளார் ரவிசங்கர். இந்திய ரோட்டரியினைப் பார்க்கும்போது, சேவை என்பது வாழ்க்கையின் ஓர் அங்கமாகக் கருதுகிறார்கள் என்பது இப்போது எனக்குத் தெரிகிறது. இந்தியர்கள் வேலை செய்கிறார்கள், தொழில் புரிகிறார்கள், வணிகம் நடத்துகிறார்கள். ஆனால், சேவைகளுக்கும் நேரத்தை ஒதுக்கிச் செயல்படுகிறார்கள். அமெரிக்காவில், மேலை நாடுகளில் எல்லாம் நாங்கள் குறுகிய கால சேவைத் திட்டங்களையே மேற்கொள்கிறோம். இந்தியாவிலோ "வாழ்க்கை வெகுமதி " (The Gift of Life), "ஆரோக்கியமான சின்ன இதயங்கள் (Healthy Little Hearts) போன்றமிகப் பெரிய திட்டங்களில் பல ஆண்டுகள் ஈடுபடுகிறார்கள். சூரத்தில் ஆறு திட்டங்களின் செயல்பாடுகளைப் பார்வையிட்டேன். சில திட்டங்கள் ரோட்டரியின் உதவி இல்லாமலேயே தொடர்ந்து சீராக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. சில திட்டங்களில் ரோட்டரி அமைப்பினர் வாரந்தோறும் அல்லது மாதந்தோறும் என்று ஈடுபடுகிறார்கள். பள்ளிகள், திறன் பயிற்சி மையங்களை எப்படித்தான் இயக்குகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இது மாதிரியெல்லாம் அமெரிக்காவில் திட்டங்களைச் செயல்படுத்துவது அபூர்வம்.

**இந்தியாவில் நீண்ட காலத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு பல வாய்ப்புகள் உள்ளன; அதற்கான தேவையும் மிகப் பெரிய அளவில் இருக்கிறது.**

நாங்கள் போதிய அளவு செய்யவில்லை என்று வரும்போது அதைத்தான் குறிப்பிட விரும்பு கிறேன். நாங்கள் மாறுபட்ட சமுதாய மக்கள் நலக் கட்டமைப்பின் கீழ் இருப்பதால் எங்களுக்கு அப்படி வாய்ப்புகள் கிடைப்பதில்லை. இந்தியாவின் சில கிராமங்களில் சிறுமிகளுக்கு சானடரி நேப்கின்களை வழங்கும் இயந்திரங்கள் வைக்கப் பட்டுள்ளன என்று RI இயக்குநராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட கமல் சங்கவி என்னிடம் கூறியுள்ளார். அதையெல்லாம் அமெரிக்காவில் நாங்கள் நினைத்துக் கூட பார்க்க முடியாது.

ஒரு முறை இந்தியாவில் எரியூட்டு மயானம் அமைப்பதற்கு எங்களிடம் உதவி கோரினார்கள். இது உங்கள் நாட்டில் பெரிய தேவையாக கருதப்படுகிறது. அமெரிக்க ரோட்டரியினருக்கு இதனை முக்கியம் என்று கருதவில்லை. வேறு ஏதாவது திட்டத்திற்கு உதவுகிறோம் என்று கூறிவிட்டனர்.

**பாலின வேறுபாட்டைப் பொறுத்த வரையில் இந்தியா ரோட்டரியின் இலக்கான 22 சதவீதத்தை இன்னும் எட்டவில்லை. RID 3250வில் மகளிர் 37 சதவீதம் என்று காலையில் அறிந்தோம். ரோட்டரியின் மூத்த தலைமை இடங்களில் கூட ஆண்களே இருக்கிறார்கள். இந்தியாவிலிருந்து RI இயக்குநராக ஒரு பெண் கூட வரவில்லை.**

ஆமாம், ஆனால் இங்கு மட்டும் தான் என்று இல்லை. ஆப்பிரிக்காவில் கூட பெண் இயக்குநர் இல்லை. ஆசியாவிலேயே தாய்லாந்தில் சாவாலாக் ரத்தன்விச் தான் ஒரே பெண் இயக்குனர்.

**இந்திய ரோட்டரியில் பெண்களை அதிகம் கொண்டு வருவதற்கு என்ன யோசனை கூறுகிறீர்கள்?**

அமெரிக்காவில், பெண்களிடம் ஒரு சிறப்பு வேண்டுகோளை முன் வைத்தால், அது பாலின வேறுபாடாகக் கருதப்படும். எனவே, ஆண்களை எப்படி அணுகுகிறோமோ அதே மாதிரிதான் பெண்களையும் அணுக வேண்டும். யார் எத்தகைய சூழலில் இருந்தாலும் சந்திக்க வேண்டும். இளைஞர்களை அதிகம் ஈடுபடுத்த வேண்டும் என்பது குறித்து கவலைப்படுகிறேன். தங்களது தொழிலிலிலும் வணிகத்திலும் ஈடுபட்டு வருவோரையும் ரோட்டரியின் தலைவர்கள் எளிதில் அடைவது குறித்தும் உறுதி செய்ய வேண்டும்.

இன்று காலையில் உணவகத்துக்குச் சென்றிருந்தோம். என்னுடன் புகைப்படம் எடுத்துக் கொள்ள சில பெண்கள் விரும்பினர். அது அனைத்து மகளிர் ரோட்டரி சங்கம் என்பதில் ஒவ்வொருவரும் பெருமைப்பட்டுக் கொண்டனர். அது எனக்கு ரொம்ப கூச்சமாக இருந்தது. பாலின அடிப்படையில் வேறுபடுத்தக் கூடாது என்று எங்களது அரசியல் அமைப்புச் சட்டம் வலியுறுத்துகிறது. அவர்களுடன் நட்பு கொள்ள விரும்புகிறேன். இது கலாசாரம்.

இந்தியாவில் விமான நிலையத்தில் பெண்களுக்குத் தனி வரிசை, ரயில்களில் பாதுகாப்புக்காக பெண்களுக்கென தனி பெட்டி என்று உண்டு. இதுவும் கலாசாரம். நான் கொஞ்சம் பாரபட்சம் பார்ப்பேன். அதைக் கடைப்பிடிக்கிறேன். அது சரியாகிவிடாது.



**பெண்களை ரோட்டரியில் ஈடுபடுத்த என்ன செய்யவேண்டும் என நினைக்கிறீர்கள்? அவர்களுக்குத் தனி திறன் உள்ளதா, அவர்களுக்கு கவனம் அதிகம் உள்ளதா, அல்லது சேவை மனப்பான்மை அதிகமா? அல்லது அவர்கள் எதையும் ஒரே மாதிரி செய்பவர்களா.**

அவர்கள் ஒரே மாதிரி

# மலோனி — ஓர் பார்வை



*ஜப்பானில் ஒரு உணவகத்தில் மலோனி தம்பதியனர்.*

**உங்கள் ரோட்டரி பயணத்தில் கேய்யின் பங்களிப்பு:** *கேய் அலபாமா, டெகாட்டர் டேபிரேக் ரோட்டரி சங்கத்தின் ஒரு ஸ்தாபக உறுப்பினர். 06 மார்ச் 1996 அன்று அவர் ரோட்டரியில் இணைந்தார். (எனக்கு நன்றாக ஞாபகத்தில் இருக்கிறது, ஏனெனில் அதுதான் ஸ்தாபக தினம்.) ரோட்டரிக்கு (அல்லது வாழ்வில் மற்ற விஷயங்கள்) எனது சிறந்த யோசனைகளில் சில கேயிடமிருந்து கிடைத்தது தான். உண்மையிலேயே நாங்கள் ஒரே குழு தான். தொடர்ந்து அவருடைய ஆலோசனையை நான் எதிர்பார்க்கிறேன்.*

**மதம்:** *நான் ரோமன் கத்தோலிக். வார இறுதியானால், நான் எங்கிருந்தாலும் முடிந்தால், ரோமன் கத்தோலிக்க பிரார்த்தனைக் கூட்டத்தில் பங்கேற்பது குறித்து கூறிவிடுவேன். நவம்பரில் இங்கே வந்தபோது, தெற்கு மும்பையில் கதீட்ரல் தேவாலயத்தில் பிரார்த்தனையில் பங்கேற்க குலாம் ஏற்பாடு செய்தார். அங்கு கார்டினல் கிரேஷியஸை (Cardinal Gracious) சந்தித்தேன்.*

**விருப்பமான உணவு:** *இத்தாலிய உணவு வகை.*

**இசை:** *பாரம்பரிய இசை.*

**திரைப்படங்கள்:** *நான் உண்மையில் திரைப்படம் பார்ப்பதில்லை.*

**வாசிப்பு:** *நான் புத்தகம் குறைவாகப் படிப்பவன். என் தொழிலுக்குத் தேவையானவற்றை நிறைய படிப்பேன். செய்தித்தாள்கள், இதழ்களைப் படிப்பேன்.*

**பயணச் சோர்வு:** *இப்பொழுது நான் நிறைய பயணம் செய்ய வேண்டும். சோர்வு என்பதைப்பற்றி நினைக்கக் கூட முடியாது. எனக்கு வேறு வேறு நேர மண்டலங்களிலுள்ள நாடுகளுக்கு செல்லும் பொழுது தான் கடினமாக இருக்கும். அவ்வாறு பயணித்தப் பின் உடனே என்னை மேடையில் பேசவோ, உட்காரவோ வைத்தால் என்னால் என் சோர்வை கட்டுப்படுத்த முடியாது. அப்பொழுது முன் வரிசையில் அமர்ந்திருக்கும் கேய் 'மார்க், தூங்காதே' என்று கூறிக் கொண்டே இருப்பார். ஆனால் நான் மேடையில் இல்லாமல் முன் வரிசையில் அமர்ந்து கலந்துக் கொள்வது சிறிது எளிதாக இருக்கும்.*

*ரோட்டரிக்கான கனவு; அடுத்த 5, 10 ஆண்டுகளில் எதைக் காண அவர் விரும்புகிறார்: ரோட்டரி உறுப்பினர்கள் எண்ணிக்கையில், சேவைகளில் அளவில், செயல் பாட்டில், TRFக்கு அளிக்கும் கொடையில் மேம்பட்டிருக்க வேண்டும் என்பது என் கனவு. அதைத்தான் அடுத்த ஐந்தாண்டுகளில் நாம் சாதிக்க வேண்டும். இந்த ஆண்டுக்காக நான் வகுத்துள்ள குறிக்கோள்கள் 2020ம் ஆண்டு ஜூன் 30ம் தேதி மதிப்பிடப்பட இயலாது. ஆனால், 2025ம் ஆண்டு ஜூன் அல்லது 2030ம் ஆண்டு ஜூனில் மதிப்பிடப்படும். நமது போக்குகளை நாம் மாற்றிக் கொள்ள முனைகிறோம். அது ஒரு ரோட்டரி ஆண்டிலோ, ஒரே இரவிலோ ஏற்படாது.*

செய்பவர்கள் என்று நான் நினைக்கவில்லை. ஆண்களைப் போலவே பெண்கள் பல்வேறு வகையான திறன்களைக் கையாள்பவர்கள். அமெரிக்காவில் பெண் உறுப்பினர்கள் இல்லாமல் நம் உறுப்பினர் அளவு என்னாவது?

**அமெரிக்காவில் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை?**
சராசரி விகிதமான 22 சதவீதத்தை விட அதிகம் இல்லை.

**பெண்கள் ரோட்டரிக்கு வருவது வலுவூட்டியுள்ளதா? முழுமையாக்கியுள்ளதா?**
நிச்சயமாக. ரோட்டரி அமைப்பு அந்தந்த சமுதாயத்தைப் பிரதிபலிப்பதாக இருக்கவேண்டும். பெண்கள் பலர் நிர்வாகிகளாக, வழக்குரைஞர்களாக, மருத்துவர்களாக இருக்கிறார்கள். சமுதாயத்தைப் பிரதிபலிப்பதாக இருந்தால், பெண்களை எப்படி தவிர்க்க முடியும்? இந்தியாவில் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு யோசனை கூற எனக்குப் போதிய விஷயம் தெரியாது.

**ரோட்டரி உறுப்பினர் எண்ணிக்கை அதிகரிப்பிலோ அல்லது TRF நன்கொடை அளிப்பதிலோ இந்திய ரோட்டரி உலகையே கலக்குகிறது. எனினும்,வெளிப்படைத் தன்மை போதாமை, கணக்கு விதிகள் பின்பற்றுவது போன்ற சிலவற்றில் குறைபாடுகள் உள்ளன. இந்தியாவில் ரோட்டரியை மேம்படுத்த என்ன வழிகள்?**


RIPE *மலோனி இந்தியக் குழந்தைக்கு போலியோ சொட்டு மருந்து கொடுக்கிறார்.*

பண விவகாரத்தில் ஒழுக்கம் பிரச்சினையாகத் தான் உள்ளது. இருந்தாலும் விதி விலக்காகக் கருதப்படுகிறது. உலகின் இதர ரோட்டரி அமைப்புகளை ஒப்பிடுகையில் இந்திய ரோட்டரியில் அதிக அளவு விதி விலக்குகள் இருக்கின்றன. இந்தியா எப்படி


*மும்பையில் கேய் மலோனி, பினோத்தா பானர்ஜியுடன் பேசிக் கொண்டிருக்க, அருகில்* RIPE *மலோனி மற்றும்* PRIP *கல்யாண் பானர்ஜி.*

மேம்பாடு காண்பது என்பது பற்றி எனக்குச் சரியாக கூற இயலாது. இங்கு நிறைவேற்றப்படும் சேவை மகத்தானது. இந்தியாவுக்கு என்ன யோசனை கூறுகிறார்கள் என்று கேட்பது, அமெரிக்காவுக்கு வெளியே இருப்போர் அமெரிக்க அதிபர் பதவிக்கு டொனால்டு டிரம்ப் வரவேண்டுமா, ஹிலாரி கிளிண்டன் வரவேண்டுமா என்று கேட்பதைப் போல். எதுவாக இருந்தாலும் நன்றி, எங்களது பாணியில் செய்கிறோம். எங்களுக்கே ஏராளமாக பிரச்சினைகள் இருக்கின்றன என்பதுதான் இதற்கு பதில்.

**‘தி ரொட்டேரியன்’ அளித்த பேட்டியில் நீங்கள் ரோட்டரி என்பது தனிநபர்களின் ஐ.நா. சபை போன்றது என்று குறிப்பிட்டிருந்தீர்கள். அது மிகவும் பொருத்தமான வருணனை தான். அப்படி முன்பு எப்போதாவது கூறப்பட்டிருக்கிறதா, நான் அறியவில்லையே.**

எனக்குத் தெரியாது.

**உங்களது கருத்தாக்கத்தை நடைமுறைப்படுத்துவது எவ்வளவு கடினம்?**

ஓ, கருத்தாக்கம் (Theme) கடினமல்ல. அதற்கேற்ப அங்கியை (Tie) அமைப்பதுதான் கடினம். என்னைப் பொறுத்தவரை ரோட்டரி என்பதே இணைப்புதான்! ரோட்டரி தலைவர்களாகிவிட்ட பல தனி நபர்கள் நீண்டகாலமாக அதைப் பற்றி யோசித்து வருகிறார்கள். நான் எப்போதாவது ரோட்டரி தலைவராகிவிட்டால், என கருத்தாக்கமாக எது இருக்கும் என்று அவ்வப்போது என் மனத்தில் தோன்றுவதுண்டு. அப்படித் தோன்றுவதை ஒதுக்கிவிட்டு, எது நடக்கும் என்று முன்கூட்டியே கருதுவதில்லை. வெளிப்படையாகச் சொன்னால், நான் இந்தப் பதவிக்குப் பரிந்துரைக்கப்படும் வரையில் கருத்தாக்கம் குறித்து நான் எதையும் சிந்திக்கவில்லை. ஆகஸ்ட் மாதம் முதல் திங்கள்கிழமைதான் நான் நியமனத்துக்குப் பரிந்துரைக்கப் பட்டேன். அது அக்டோபர் 1ம் தேதி உறுதியாக்கப்பட்டது. ஒரு வாரத்தில் எனக்குக் கருத்தாக்கம் தோன்றியது.

# மலோனியின் முன்னுரிமைகள்



RIPE மலோனி மற்றும் கேய் 1990 ல் நைஜீரியாவில் பள்ளி ஒன்றை பார்வையிட்ட பொழுது.

*மார்க் மலோனி முக்கிய முன்னுரிமைகளைக் கொண்டிருக்கிறார். அதைத் தொளிவாகவும் குறிப்பிடுகிறார்.*

*முதல் முன்னுரிமை தற்போதைய ரோட்டரி சங்கங்களை வலுப்படுத்தி, புதிய அணுகுமுறையுடன் ரோட்டரி சங்கங்களை உருவாக்கி மேம்படுத்த வேண்டும். ரோட்டரி சமுதாயத்திற்கு நிறைய செய்கிறது. இருந்தாலும் இன்னும் பல விஷயங்கள் இடம் பெறவில்லை. அவற்றையும் கவனிக்க வேண்டியுள்ளது. அவற்றை யெல்லாம் செய்யவேண்டும்*

*இரண்டாவது, ரோட்டரி பணிகள் குடும்பத்துக்குச் சாதகமாகவும் அமைய வேண்டும் என்பதாகும். அப்படித்தான் நானும் கேயும் தொடக்கத்திலிருந்தே ரோட்டரியில் இருந்து வருகிறோம். சங்கத் தலைவராக இருந்தபோது எனக்கு வயது 31. மாவட்ட ஆளுநராக 34 வயதில் பொறுப்பேற்றேன். எங்களுடன் எங்களது மகள்களையும் அழைத்துச் சென்றோம். இரு மகள்களை நாங்கள் பெற்றெடுத்தோம். பெற்றோருக்கு நேர்ந்த சோகத்தால் ஆதரவில்லாத குழந்தையை மூன்றாவது பெண்ணாகத் தத்தெடுத்தோம் என்றார் மலோனி.*

*மூன்றாவது முன்னுரிமை ரோட்டரி தலைமை தங்களது வேலைகளில், தொழில்களில் முழுமையாக ஈடுபட்டு வருவோரும் எளிதில் அணுகக் கூடியதாக அமைய வேண்டும் என்பது தான். இன்டர்நேஷனல் அசெம்பிளியில் நான் பேசிய பேச்சுக்கு ஏகப்பட்ட கைதட்டல் வந்தது ஒரு சந்தர்ப்பத்தில். அங்கு கூடியிருந்த மாவட்ட ஆளுநர்களிடம் பேசியபோது, நீங்கள் ஒவ்வொரு ரோட்டரி சங்கத்துக்கும் போக வேண்டியதில்லை. உலகின் பிற நாடுகளை விட இந்தியாவில் மாவட்ட ஆளுநர்கள் கொண்டாடப்படுகிறார்கள். இது சிரமமானது.*

*அமெரிக்காவில் ஊழியத்திலிருந்து ஓய்வுப்பெற்றப் பின்தான் ஆளுநராக விரும்புவார்கள். அப்பொழுதுதான் அவர்களால் முழுமூச்சுடன் ரோட்டரியுடன் செயலாற்ற முடியும். இது போன்றவற்றால் தான் நாம் பாரம்பரியம் மிக்க ஆளுநர்களை எதிர்பார்க்கிறோம் என்றார் மார்க்.*

*ஆனால், இவையெல்லாம் ஒரே இரவில் நடந்துவிடாது. மாவட்ட ரோட்டரி அமைப்புகள், அது சரி என்று கூறாது. “பரவாயில்லை, நாம் தொகுப்புக் கூட்டங்களை நடத்துவோம். அல்லது ஆளுநர் சில நிகழ்வுகளுக்குத்தான் வருவார்” என்று கூறுவார்கள். இது கலா சார மாற்றத்துக்கு வழியமைக்கும். அத்தகைய கலாசார மாற்றங்கள் திடீரென ஏற்பட்டுவிடாது என்றார் மார்க் மலோனி.*

*பணி நிறைவு சமயத்தில் மலோனியின் கடைசி முன்னுரிமை ஐ.நா. சபையுடன் ரோட்டரியின் நல்லுறவை வலுப்படுத்துதல் ஆகும். காரணம், ஐ.நா. சபை தனது 75ஆவது ஆண்டினை கோலாகலமாகக் கொண்டாட இருக்கிறது என்று மார்க் மலோனி கூறினார்.*





*மேலே: RIPE மலோனி தன் வளர்ப்பு மகள் சுசென் க்ரியருடன்.*

*இடதுபுறம் : RIPE மலோனி மற்றும் கேய் இரு மகள்கள் - ஃபிளிஸ் மற்றும் மார்கரெட்டுடன்.*



ரோட்டரி அனைவரையும் இணைக்கிறது. இணைப்பு அதன் ஓர் அங்கமாகும்.

**என்ன மாதிரியான குடும்பச் சூழ்நிலையில் நீங்கள் வளர்ந்தீர்கள்?**

நான் ஐரிஷ் சமுதாயத்தில் வளர்ந்தேன். எனக்குள் அனைத்து சமுதாயக் கூறுகளும் உண்டு. நான் ஆறாவது ஐரிஷ் தலைமுறையைச் சேர்ந்தவன். அயர்லாந்துடன் எனக்கு தொடர்பு இல்லை. நான் சமுதாயம் என்று சொல்வது 900 விவசாயக் குடும்பங்களைத் தான். அவர்களது பெயர்கள் மலோனி, டஃப்பி, மேக்யுர் என ஐரிஷ் பெயர்களாகத் தான் இருக்கும். குழந்தைப் பருவத்தில் உயர் நடுத்தர வர்க்கச் சூழலில் இருந்தேன். எங்களது குடும்பம் வெற்றிகரமான விவசாயக் குடும்பம் ஆகும். எனது பெற்றோர்கள்,



அவர்களது தலைமுறை உறவினர்கள் கல்லூரி, பல்கலைக்கழகப் படிப்பு முடித்தவர்கள். எப்படியானாலும் தொடர்பு என்பது எங்கள் குடும்பத்தின் மூலமாகும். அமெரிக்காவில் பலருக்குத் தங்களது மாமன், மச்சான் யார் என்று கூடத் தெரியாது. பார்த்திருக்கக் கூட மாட்டார்கள். ஆனால், எங்களது குடும்பத்தில் எங்களது அத்தை மகன், மகள், மாமன் மகன், மகள் எல்லோரும் தெரியும். அதைப் போல் எங்களது குழந்தைகளுக்கும் அத்தகைய உறவினர்கள் தெரியும்.

**சட்டம் படிக்க வேண்டும் என்று ஏன் முடிவு செய்தீர்கள்?**

11, 12 ஆவது வயதிலேயே சட்டம் படிக்க வேண்டும், வழக்கரைஞராக ஆசைப்பட்டேன்.

**ஏன்?**

எனக்குத் தெரியாது, ஒரு வேளை எழுத்தாளர் பெரிமேசன் (நாவல்கள்) காரணமாக இருக்கலாம்.

**எதிர்கால இலக்கு (Future Vision) குறித்து கூறுங்களேன்.**

2005ம் ஆண்டு பிப்ரவரி முதல் 2015ம் ஆண்டு ஜூன் வரையில் திட்டத்தின் தொடக்கம் முதல் இறுதி வரையில் ஈடுபட்ட ஒரு சிலரில் நானும் ஒருவன். 2005,

*இடது : மகாராஷ்த்திரம் அமராவதியில் ஃபேடா என்னும் தலைபாகை அணிந்து RIPE மலோனி.*

*கீழே : சூரத்தில் மனநலம் குன்றிய குழந்தைகளுக்கான பள்ளியில் RIDE பரத் பாண்டியாவுடன் RIPE மலோனி மற்றும் கேய்.*



# காதல் மலர்கள்




RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மார்க் மலோனி தனது மனைவி கேயைச் சந்தித்து காதலிக்கத் தொடங்கியது எப்படி? மலோனியும் கேயும் டென்னிஸியில் உள்ள வண்டர்பில்ட் சட்டப் பள்ளியில் வகுப்புத் தோழர்கள். 1977ம் ஆண்டு அக்டோபர் 8ம் தேதி அவளைக் காதலிக்கத் தொடங்கினேன். நான் பணியாற்றிய சட்ட அலுவலகத்தில் விருந்து நடைபெற்றது அதற்கு கேயை என்னுடன் வருமாறு அழைத்தேன். நான் அழைத்த நிகழ்ச்சியில் பங்கேற்க ஆர்வத்துடன் இருப்பதாகக் கூறிய அவள் முன்கூட்டியே வேறு நிகழ்ச்சியில் பங்கேற்கத் திட்டமிட்டு விட்டதாகச் சொன்னாள். அதைத் தவிர்க்க முடியாது என்று கூறிவிட்டாள். என்றார் மலோனி. இருவரும் 6 மாதம் காதலித்தினர். கே தனது குடும்பத்தினருக்கு அறிமுகம் செய்ய மலோனியை அழைத்துச் சென்றார். எந்த ஒரு பெண்ணும் என்னைத் தன் வீட்டுக்கு அழைத்ததில்லை. கேயின் குடும்பத்தினருடன் 1978 புத்தாண்டு தினத்தை கோலா கலமாகக் கொண்டாடினோம். அதையடுத்து, பிப்ரவரியில் கே என் பெற்றோரைச் சந்தித்தாள் என்றார்.

கேயை என் பெற்றோருக்கு அறிமுகம் செய்து வைக்க அழைத்துச் சென்றேன். துரதிருஷ்டம் என்னைப் பற்றிக் கொண்டது. அதையடுத்து என் பெற்றோர்கள், சாலை விபத்தில் எதிர்பாராமல் இறந்துவிட்டனர். இதெல்லாம் 41 ஆண்டு களுக்கு முன் நடந்தது.

இருவரும் மூன்றாண்டு சட்டப் படிப்பில் இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டிருந்தனர். இன்னும் 18 மாதம் இருந்தது.

அப்போது எனக்கு அவசரம் இல்லை. ஆறு மாதம் கழித்து திடீரென எதிர்பாராமல் என் காதலை அவளிடம் கூறினேன். அது திட்டமிட்டதல்ல. ஒரு விருந்துக்குச் சென்றிருந்தபோது நடந்தது. என்னிடம் திருமண மோதிரம் கூட இல்லை. கேயுடன் பேசிக் கொண்டிருந்தபோது, “தெளிவாகப் பேசு” என்று அறிவுரை கூறினாள். 6 மாதம் காதலித்தோம். நிச்சயமாகி 14 மாதம் காத்திருந்தோம் என்றார்.

மார்க் மலோனியை நான் பேட்டி கண்டது காதலர் தினத்தன்று (பிப்ரவரி 14).

நான் இந்தியா வருவதற்கு முன் அவளுக்கு காதலர் தின வாழ்த்து தபால் மூலம் அனுப்பினேன். வாழ்த்தினை நேரடியாகக் கூறாமல் அஞ்சல் பெட்டியில் வாழ்த்து அட்டையைப் போட்டேன். அது அவளுக்கு ஒரு நாள் கழித்துப் போய்ச் சேர்ந்தது.

இதில் என்ன விசேஷம் என்றால், இரு தினங்கள் கழித்து கேயின் பிறந்த நாள் வந்தது. கேயுக்கு இரு பூங்கொத்துகளை வழங்குவது என்று திட்டமிட்டார். அவள் வீட்டுக்குத் திரும்பும் போது இரண்டு பூங்கொத்துகள் கிடைத்தன. இதுதான் RI தலைவராகப் பொறுப்பேற்க இருப்பவரின் அக்கறை.



PRIP ராஜேந்திர சாபூ மற்றும் உஷா, சாபூ RI தலைவராக அலபாமா சென்றபோது, RIPE மலோனி மற்றும் கேயுடன்.





RIPE *மலோனி தன் குடும்பத்தாருடன்.*




பிப்ரவரி மாதம் 2004-05ஆம் ஆண்டுக்கான முதலாண்டு அறங்காவலராக இருந்தேன். அப்போது, அறங்காவலர்கள் பிப்ரவரி மாதம் அரை நாள் முழுவதும் ஃபவுண்டேஷன் செயல்பாட்டில் என்னவெல்லம் மாற்றத்தைக் கொண்டு வரலாம் என்று தீவிரமாக விவாதிப்போம். அப்போது கார்லோ ரவிஸ்ஸா (Carlo Ravizza) அறங்காவல் குழுத் தலைவராக இருந்தார். அதன் பிறகு, எதிர்காலத் தொலைநோக்கு கமிட்டியில் இணைக்கப்பட்டேன். அக்கமிட்டி கலைக்கப்படும் வரையில் பணியாற்றினேன்.

### ரோட்டரியின் எந்த அம்சத்தை நீங்கள் பெரிதும் ரசிக்கிறீர்கள்?

மக்களையும் தொடர்புகளையும் தான். மக்களை இணைப்பது என்பது பல விஷயங்களைக் கூறுகிறது. திட்டங்களுக்காக இணைத்தல், நட்புக்காக இணைத்தல், ஃபெலோஷிப்புக்காக இணைத்தல் என பல உண்டு. கமல் சங்வி, சேகர் மேத்தா போன்ற நண்பர்களைச் சந்தித்துப் பேசுதல் போன்றவற்றை ரசிப்பேன். சேகரை 10, 15 ஆண்டுகளாக அறிவேன். அவர் கோல்கத்தாவில் உள்ள தனது வீட்டுக்கு அழைத்துள்ளார். என் மனைவி கேய்க்குத்தான் ஏமாற்றம். நண்பர்கள் வீடுகளுக்குச் செல்வதை அவள் விரும்புவாள். சிலர் தங்களது வீடுகளுக்கு மற்றவர்களை அழைத்துச் செல்வதில்லை. அவர்களுடன் ஓட்டல்களில்தான் சந்தித்துப் பேசுவோம்.

### இந்தியாவில் ரோட்டரியில் எதை மிகவும் அனுபவித்து ரசிக்கிறீர்கள்?

அதற்கும் எனது பதில் மக்கள் தான். என் மனைவி கேய் வண்ணங்களை விரும்புவாள். ரோட்டரி நியூஸ் இதழில் ஜெய்ஸ்ரீ எழுதிய கட்டுரையை அவள் கொடுத்தாள், படித்துப் பார்த்தேன். ரசித்தேன். பல வேறுபாடுகளுக்கு இடையிலும் இந்தியா ஒரே மாதிரி இருப்பதைக் கவனித்தேன். இன்றைக்கு எனது பேச்சில் குறிப்பிட்டபடி, உங்களைப் போலவே நீங்கள் நினைத்திருக்காத வகையில் வித்தியாசமாக இருப்போரையெல்லாம் இணைக்கவேண்டும்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத், ஜெய்ஸ்ரீ மற்றும் ரோட்டரி இன்டர்நேஷனல்

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்

# District Wise TRF Contributions as on March 2019

(in US Dollars)

| District Number | APF | PolioPlus | Other Restricted | Endowment Fund | Total Contributions | EREY Donors (in numbers) | EREY % |
|---|---|---|---|---|---|---|---|
| **India** | | | | | | | |
| 2981 | 44,002 | 11,240 | 0 | 8,000 | 63,242 | 227 | 5.0 |
| 2982 | 44,648 | 5,404 | 0 | 243 | 50,295 | 270 | 9.4 |
| 3000 | 12,744 | 1,000 | 132,766 | 47,983 | 194,493 | 20 | 0.4 |
| 3011 | 100,165 | 5,668 | 32,153 | 29,930 | 167,915 | 119 | 3.6 |
| 3012 | 71,450 | 150 | 312,461 | 8,800 | 392,860 | 106 | 3.1 |
| 3020 | 19,318 | 72,865 | 2,625 | 5,000 | 99,808 | 70 | 1.8 |
| 3030 | 15,752 | 0 | 0 | 0 | 15,752 | 6 | 0.1 |
| 3040 | 2,819 | 0 | 29,950 | 0 | 32,769 | 4 | 0.2 |
| 3053 | 59,205 | 0 | 0 | 0 | 59,205 | 37 | 1.3 |
| 3054 | (17,179) | 0 | 121,343 | 0 | 104,164 | 38 | 0.7 |
| 3060 | 62,288 | 1,326 | 155,228 | 129,269 | 348,111 | 738 | 17.9 |
| 3070 | 90,072 | 315 | 4,792 | 0 | 95,178 | 326 | 11.3 |
| 3080 | 78,126 | 15,319 | 15,657 | 5,000 | 114,102 | 66 | 2.1 |
| 3090 | 37,000 | 0 | 0 | 0 | 37,000 | 106 | 5.3 |
| 3100 | 21,795 | 475 | 0 | 0 | 22,270 | 82 | 4.9 |
| 3110 | 30,488 | 3,027 | 34,863 | 0 | 68,378 | 50 | 1.3 |
| 3120 | 61,822 | 0 | 217,897 | 0 | 279,720 | 69 | 2.2 |
| 3131 | 335,852 | 21,657 | 346,944 | 43,203 | 747,656 | 926 | 18.1 |
| 3132 | 18,119 | 310 | 17,129 | 60,100 | 95,658 | 39 | 1.1 |
| 3141 | 545,596 | 10,911 | 1,049,268 | 76,990 | 1,682,765 | 681 | 13.6 |
| 3142 | 281,522 | 75 | 246,041 | 0 | 527,639 | 545 | 17.3 |
| 3150 | 79,168 | 4,613 | 67,276 | 338,467 | 489,523 | 507 | 14.6 |
| 3160 | 64,464 | 1,580 | 0 | 9,277 | 75,321 | 133 | 5.5 |
| 3170 | 74,948 | 3,231 | 71,833 | 0 | 150,012 | 332 | 6.3 |
| 3181 | 133,760 | 938 | 0 | 103 | 134,801 | 521 | 17.3 |
| 3182 | 86,174 | 100 | 11,367 | 0 | 97,641 | 399 | 12.7 |
| 3190 | 105,098 | 4,397 | 117,087 | 1,509,570 | 1,736,153 | 802 | 16.8 |
| 3201 | 111,526 | 15,598 | 221,675 | 0 | 348,799 | 201 | 3.9 |
| 3202 | 22,062 | 27,762 | 35,563 | 0 | 85,387 | 51 | 1.1 |
| 3211 | 50,082 | 2,818 | 0 | 1,515 | 54,415 | 202 | 4.6 |
| 3212 | 103,749 | 6,758 | 5,250 | 67,002 | 182,759 | 115 | 2.9 |
| 3231 | 26,818 | 2,480 | 7,286 | 6,528 | 43,112 | 232 | 7.8 |
| 3232 | 182,995 | 2,078 | 164,000 | 1,000 | 350,073 | 234 | 5.5 |
| 3240 | 49,959 | 421 | 7,374 | 0 | 57,754 | 112 | 3.9 |
| 3250 | 24,267 | 1,834 | 11,216 | 0 | 37,317 | 44 | 1.2 |
| 3261 | 15,211 | 1,100 | (1,492) | 3,000 | 17,820 | 22 | 0.9 |
| 3262 | 27,440 | 1,000 | 3,900 | 5,413 | 37,753 | 100 | 3.1 |
| 3291 | 107,922 | 206 | 95,428 | 51,800 | 255,356 | 228 | 6.3 |
| **India Total** | **3,181,246** | **226,656** | **3,536,881** | **2,408,192** | **9,352,975** | **8,760** | **6.3** |
| 3220 **Sri Lanka** | 75,759 | 2,975 | 13,676 | 8,000 | 100,410 | 142 | 7.9 |
| 3271 **Pakistan** | 34,947 | 27,799 | 2,275 | 0 | 65,021 | 27 | 1.9 |
| 3272 **Pakistan** | 21,408 | 2,141 | 0 | 0 | 23,548 | 29 | 1.0 |
| 3281 **Bangladesh** | 138,862 | 3,000 | 71,618 | 17,696 | 231,176 | 238 | 4.4 |
| 3282 **Bangladesh** | 53,595 | 5,065 | 0 | 3,000 | 61,660 | 200 | 5.0 |
| 3292 **Nepal** | 162,901 | 24,211 | 111,762 | 25,000 | 323,874 | 329 | 7.5 |
| **South Asia Total** | **3,668,718** | **291,847** | **3,736,212** | **2,461,889** | **10,158,666** | **9,725** | **6.1** |
| **World Total** | **85,366,098** | **20,884,268** | **14,320,109** | **19,778,783** | **140,349,258** | | |

Source: RI South Asia Office

# Organisation Development Consultants

WE ADD VALUE TO YOUR EFFORTS

Estd. 22-02-2002

TOWARDS EXCELLENCE ®

## Hyderabad

Visit us at : www.odchyd.com

**Mr P Seshadri**
**Management Consultant**

Introduces New Services for Micro, Small & Medium Level Enterprises & Start up's on

# ORGANISATION DEVELOPMENT

## - Building Sustainable Organisations

Services could be availed as per need and maturity of the organisation

### BASIC Package
(3 Months)

**Professional Fees : Rs 2 Lakhs**

Streamlining Systems / Processes in the organisation to meet business requirements

Organisation Development Plan to be provided for one year w.r.t the following aspects based on assessments

- Customer Focus
- Leadership
- Engagement of People
- Process Approach
- Improvements
- Evidence based Decision Making
- Relationship Management

### SUPREME Package
(6 Months)

**Professional Fees : Rs 5 Lakhs**
**(Includes BASIC Package Services)**

Business Excellence Assessments w.r.t

- Leadership
- Strategy Development & Deployment
- People Management
- Resources & Infrastructure Management
- Process Management
- Customers Results
- People Results
- Social Results
- Business Results

Formulating Blue Print for Change Management within the organisation for one year and training assistance in initiating implementation of changes

### PREMIUM Package
(12 Months)

**Professional Fees : Rs 9 Lakhs**
**(Includes BASIC & SUPREME Package Services)**

Establishing Integrated Management Systems (based on best practices) with 100+ Key Performance Indicators with focus on organisations :

- Economic Performance
- Environmental Performance
- Social Performance

Preparation of Business Sustainability Report which is useful for accessing finance , global work contracts and improving sustainability initiatives of the organisation.

## Professional Profile of Mr. P Seshadri



A qualified Production & Industrial engineer with management specialisation in Industrial Management from Nagpur University has industrial and consulting experience of more than 28 years in the domains of HRD, TQM and OD with Corporates, MSME's and Start-up's.

Practicing as Management Consultant since 2002, he has evolved his core competencies in three areas which include – Developing Management Systems, Facilitating Business Excellence Practices and Establishing Sustainability Reports for Industries and Institutions.

Active with professional / industrial bodies and social organisations, he has held leadership positions in several of such organisation like QCFI, NIPM, ISTD, IMCI, HDCF, FAPCCI, CII, BNI and Rotary International. His current passion as qualified faculty from Rotary Leadership Institute is strengthening Rotary Movement using several initiatives in Clubs, Communities and Corporates.

**Contact:**

98490 82520

pseshadri29@gmail.com

# மடகாஸ்கரில் மகத்தான மருத்துவ சேவை

ஜெய்ஸ்ரீ, ரஷீதா பகத்

இந்தியாவின் ரோட்டரி மருத்துவக்குழு அண்மையில் மடகாஸ்கர் நாட்டில் மருத்துவப் பணியை ஆற்றியது. அதில் பங்கேற்றபோதுதான் ரோட்டரியால் என்ன செய்ய முடியும் என்பதற்கு ஓர் உதாரணத்தைக் கண்டேன் என்று RID C பாஸ்கர் அண்மையில் திஷா என்ற தலைப்பில் கோல்கத்தாவில் மாவட்ட ஆளுநர்களுக்கான பயிற்சி முகாமில் இவ்வாறு குறிப்பிட்டார்.

அந்த முகாமில் ரோஸன்னா என்ற பத்து வயது சிறுமியின் பற்கள் மோசமாகச் சிதைந்திருந்தன (படம்). அவள் பேசும்போது அழகில்லாத பற்களை யாராவது பார்த்துவிடப் போகிறார்களே என்று தன் கைகளால் முகத்தை மறைத்துக் கொண்டுதான் பேசுவார்.

ஏழை நாடான மடகாஸ்கரில் இந்தியாவைப் போல் பல ஆண்டுகளாக மருத்துவ வசதிகள் இல்லை என்பதைக் கண்டேன். அங்கே மேற்கொள்ளப்பட்ட ரோட்டரி இயக்கத்தில் 19 இந்திய மருத்துவர்கள் பங்கேற்று மருத்துவப் பணிகளை மேற்கொண்டனர். இது போன்ற முகாம்களுக்கு TRF பெரிதளவு உதவுகிறது என்றார்.

*எலும்பு நிபுணர் ரோமேஷ் கவுர் X-ரே ஒன்றை ஆராய்கிறார்.*



அண்மையில் நடைபெற்ற 12 நாள் மருத்துவ இயக்கத்தில் PRIP ராஜேந்திர சாபூ, உஷா சாபூ, RI தலைவர் பேரி ரஸ்ஸின், பாஸ்கர், அவரது மனைவி மாலா, நைஜீரியாவைச் சேர்ந்த RI இயக்குநர் யிங்க்கா பாபாலோலா (Yinka Babalola) ஆகியோர் பங்கேற்றனர்.

1998ல் உகாண்டாவில் மேற்கொள்ளப்பட்ட முகாமில் பங்கேற்று துவக்கிய சாஹு வும் அவரது மனைவி உஷாவும் இந்த மருத்துவ இயக்கத்திலும் பங்கேற்று தொண்டு புரிந்தனர். அவர் பேசுகையில், மடகாஸ்கருக்கு நாங்கள் முதல் முறையாக 2004ம் ஆண்டு பயணமானோம். இந்த நாட்டில்தான் மனிதாபிமான பணிகள், குறிப்பாக சுகாதாரப் பணிகளை மேற்கொள்வதற்குத் தேவையான நாடு மடகாஸ்கர் என்பதை உணர்ந்துகொண்டோம். ஷெல்லி ஓகாபே ஒருங்கிணைப்பாளராக இருந்தபோது, அவரிடம், 'நீங்கள் ஆளுநராகப் பொறுப்பேற்ற பின் மீண்டும் வருகிறேன்' என்று கூறினேன். அதனால்தான் இப்போது மடகாஸ்கருக்கு வந்துள்ளேன் என்றார்.

இந்தப் பயணத்தில் குறிப்பிடத் தக்க அம்சம் RI தலைவர் பேரி ரஸ்ஸினும் மருத்துவப் பணியில் இணைந்ததுதான். இந்த மருத்துவப் பணியை நடத்துவதற்கு தலைநகர் அண்டனானரீவோவுக்கு 180 கி.மீ. தொலைவில் உள்ள ஆண்ட்ஸிரபே என்ற இடம் தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்த இடத்திற்கு தலைநகரிலிருந்து 4 மணி நேரம் பயணம் செய்ய வேண்டும். ஆப்பிரிக்க நாடுகளின் சாலைகளின் நிலைமை குறித்து அப்போதுதான் தெரியும். கண் மருத்துவம் மற்றும் சிவில் மருத்துவ மனையில் முகாம் நடைபெற்றது. அங்கு அடிப்படை வசதிகள் மட்டும் உள்ளன. ஆனால், ஷெல்லி தலைமையிலான உள்ளூர் அமைப்பின் குழுவும் ஆதரவும் மிகப் பெரிய அளவில் துணையாக இருந்தன. வாரம் முழுதும் சிவில் மருத்துவமனையும் கண் மருத்துவமனையும் எங்களது பணயிடமாகவே மாறிவிட்டது. எங்களுக்குத் தேவையான ஐந்து ஆபரேஷன் தியேட்டர்களையும் அமைத்துத் தந்தனர் என்றார் பாஸ்கர்.



*ரோஸேன் தன் பல் வரிசை சரி செய்யப்பட்டப்பின்.*

அவசர சிகிச்சைகளுக்கான ஆபரேஷன்களை உள்ளூர் சர்ஜன்களே நடத்தினர். இந்திய சர்ஜன்கள் மிகவும் சிக்கலானவற்றைக் கையாண்டனர். PRIP சாபூவின் வேண்டுகோளை ஏற்று, மருத்துவமனையின் இயக்குநர் கூடுதலாக மேஜையை அமைத்தார். அது மேலும் சிகிச்சை அளிப்பதற்கு இந்திய மருத்துவர்களுக்குப் பெரிதும் உதவியது. குறிப்பாக, பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை, காது, மூக்கு, தொண்டை கோளாறுகளுக்கு மயக்க ஊசி தேவைப்பட்டது. சில மறக்க முடியாத நிகழ்வுகளும் உண்டு.

14 வயது சிறுவனுக்குப் பெரிய அளவில் ஆபரேஷன் தேவைப்பட்டது. அவனுக்கு Dr ரவஜித் சிங், Dr ரமேஷ் பால் ஆகியோர் சிகிச்சை அளித்துக் கொண்டிருந்தனர். அவனுக்கு முதுகில் மயக்கமருந்து செலுத்தினர்.

இந்த சிகிச்சை இரண்டு மணி நேரம் நீடித்தது. ஆபரேஷன் நடத்தப்பட்ட அறைக்குள் நுழைய முடியாது என்பதால், கண்ணாடி வழியாகச் சிறுவனைப் பார்த்து சைகையால், 'சிகிச்சை எப்படி' என்று கேட்டேன். அவன் புன்னகையுடன் கட்டை விரலை உயர்த்தி நன்றாக நடந்தது என்று கூறினான். இப்படி ஒரு நம்பிக்கையை எந்த நோயாளியிடமும் பார்த்ததில்லை. சர்ஜரி முடிந்து அவன் வெளியே வந்தபோது, இரு கட்டை விரல்களையும் உயர்த்தி மகிழ்ச்சியைப் பரிமாறினேன். அதற்குப் புன்னகையோடு அவனும் கை விரல்களை உயர்த்தினான். அவனிடமிருந்து நேர்மறை உணர்வு என்னிடமும் மற்றவர்களிடமும் பரவியது என்றார் சாபு.

*இந்த மருத்துவப் பணியில் இந்திய மருத்துவர்களின் வழிகாட்டுதலில் உள்ளூர் மருத்துவர்கள் சிகிச்சை செய்தது மறக்க முடியாதது.*

**ராஜேந்திர சாபூ**
**முன்னாள் RI தலைவர்**

ஹிரண்யா பாதிப்புக்கு ஆளானோர் நிறைய பேர், குறிப்பாக 2 முதல் 4 வயது வரையான குழந்தைகள் இருந்தனர். அவர்களுக்கும் ஆபரேஷன் தேவைப்பட்டது. உள்ளூர் நிபுணர்களால் கையாள முடியவில்லை என்ற நிலையினால், அவர்களுக்கு முன்னுரிமை தரப்பட்டது என்று குறிப்பிட்டார்.

இந்த மருத்துவப் பணியில் இந்திய மருத்துவர்களின் வழிகாட்டுதலில் உள்ளூர் மருத்துவர்கள் சிகிச்சை செய்தது மறக்க முடியாதது. பல் மருத்துவப் பிரிவில் வெறும் இரு நாற்காலிகள் மட்டுமே இருந்தன. நூறு நோயாளிகள் சிகிச்சைக்காக வந்திருந்தனர். மிகவும் சிக்கலான நடைமுறைகளை எப்படிக் கையாள்வது என்று உள்ளூர் மருத்துவர்களுக்குப் பயிற்சி அளிப்பதில் நமது அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் கடுமையாக உழைத்தனர் என்றார் சாபூ.




*நான்ஸி பல் சிகிச்சைக்குப் பின்.*

163 கண் ஆபரேஷன்கள், 73 பொது ஆபரேஷன்கள், 36 பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சைகள், 34 காதுமூக்கு தொண்டை சிகிச்சைகள், 35 முடநீக்கியல் சிகிச்சை, 8 மகப்பேறு சிகிச்சைகள், 576 பல் சிகிச்சைகள் இந்திய மருத்துவர்களால் நடத்தப் பட்டன. தோல் சிகிச்சை மருத்துவப் பிரிவில் 1,250 நோயாளிகள் இலவசமாக மருந்துகளைப் பெற்றுக் கொண்டனர். அந்தப் பகுதியில் தொற்றுநோய், ஹிரண்யா, முன் கழுத்துக் கழலை (Goiter), பிறவி வளைபாதம் (Clubfoot) மற்றும் தீக்காயங்கள் பரவலாக இருந்த பிரச்சினைகளாகும்.

இந்த முகாமில் பங்கேற்றது எனக்கு மிகவும் பெருமையாக உள்ளது. இந்திய மருத்துவர்களின் அர்ப்பணிப்பு என்னை புத்துணர்ச்சியுடன் ரோட்டரியில் பணயாற்ற ஊக்கமிளக்கிறது. இது ஒரு அரிய வாய்ப்பாக கருதுகிறேன், என்று RI தலைவர் ரஸ்ஸின் கூறினார்.

உகாண்டாவில் நடைபெற்ற முதல் மருத்துவப் பணியை நினைவுகூர்ந்த சாபூ, ரோட்டரி 43 நாடுகளில் மருத்துவப் பணியை மேற்கொள்வதற்காக 500 டாக்டர்களை அனுப்பியது. இந்திய அறுவைச் சிகிச்சை நிபுணர்கள் ஆப்பிரிக்காவில் இதுவரை மொத்தம் 63 ஆயிரம் பேருக்கு சிகிச்சை அளித்துள்ளனர் என்றார்.

கண் ஆபரேஷன் செய்யும்போது, ஊசிகளைத் தூய்மையாக்குவதற்கான அழுத்த அனற்கலம் (Autoclave) சரியாக இயங்காத நிலையில், Dr நிவேதிதா, இரு பெரிய பிரஷர் குக்கர்களால் மருத்துவ உபகரணங்களை வெந்நீரில் சுத்தப்படுத்துவதற்குப் பயன்படுத்தினார் என்று சாபூ கூறினார்.

இந்த மருத்துவக் குழுவில் மாவட்ட ஆளுநர் ப்ரவீண் கோயல்




*மருத்துவக் குழுவுடன் RID C பாஸ்கர், மாலா, PRIP ராஜேந்திர சாபூ மற்றும் உஷா.*



*RI தலைவர் பாரி ரஸ்ஸினும், PRIP சாபூவும் உள்ளூர் தொலைக்காட்சிக்கு ரோட்டரி மருத்துவக் குழு பற்றி விவரிக்கின்றனர். DG ப்ரவீண் கோயல் அவர்களும் படத்தில் உள்ளார்.*

தனது மனைவி பாஸுவுடன் பங்கேற்றார். அவர் பேசுகையில், ஆபரேஷன் முடிந்து வார்டுக் கொண்டு வருவதற்காக நோயாளிகளை ரோட்டரியின் மூத்த தலைவர்கள் ஸ்ட்ரெச்சரில் ஏற்றியது நெகிழ்ச்சியாக இருந்தது. அதைப் போல் நோயாளி களின் உறவினர்களுக்கும் அவர்கள் ஆறுதல் அளித்தனர் என்றார்.

இந்த மருத்துவப் பணி உலகளாவிய நிதியில் மேற்கொள்ளப் பட்டதாகும். RID 3080 சர்வதேச கூட்டாளிகளான லூஸியானா D 6200; அலபாமா D 6880; டென்னிஸீ D 6760 மற்றும் ரோட்டரி ஃபவுண்டேஷன் (TRF) ஆதரவு அளித்தன. வருகை புரிந்த மருத்துவக் குழுவுக்கு மடகாஸ்கர் நாட்டு சுகாதார அமைச்ச கம் முழு ஆதரவும் அளித்தது.

மருத்துவப் பணிக்கு மொத்தம் 87 ஆயிரம் டாலர் (சுமார் ரூ.60,36,845) ஆயிற்று. எங்களுடன் 1,300 கிலோ மருந்துகள், உபகரணங்களை எடுத்துச் சென்றோம். அவற்றை ஆப்பிரிக்க நாட்டு மருத்துவமனைகளுக்கு நன்கொடையாக அளித்துவிட்டோம் என்று திட்டத் தலைவரான PDG ரஞ்சித் K பாட்டியா, கூறினார். PDG ரமண் அனேஜா போக்குவரத்து, நிர்வாக ஏற்பாடுகளை மேற்கொண்டார். PDGs மன்ப்ரீத் சிங் கண்டோக், தன் சந்த் ஆகியோர் தங்களது மனைவிமார் பூனம், மீனா ஆகியோருடன் வந்து பங்கேற்றனர்.

ஆண்ட்ஸிரபேவின் மக்கள் தொகை இரண்டு லட்சமாகும். பொருளாதாரத்தில் பின்தங்கிய ஊர். மூன்று வேளையும் சாப்பிடும் ஒருவரைக் கூட நான் சந்திக்கவில்லை. ரஸ்க், தேநீர், சாப்பிட்டே வாழ்கிறார்கள் என்றார் கோயல்.

அங்கே சிசேரியன் சிகிச்சை மூலம் குழந்தை பெறுவதற்கு மருத்துவர்கள் 90 நிமிடம் போராடினர். இந்திய மகப்பேறு மருத்துவர் டாக்டர் நிர்லப் கவுர் அவர்களுக்கு உதவினார் என்றார் கோயல்.

மருத்துவ வசதிகள் அந்த நாட்டில் அநேகமாக இல்லை எனலாம். இருந்தாலும் காத்திருக்கும் நோயாளிகளிடம் காணப்படும் கட்டுப்பாடு வியப்பு அளிக்கிறது. கியூ வரிசையை மீறி முன்னேறுவது வரிசையில் இருந்தபடி சண்டை போடுவது எதுவும் இல்லை. மக்கள் தாங்களாகவே ஒழுங்குபடுத்திக் கொள்கிறார்கள் என்றார் அவர்.

அந்நாட்டு மக்கள் சிகிச்சை பெறுவதற்கு 10 கிமீ தூரம் செல்ல வேண்டியுள்ளது. அத்துடன் தொலை தூரத்தில் மருத்துவப்பணிக்காக நடமாடும் மருத்துவ மையங்கள் அறிமுகப்படுத்தப்பட்டாலும் மக்கள் அரிதாக உள்ள இடங்களில்தான் பயன்படுத்தப்படுகிறது. மருந்துகளின் விலையும் போதிய ஆரோக்கியம் கிடைக்காததற்குக் காரணம் என்றார் கோயல்.

உள்ளூர் ரோட்டரி, ரோட்டராக்ட் அமைப்பினர் பெரிதும் உதவுகின்றனர். அத்துடன் மக்களுடன் உரையாட மொழிபெயர்த்து உதவினர். மடகாஸ்கரில் பரவலாக பிரெஞ்ச், மலாகஸே (Malagasy) ஆகிய மொழிகள்தான் பேசப்படுகின்றன.

இந்தியாவிலிருந்து சென்ற கண் சிகிச்சை நிபுணர் நிவேதிதா சிங், தோல்நோய் சிகிச்சை நிபுணர் வனிதா குப்தா, பிளாஸ்டிக் சர்ஜன் VD சிங், பொது சர்ஜன் NS சந்து, முடநீக்கியல் நிபுணர் ராவ்ஜித் சிங், காது, மூக்கு, தொண்டை நிபுணர் ரமண் அப்ரோல் ஆகிய மருத்துவர்கள் இக்குழுவில் இடம்பெற்றிருந்தனர். அவர்களுடன் பல் மருத்துவர்கள், மயக்க மருந்து நிபுணர்கள், கண் மருத்துவர்கள், நோயியல் வல்லுநர்கள் (Pathologists) ஆகியோரும் உடன் இருந்தனர்.

மருத்துவப் பணிகளின் இயக்குநர் டாக்டர் கரண் சிங், இந்திய மருத்துவக்

குழுவின் ஒவ்வொரு டாக்டரும் அங்குள்ள ஒருவருக்கும் பயிற்சி தந்தோம். அண்மையில் எங்களிடம் பயிற்சி பெற்ற ஒரு மருத்துவர் 10 பேருக்கு தானே ஆபரேஷன் செய்திருப்பதாகத் தகவல் வந்தது. எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது என்றார். இது இவருக்கு 17வது மருத்துவ முகாம் ஆகும். இம்முறை தான் தொடர்ச்சியாக 12 மணி நேரம் பணியாற்றியிருக்கிறேன். இருந்தாலும் அயர்ச்சியே இல்லை. RI தலைவர், இயக்குநர், முன்னாள் இயக்குநர் சாபூ போன்றோர் எங்களுடன் இருந்ததே எங்களுக்குப் பெரிய தெம்பாக இருந்தது என்றார்.

ஆப்பிரிக்காவில் இந்திய மருத்துவர்களுக்கு நல்ல மரியாதை இருக்கிறது. இந்திய டாக்டர்கள் கடுமையான சூழ்நிலையிலும் திறமையாக நீண்ட நேரம் பணியாற்றுவதாலும் கிடைக்கிற வசதிகளுடன் தங்களுக்கே உரிய தொழில்நுட்பத்தைக் கையாண்டு மருத்துவம் செய்வதாலும் இந்திய மருத்துவர்களை பெரிதும் போற்றுகிறார்கள் என்று Dr VD சிங் கூறினார்.

பல் மருத்துவரான PDG டாக்டர் GK தாக்ரல் தன் மனைவி பல் மருத்துவர் டாக்டர் ராஷ்மியுடன் பங்கேற்றார். அவர் பேசுகையில், இது அவருக்கு எட்டாவது மருத்துவப் பணி முகாம் என்று குறிப்பிட்டார்.

பல் நோய்களுக்கு ஆளான நூற்றுக்கணக்கானோர் வேதனை, வலி, அவஸ்தையிலிருந்து விடுதலை பெற சிகிச்சை அளிப்பதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்தது.

நாங்கள் செய்த வேறு எந்த ரோட்டரி பணிகளையும் விட அங்கே பல் மருத்துவ தன்னார்வத் தொண்டராகப் பணியாற்றியது மன நிறைவும் திருப்தியும் அளிக்கிறது என்றார் டாக்டர் தாக்ரல்.

டாக்டர் வனிதா, இந்தப் பகுதியில் பல தோல் நோய்கள் பரவலாக இருக்கின்றன. ஆனால், அதற்குச் சி கிச்சை தர தோல்சிகிச்சை நிபுணர்கள் போதிய பேர் இல்லை என்று கூறினார். அவர் அங்கு 1,250 பேருக்குச் சிகிச்சை அளித்திருக்கிறார். இலவச மருந்துகளை அளித்துள்ளார். இந்த நோய்கள் பெரும்பாலும் சிகிச்சையால் தீர்க்கப்படக் கூடியவை. ஆனால், முறையான பயிற்சி பெற்ற மருத்துவர்கள் இல்லாமல் போதிய சிகிச்சை இன்றி, கவனிக்காமல் விடப்பட்டுள்ளது என்றும் வனிதா கூறினார்.

மருத்துவர்களும், தன்னார்வத் தொண்டர்களும் விரைவாக மதிய உணவைச் சாப்பிடும்போது, RI தலைவர் ரஸ்ஸின் மற்றும் RID பாபலோலா மருந்துக் கடையில் இருந்து உதவினார்கள். எங்களது குழுவுக்கு என்ன உணவு தரப்படுகிறதோ அதையே அவரும் உண்டார் என்று சாபூ கூறினார்.

தன்னார்வலர்களுடன் இணைந்து பணியாற்றியதற்காக இயக்குநர் பாஸ்கர், திருமதி மாலா ஆகியோருக்கு சாபூ நன்றி கூறினார். தொடர்ந்து, மடகாஸ்கர் நாட்டவர்களுக்கு நிரந்தரமாக ஒரு பரிசுப் பொருள்

PRIP *சாபூ, DG கோயல், RID C பாஸ்கர் மற்றும்*
PDG *ரஞ்ஜித் பாட்டியா நோயாளிகளுடன்.*





RI *தலைவர் ரஸ்ஸின்,* PRIP *சாபூ,* Dr *ரமன் அப்ரோலுடன் அறுவை சிகிச்சை அறையில்.*



RI *தலைவர் ரஸ்ஸின் ஸ்ட்ரெச்சரைத் தள்ளுகிறார்.*

வழங்கலாம் என்று பாஸ்கர் யோசனை கூறினார். அதற்கு எங்களது குழு அங்கே ஒரு பல்மருத்துவப் பிரிவை அமைத்துத் தரலாம் என்று கூறினர் என்று சொன்ன சாபூ, மடகாஸ்கர் அரசு கட்டடம் அமைத்துத் தந்துவிட்டால், இந்திய ரோட்டரி அமைப்பு அவர்களுக்குத் தேவையான கருவிகளையும் பயிற்சி தருவதற்கான மருத்துவ வல்லுநர்களையும் அளிக்கும் என்று கூறினார். இது தொடர்பான யோசனை அறிக்கை மடகாஸ்கர் ஆட்சியாளர்களுக்கு அளித்துள்ளோம். அதைத் தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்றும் அவர் சொன்னார்.

அடுத்த ரோட்டரி மருத்துவப் பணி இயக்கம் (Rotary Medical Mission) மங்கோலியாவில் மே 5ம் தேதி முதல் 17ம் தேதி வரையில் நடத்துவது என முடிவு செய்யப்பட்டுள்ளது. அதில் பங்கேற்க 17 டாக்டர்கள் ஒப்புதல் கையெழுத்திட்டுள்ளனர்.

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

# ரோட்டரி சட்ட விதிகளுக்கான கவுன்சில் கூட்டம்

ரேகா ஷெட்டி

ரோட்டரியின் 2019ம் ஆண்டுக்கான சட்ட விதிகளுக்கான கவுன்சில் கூட்டம் (Council on Legislation) அமெரிக்கா, சிகாகோ நகரில் அண்மையில் வெகு சிறப்பாக நடைபெற்றது. இதில் 530 மாவட்டங்களிலிருந்து பங்கேற்றனர். RI அமைப்பின் முன்னாள் தலைவர்கள், இயக்குநர்கள், அலுவலர்கள் இந்தக் கவுன்சில் கூட்டத்தில் (CoL) வாக்களிக்காத உறுப்பினர்களாக பங்கேற்றனர்.

கவுன்சில் தான் ரோட்டரி அமைப்பு களிலேயே உச்ச அமைப் பாகும். அங்கே பரபரப்புக்குப் பஞ்சமேது.

முதல் நாளில் 17 கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன. RID 3232 சென்னை டெம்பிள் சிட்டி ரோட்டரி சங்கத்தின் யோசனையான ரோட்டரியின் பன்முகத் தன்மையை ஏட்டளவில் இல்லாமல் நடைமுறையில் கடைப்பிடிக்கக் கோரியது. கடந்த முப்பது ஆண்டு களாக அந்த சங்கத்தில் பெண்களும், ஆண்களும் சரிசமமாகப் பாதிக்குப் பாதிப் பேர் உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

ரோட்டரி தலைமையின் தகுதியைப் பாதுகாக்கும் வகையிலான தரத்தைத் தளர்த்தும் வகையில் கொண்டு வரப்பட்ட எந்த முயற்சியையும் கவுன்சில் ஏற்கவில்லை. அதைப் போல் ஆளுநராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு ரோட்டரி உறுப்பினராக இருக்க வேண்டிய கால அளவைக் குறைத்துக் கொள்ள யோசனையும் நிராகரிக்கப்பட்டது.

ரோட்டரியின் சட்டபூர்வ ஆவணங்களில் “உயர் தரமான நெறிகள்” (High Ethical Standards)யில் உள்ள “உயர்” (high) என்ற சொல்லை நீக்கி விடலாம் என்ற PDG பால் இனாம்தாரின் யோசனை நிராகரிக்கப்பட்டது.

ஜப்பானியர் ஒருவர் ரோட்டரி கூட்டம் கூடுவதை அதிகரித்து 40 முறை கூடலாம் என்று கூறிய யோசனையும் ஏற்கப்படவில்லை.

இம்முறை நடைபெற்ற CoL கடுமையாகச் செயல்பட்டது. போர்டில் இடம்பெற்றுள்ள செல்வாக்கு மிக்கவர்களின் செயல்களுக்கு இடமளிக்காமல், தனது அதிகாரத்தை முழு அளவில் கவுன்சில் உணர்ந்து செயல்பட்டது. கவுன்சிலில் இடம் பெறும் மாவட்ட பிரதிநிதிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதற்கான முயற்சியும் நிராகரிக்கப்பட்டது.

கூட்டத்தின் விவாதம் ஐந்து மொழி களில் நேரடியாக மொழிபெயர்க்கப் பட்டது. சட்டத்தை ஆராயவும், விவாதிக்கவும் பல உறுப்பினர்கள் கையடக் கணினி (Tablets), டிஜிட்டல் சாதனங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தினர். வாக்களிப்பு டிஜிட்டல் முறையில் மேற்கொள்ளப்பட்டது. முடிவுகள் உடனுக்குடன் பலகையில் அறிவிக்கப்பட்டன.

### மண்டல அச்சு இதழ்களுக்கு ஆயுசு நீடிப்பு

அச்சு வடிவில் இருக்கும் ரோட்டரி இதழை டிஜிட்டல் முறையில் மாற்றுவதற்குப் பல தீர்மானங்கள் வந்தன. அச்சு வடிவத்துக்கு அமோக ஆதரவு இருந்தது. இதர யோசனைகள் நிராகரிக்கப்பட்டன.

இந்தியப் பிரதிநிதிகள், தாங்கள் பேச வேண்டியவற்றை முறையாகத் திட்டமிட்டுத் தயாரித்துச் சென்றனர். முதல் முறையாக இந்த முறை




RID C *பாஸ்கர், PRIPs ராஜேந்திர சாபூ, KR ரவிந்திரன், RIDEs பரத் பாண்டியா, கமல் சங்வி, CoL தலைவர் டுவான் ரீட் மற்றும் TN சுப்ரமணியனுடன் இந்திய பிரதிநிதிகள்.*

மூன்று பெண்கள் இந்தக் கவுன்சில் கூட்டத்தில் பங்கேற்றனர். PDGs கல்பனா கவுண்ட், பிந்து சிங் மற்றும் நான் இடம்பெற்றோம். முன்னாள் மாவட்ட ஆளுநர் ராஜு சுப்பிரமணியம் சட்டம் மற்றும் விதிகள் கமிட்டியின் தலைவராக (Chairman of the Constitution and Bylaws Committee) மேடையில் அமர்ந்திருந்தார். அந்தப் பதவியை வகிக்கும் முதல் இந்தியர் அவர். கடந்த சில ஆண்டுகளாக இந்தியப் பிரதிநிதிகளை அவர் அழைத்துச் சென்றார். சென்னையில் மண்டல இன்ஸ்டிடியூட்டில் அவர் நடத்திய பயிற்சியில் அனைத்துப் பிரதிநிதிகளும் CoL கூட்டத்தில் பங்கேற்கும் திறனைப் பெற்றனர். அவர்கள் ஆன்லைன் வழி தேர்விலும் பங்கேற்று தேர்ச்சி பெற்றனர்.

தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த பிரதிநிதி ஒருவர் RI அமைப்பின் பணிகளிலிருந்து அனைத்து முன்னாள் தலைவர்களையும் நீக்க வேண்டும் என்று யோசனை கூறினார். ஆனால், கவுன்சில் உறுதிபட நிராகரித்துவிட்டது. அவர்களது அறிவும் அனுபவமும் நமக்குத் தேவை என்று ஒரு பிரதிநிதி கூறினார்.

தேர்தல்கள் நியாயமாக நடைபெறுவதை உறுதி செய்ய பல முயற்சிகள் முன் வைக்கப்பட்டன. சென்னை ரோட்டரி சங்கம் (RID 3232) பல யோசனைகளைக் கூறியது. அதில், வாக்களிப்பதற்காக உருவாக்கப்பட்ட சங்கங்களை ("Vote Clubs") அங்கீகரிப்பது ஆபத்தானது. முந்தைய ஆண்டு ஜூலை 1ம் தேதி பதிவில் இருந்த, செயல்படும் ரோட்டரி சங்கங்களே வாக்களிக்க அனுமதிக்கப்பட வேண்டும் என யோசனை முன் வைக்கப்பட்டது. அந்த கோரிக்கை ஏற்கப்பட்டது.



கடைசி நாளில் 19-72வது சட்ட நிறைவேற்றத்தின்போது, ரோட்டராக்ட் உறுப்பினர்களை RI அமைப்பில் இடம் பெற அனுமதிப்பது குறித்த யோசனை வந்தது. முந்தைய தினம் நிராகரிக்கப்பட்ட அத்தீர்மானம் பின்னர் இழுபறியில் நின்றது.

RI தலைவர் பேரி ரஸ்ஸின் ரோட்டராக்ட் உறுப்பினர்கள், ரோட்டரியிலும் இடம் பெறும் வகையில் மதிப்பளிக்க வேண்டும். ரோட்டராக்ட் உறுப்பினர்களை ரோட்டரி உறுப்பினர்களாக நிலை உயர்த்தி, RI அமைப்பின் கூட்டாளிகளாக்குவதுதான் இலக்கு என்றும் அவர் குறிப்பிட்டார்.

எந்த ரோட்டராக்ட் சங்கமும் விதிகளைச் சரியாகப் பின்பற்றி, செலுத்த வேண்டிய சந்தாத் தொகைகளை உரிய வகையில் செலுத்தினால், ரோட்டரி சங்கமாக உருவாகலாம் என்று உறுதிப்படுத்தினார். நீண்ட நேர விவாதத்துக்குப் பின் இதற்கான விதி 381 வாக்குகள் பெற்று நிறைவேற்றப்பட்டது.

ரோட்டராக்ட் சங்கங்கள் ரோட்டரி கட்டமைப்பில் இடம் பெறும். நாம் ரோட்டராக்ட் சங்கத்தினருக்குத் தூண்டுகோலாய் இருப்போம். ரோட்டரியின் தளத்தில் இடம் பெறுவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு உண்டு என்று RI தலைவர் குறிப்பிட்டார்.

சட்டவிதிகளுக்கான கவுன்சில் உறுப்பினர் ஆவதற்கான தகுதிகளைக் குறைக்கும் யோசனை, அதிக உறுப்பினர்களுடன் மாவட்டங்களுக்குக் கூடுதலாக வாக்குகளை அளிக்கும் யோசனை, வாக்குரிமை இல்லாத உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைக்கும் யோசனை ஆகியவை நிராகரிக்கப்பட்டன.

சட்ட கவுன்சில் கூட்டத்தில் முன்னாள் தலைவர்களும் போர்டு உறுப்பினர்களும் பங்கேற்க வேண்டாம் என்ற யோசனையும் நிராகரிக்கப்பட்டது.



PDGs ரேகா ஷெட்டி, கல்பனா கவுண்ட் மற்றும் பிந்து சிங்.

மண்டல இன்ஸ்டிடியூட்டில் சட்டம் குறித்து தீர்மானம் கொண்டு வருவது விவாதிப்பதை உறுதி செய்யவேண்டும் என்று ஜப்பானிய பிரதிநிதி கூறிய யோசனை மற்றும் ரோட்டரி சங்கங்கள், உறுப்பினர்கள் குறித்து மாற்றுக் கருத்துகளைக் கூறுவதில் வெளிப்படைத் தன்மை ஏற்படுத்த வேண்டும் என்ற யோசனையும் ஏற்கப்பட்டது.

ரோட்டரி சங்க விதிகளை நவீனமயமாக்கவும் நெறிப்படுத்தவும் கூறப்பட்ட யோசனையும் ரோட்டரி சங்க சட்டத்தின் தரத்தை எளிமைப்படுத்த கூறப்பட்ட இரு சட்டத் திருத்தங்கள் நிறைவேறின. இந்த ஆவணங்கள் இதற்கு முன்பு 17 ஆண்டுகளுக்கு முன்புதான் திருத்தப்பட்டன என்று பிரதிநிதிகளிடம் தெரிவிக்கப்பட்டது.

வரிவிதிப்பு நிலையை (Tax Status) மாற்றும் யோசனை தோல்வியடைந்தது.

போர்டின் பல உறுப்பினர்கள் இந்த சட்டத்துக்கு ஆதரவாகப் பேசினர். RI முன்னாள் தலைவர் ராஜேந்திர சாபூ சட்டத்தின் மூலம் உருவாக்கப்படும் அமைப்பினால் பல நன்மைகள் விளையப் போவதாகக் கூறினார்.

RIக்கும் TRFக்கும் இடையில் ஒத்துழைப்பின் அவசியத்தைப் பலர் விவரித்தனர். கவுன்சில் கூட்டத்தில் இதுதான் அதிகமாக பேசப்பட்டது. அதனால், 75 சதவீதம் வாக்குகள் பெற்று நிறைவேற்றப்பட்டது.

கவுன்சிலுக்கு மூன்று மாதங்களுக்கு மேல் அவகாசம் தரலாம் என்ற யோசனை நிராகரிக்கப்பட்டது. தலைவர் பேரி ரஸ்ஸின் கவுன்சிலில் எடுக்கப்பட்ட முக்கிய மாற்றங்களுக்கான முடிவுகளைப் பாராட்டினார்.

(கட்டுரை ஆசிரியர் RID 3232 முன்னாள் மாவட்ட ஆளுநர்)

# மகிழ்ச்சியான ரொட்டேரியனாக இருந்து

ரஷீதா பகத்

கோல்கத்தாலிவ்ல அண்மையில் மாவட்ட ஆளுநர்கள், மாவட்ட தலைவர்களுக் காக நடத்தப்பட்ட திஷா பயிற்சிக் கருத்தரங்கில் RID C பாஸ்கர் பேசிய போது தனக்கே உரிய முறையில் சில தகவல்களை சுவையாகப் பகிர்ந்து கொண்டார்.

முன்தினம் இரவு தோழமை நிகழ்வில் (Fellowship Event) பங்கேற்ற ரோட்டரியின் மூத்த தலைவர்கள் உள்பட பலர் அந்தாக்ஷரி நிகழ்ச்சியில் பாட்டுப் பாடினர். இது ரோட்டரியின் ‘கூட்டு மற்றும் ஆதரவு’ ஆகிய பண்புகளை வெளிகாட்டியது என்றார் C. பாஸ்கர்.

அவர் பேசிய போது, எனக்குப் பாட வராது என்று நன்றாகத் தெரியும். அந்தாக்ஷரி நடத்தியவர் என்னைப் பாடச் சொன்னார். நான் பாடத் தொடங்கிய போது (RID 3011) முன்னாள் ஆளுநர் சுப்ரா (என். சுப்பிரமணியன்) உள்பட என்னைச் சுற்றியிருந்த குழுவினர் ஆதரவு தெரிவித்தனர். அவர்களுக்கு நன்றி.

ஆனால், ஒரு விஷயம், நேற்றைய கூட்டத்தின் மூலம் கிடைத்த செய்தி ‘உனது இலக்குகளைப் பற்றிக் கவலைப் படாதே; ரோட்டரியிலோ, TRFயிலோ முடிவு செய்துவிட்டால், உன்னைச் சுற்றியுள்ளவர்கள் ஆதரிப்பார்கள்’ என்பது தான் என்றார்.



RI *இயக்குனர்* C *பாஸ்கர்*

தொடர்ந்து பேசிய அவர், நேற்றைய கூட்டத்தின்போது, மாவட்ட முன்னாள் ஆளுநர் ரஜனி முகர்ஜி என்னைப் பார்த்து ‘இப்போதெல்லாம் நீங்கள் (பாஸ்கர்) சீரியஸான ஆளாகிவிட்டீர்கள்’ என்றார். அது உண்மை என்று எனக்குப்பட்டது. நான் ரோட்டரியில் இணைந்தபோது, நான் மகிழ்ச்சியான மனிதனாக இருந்தேன். மகிழ்ச்சியான ரோட்டேரியன் என்று கூறியவர் தனது ரோட்டரி பயணத்தைச் சுட்டிக் காட்டினார்.

ஒரு சாதாரண மனிதன் சிறந்தவராகவும் RI இயக்குநராகவும் உயர முடிந்தது. நான் 1988ம் ஆண்டு சேர்ந்தேன். ரோட்டரியனாக இருப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். ரோட்டரி கூட்டத்திற்குச் விருப்பப்பட்டால், செல்வேன் இல்லையென்றால் செல்ல மாட்டேன். இதெல்லாம் ரோட்டரி சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் படும் வரையில். அதற்குப் பின் கவலையுள்ள மனிதனாகி விட்டேன் என்று பாஸ்கர் கூறியதும் அவையில் இருந்தவர்கள் சிரித்தனர்.

அவர் கரூர் ரோட்டரி சங்கத்தில் இருந்தபோது, அதில் மொத்தமே நான்கு பேர் தான் உறுப்பினர்களாக இருந்தனர். நேற்றைய மாலை நேர நிகழ்ச்சியில் பாடுவதற்கு எப்படி நேரத்தை எடுத்துக் கொண்டேனோ அதைப் போல் நேரத்தை எடுத்துக் கொள்ள நினைத்தேன். சங்கத்துக்குத் தலைமை ஏற்று நடத்துவது எப்படி என்று எனக்குத் தெரியாது என்று மற்ற மூன்று உறுப்பினர்களிடம் கூறினேன். எனவே, ஓராண்டுக்கு உங்களில் ஒருவர் தலைவராக இருங்கள். அடுத்த ஆண்டு நான் தலைமை ஏற்கிறேன்’ என்று கூறினேன். அப்போது அவர்கள்,

# பொறுப்பானவராக மாறிய இயக்குனர்

'நாங்கள் எல்லோரும் இரு முறை தலைவர்களாக இருந்திருக்கிறோம்' என்று பதிலளித்தனர். வேறு வழியில்லாமல் நான் தலைமை ஏற்றேன். அப்போது, நான்கே பேர் உள்ள அமைப்பின் தலைவராக எப்படிச் செயல்படப் போகிறேனோ? என்று கவலைப்பட்டேன். தலைமைப் பொறுப்பை ஏற்பதற்கு முன்பு அங்கே இங்கே என்று அலைந்து நண்பர்களை ரோட்டரியில் இணையும்படி கேட்டுக் கொண்டேன் என்றார் பாஸ்கர்.

பாஸ்கர் கரூர் ரோட்டரியின் தலைவராகப் பொறுப்பேற்றபோது, புதிதாக 30 பேரை உறுப்பினர்களாக இணைத்தார். தலைமைப் பதவியை நிறைவு செய்தபோது, அந்த ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கை 46 ஆக உயர்ந்தது.

46 பேரும் செயல் வீரர்கள். மாவட்ட ஆளுநரிடம் காட்டுவதற்காக உறுப்பினர்களைச் சேர்க்கவில்லை. ரோட்டரியில் நான் இணைத்த ஒவ்வொரு உறுப்பினரும் நிரந்தரமாக நீடித்தனர். நாற்பது பேர் சரியான ஆட்களைத் தேர்ந்தெடுத்து இணைத்தால், அவர்கள் அத்தனை பேரும் நீடிப்பது மட்டுமின்றி ஆதரவாகவும் இருப்பார்கள்.

அந்த ஆண்டு எங்களது ரோட்டரி சங்கம் உள்ளூர் மக்களுக்கு ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் நற்பணிகளை ஆற்றியது.

எங்களது பணிகள் ஊடகங்களில் செய்திகளாக வெளியானதைப் பார்த்த தொகுதி MLA ரோட்டரி சங்கத்தில் இணைய ஆர்வம் காட்டினார். பின்னர், தமிழக அரசில் அமைச்சராகியும் விட்டார்.

பாஸ்கர், தொடர்ந்து, 1991ம் ஆண்டு நான் ரோட்டரியின் தலைவராக இருந்த போது 46ஆக இருந்த உறுப்பினர்கள் எண்ணிக்கை இன்று 430 என உயர்ந்து, இந்தியாவின் இரண்டாவது பெரிய ரோட்டரி சங்கமாக வளர்ந்துள்ளது என்று கூறியபோது, அரங்கில் கூடியிருந்தவர்கள் கையொலி எழுப்பி வரவேற்றனர்.

உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது பெரிய காரியமில்லை. எல்லா மாவட்ட உறுப்பினர்களுக்கும் ஒரு வேண்டுகோள். நீங்கள் ரோட்டரி தலைவர்கள், அலுவலர்களுடன் இணைந்து தகுதியானவர்களையே உறுப்பினர்களாக இணைக்க வேண்டும் என்று உறுதி பூண்டால், இது சாத்தியமாகும்.

எனது பணி அங்கீகரிக்கப் பட்டது. மாவட்ட ரோட்டரி என்னை ஆளுநராகத் தேர்ந்தெடுத்தது. ஆளுநராகப் பொறுப்பேற்ற பிறகு கவலை மனிதனான நான் பொறுப்புள்ள மனிதனாக மாறினேன் என்றும் பாஸ்கர் கூறினார்.

அவர் மாவட்டத்தில் 56 ரோட்டரி சங்கங்கள் இருந்தன. அவற்றில் 44 சங்கங்களே உற்சாகமாக இயங்குகின்றன. செயல்படாத மற்றவை செயல்படும் ஒரு சங்கத்துடன் இணைந்துவிட்டன. ஆண்டு இறுதியில் மாவட்ட ரோட்டரி உறுப்பினர்கள் எண்ணிக்கை 10.2 சதவீதம் உயர்ந்தது.

எனது தலைமையிலான ரோட்டரி சங்கங்கள் சமூகப் பணிகளில் ஈடுபடவேண்டும் என்றேன். மேலும், சர்வதேச கூட்டங்களில் பங்கேற்பதற்கு முன்பு இணை மானியத்தை (Matching Grants) பெறுவதற்கான வழிகளைக் கற்றுக் கொள்ளவேண்டும். ரோட்டரி தலைவர்கள் மானியம் பெறுவதற்கான திட்டங்களை முன் வையுங்கள் என்றேன்.



அந்த ஆண்டு 44 சங்கங்களில் 42 சங்கங்கள் இணை மானியத்தை தாங்களே பெற்றனர். மாவட்டங்கள் பெறவில்லை என்று பாஸ்கர் கூறினார்.

அதையடுத்து, அவர் ரோட்டரி 5வது மண்டலத்தின் (Zone 5) ஒருங்கிணைப்பாளராக 2013-14ம் ஆண்டு பொறுப் பேற்றார். உலக உறுப்பினர் எண்ணிக்கையில் 35 சதவீதம் பங்களிப்புக்கு நான் பொறுப்பு ஆனேன். நான் ரோட்டரி இயக்குநர் ஆனபோது, சீரியஸ் ஆளானேன். உறுப்பினர் எண்ணிக்கையிலோ TRF பங்களிப்பு மற்றும் மற்ற விஷயங்களில் கவனம் செலுத்துகிறேன். நம் இடத்தைச் நாம் சீர் செய்யாவிட்டால் வேறு யார் வந்து செய்யப் போகிறார்கள்?

- இவ்வாறு முத்தாய்ப்பாய் முடித்தார் பாஸ்கர்.

# மாவட்ட ஆளுநர்களுக்கான RIயின் நிதி ஒதுக்கீடு ஒரு கோடி டாலர்

ரஷீதா பகத்

ரோட்டரி மாவட்ட ஆளுநர்களுக்கு RI நிதி ஒதுக்கீடு எவ்வளவு தெரியுமா? ஆண்டுக்கு ஒரு கோடியே பத்து லட்சம் டாலர் (சுமார் ரூ.76.69 கோடி) ஆகும். நான் மாவட்ட ஆளுநராக இருந்தபோது, 1991-92ம் ஆண்டு எனது அலவன்ஸ் ரூ.1.50 லட்சத்துக்கு மேலாகும் என்று RI முன்னாள் தலைவரும் TRF அறங்காவலருமான KR ரவீந்திரன் கூறினார்.

புதிய மாவட்ட ஆளுநர்கள், மாவட்ட தலைவர்களுக்காக கோல்கத்தாவில் நடைபெற்ற திஷா (Disha) பயிற்சி நிகழ்ச்சியில் பேசிய அவர், ரோட்டரி சங்கங்கள், மண்டல ரோட்டரி ஃபவுண்டேஷன் ஒருங்கிணைப்பாளர்கள் (RRFCs), மக்களிடையில் ரோட்டரி புகழ் பரப்பும் ஒருங்கிணைப்பாளர்கள் (Rotary Public Image Coordinators) ஆகியோருக்கு 30 லட்சம் டாலர் (சுமார் ரூ.21 கோடி) அளிக்கப்படுகிறது. இந்தப் பணத்தை யார் தருகிறார்கள்? இவான்ஸ்டன் தலைமையகம் அல்ல. உலகம் முழுதும் பரவியுள்ள ரோட்டரி அமைப்பினர் செலுத்தும் சந்தா தொகைகளின் மூலம் கிடைக்கிறது. எனவே, நமது தலைவர்கள், சமுதாயத்திற்குச் சிறந்த சேவை அளிக்க வேண்டியுள்ளது. நமக்கு உறுதுணையாக இருப்போரும், பலனாளிகளும் அனைத்தும் பெறத் தகுதியுள்ளவர்கள் என்றும் கூறினார்.

ரோட்டரி உறுப்பினர் உங்களது தோற்றத்தைப் பார்த்து மதிப்பிடமாட்டார்கள். ஆற்றலைப் பார்த்து மதிப்பிடுவர். உங்களால் என்ன செய்ய முடியும் என்பதை வைத்து அல்ல, என்ன செய்தீர்கள் என்பதை வைத்து! சேவையில் உங்களது பங்களிப்பை எவ்வளவு செலுத்தப் போகிறீர்கள் என்பதை அல்ல, சேவை மூலம் எந்த அளவுக்கு மாற்றத்தை ஏற்படுத்துகிறீர்கள் என்றுதான் எடைபோடுவார்கள்.

சமுதாயத்தில் மக்களின் வாழ்க்கையில் மாற்றம் கொண்டு வருவதற்கு ரோட்டரியின் மிகப் பெரிய சக்தியும் ஆற்றலும் உங்கள் கைகளில்தான் உள்ளன. அவற்றை பயனுள்ள வகையில் பயன்படுத்த வேண்டியதுதான் தேவை என்றும் ரவீந்திரன் கூறினார்.

தொடர்ந்து பேசுகையில், ரோட்டரி என்பது வெவ்வேறு மனிதர்களுக்கு வெவ்வேறு வகையில் செயல்படுவதாக இருக்கும்போது, நான் அதில் 110, 112 பேர் உள்ள சிறிய குழுவில் இடம்பெற்றுள்ளது எனது அதிர்ஷ்டம். ரோட்டரியால் நல்லது செய்வதற்கான ஆற்றலை மிக உயர்ந்த இடத்திலிருந்து பார்க்க முடிகிறது. உலகத்துக்கு ரோட்டரி எப்படி செயல்படுகிறது என்பதை பருந்துப் பார்வையில் பார்க்க முடிகிறது. என்னைப் பொறுத்தவரையில் ரோட்டரி என்பது வழி மட்டுமல்ல, முடிவும் கூட.



PRIP KR *ரவீந்திரன்*

அது உலகத்தைச் சிறந்த வகையில் ஆக்குவதற்கான வழியாகும். அத்துடன், எனக்கும் என் குடும்பத்திற்கும் நல்ல உலகம் கிடைக்க வகை செய்வதாகும். இந்த உலகில் எனது தடத்தைப் பதிக்க வழியமைக்கிறது. அதைப் போல் தனது தடத்தையும் என்னிடம் விட்டுச் செல்கிறது. இறுதியில் ரோட்டரிக்கு நான் அளிப்பதை விட ரோட்டரி யிடமிருந்து நான் பெற்றுக் கொள்வதே அதிகமாக இருக்கிறது என்றும் ரவீந்திரன் பேசினார்.

எனது நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் என்ற முறையில் எனது நிறுவனத்தின் பங்குதாரர்களுக்கு அதிகபட்ச ஆதாயம் கிடைக்கும் வகையில் ஒவ்வொரு முடிவையும் எடுப்பது என உறுதியாக இருக்கிறேன். அதே சமயம் நெறிகளில், முயற்சிகளில், உறுதிப்பாட்டில் எந்த சமரசத்தையும் மேற்கொள்வதில்லை என்பதுதான் என் நிலை. இதே நடைமுறையை அனைத்து ரோட்டரி தலைவர்களும் தங்களது உறுப்பினர்களிடம் கடைப்பிடிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன் என்றார் அவர்.

உறுப்பினர்கள்தான் உண்மையான பங்குதாரர்கள். அதனால், அவர்கள் எந்த முடிவையும் தங்களுக்குப் பயன் தரும் வகையில்தான் எடுப்பார்கள், அவர்கள் உங்கள் மீது நம்பிக்கை வைத்து தலைமைப் பொறுப்புகளை அளித்துள்ளனர். உங்களது பயணம், உங்களது பதவி ஆகியவற்றுக்கு அவர்கள்தான் உதவுகிறார்கள். எனவே, RRFC, RPIC, மாவட்ட ஆளுநர் என்ற நிலையில் உங்களுக்கு அலவன்ஸ் கிடைக்கிறது என்றால், அது அவர்கள் அளிப்பதாகும்

கூட்டத்தில் பங்கேற்றுள்ள மாவட்ட தலைவர்கள் தங்களது வளங்களை புத்திசாலித்தனமாகச் செலவிடவேண்டும் என ரவீந்திரன் அறிவுறுத்தினார். RI தலைவராக இருந்தபோது, ரோட்டரி ஃபவுண்டேஷன் சார்பில் 'பல்லாயிரம் மதிப்பில் ஓர் விருந்து' என்ற நிகழ்ச்சியில் பங்கேற்க நேர்ந்தது. அது இரு ஆண்டுகளுக்கு முன்பே RI தலைவராகப் பரிந்துரைக்கப்பட்ட போதே விடப்பட்ட அழைப்பு. அதில் பங்கேற்றால் என்ன? என்று தோன்றியது.

தலைவர் என்ற முறையில் செலவை மிச்சப்படுத்துவது முக்கியமான அணுகுமுறையாகும். நிகழ்ச்சி

*110, 112 பேர் உள்ள சிறிய குழுவில் இடம்பெற்றுள்ளது எனது அதிர்ஷ்டம். ரோட்டரியால் நல்லது செய்வதற்கான ஆற்றலை மிக உயர்ந்த இடத்திலிருந்து பார்க்க முடிகிறது. உலகத்துக்கு ரோட்டரி எப்படி செயல்படுகிறது என்பதை பருந்துப் பார்வையில் பார்க்க முடிகிறது.*

நெருங்கியபோது அமெரிக்காவின் கிழக்கு மூலையிலிருந்து மேற்கு மூலை நோக்கிப் பயணம் செய்ய வேண்டியிருந்தது. இது தொடர்பாக எனது நண்பர் ஸ்டீவ் ப்ரௌனை அழைத்துக் கேட்டபோது, 'இவ்வளவு தூரம் பயணம் செய்தே ஆக வேண்டுமா? செலவு அதிகமல்லவா?' என்று கேட்டேன். அதற்கு அவர், 'நீங்கள் நிச்சயம் பங்கேற்க வேண்டும். காரணம் உங்களது பெயரைச் சொல்லித்தான் நிதி திரட்டுகிறோம்' என்று கூறினார்.

விமானப் பயணத்தின்போது, அவரிடம், 'எவ்வளவு நிதி திரட்டினீர்கள்?' என்று கேட்டேன். 'அதெல்லாம் ரகசியம். இன்று இரவு கூறுகிறோம்' என்றார். பின்னர் தெரிவிக்கப்பட்டது, திரட்டப்பட்ட நிதி ஒன்றரை கோடி டாலருக்கும் மேல் என அறிந்தேன்.

நிகழ்ச்சியில் நான் பேசி முடித்ததும், ஒருவர் எழுந்து, 'தலைவரே! திரட்டப் பட்ட ஒன்றரை கோடி டாலருக்கு இணையாக நானும் நன்கொடை அளிக்கிறேன். அப்படியானால், மொத்தம் 3.1 கோடி டாலர் அளிக்கிறேன்' என்றார். இது ஓராண்டில் எந்த நாடும் அளிக்கும் தொகையை விட கூடுதல் தொகையாகும்.

இவையெல்லாம் எனது தனிப்பட்ட சாதனையல்ல. நான் சார்ந்த நிறுவனத்தின் சாதனை. நான் கூறியது வெவ்வேறு வகையில் எடுத்துக் கொள்ளப்பட்டது. நான் அனைவரும் மதிக்கும் எனது நிறுவனம் சார்பில் பேசியதால், எல்லோரும் சீரியஸாகக் கவனித்தனர். வரும் காலங்களில் ஒவ்வொருவருக்கும் இந்த வாய்ப்பு கிடைக்கும் என்றார்.

மாவட்ட ஆளுநர்களாகிய நீங்கள் ஒவ்வொருவரும் தனித்த வாய்ப்பு உடையவர்கள். ஒவ்வொருவரும் உங்களது பகுதியின் ரோட்டரி தலைவர்களாக ஆக இயலும். நீங்கள் பேசுவது அனைத்தும் சிறிது கடினமாக இருக்கும். உங்களது செயல்பாடுகள் கவனிக்கப்படும். அவை தொடர்பாகக் கருத்து கூறப்படும். பின் பற்றப்படும். நீங்கள் பதவிக் காலத்தை நிறைவு செய்யும்போது, அவர்கள் 'நான் இவரைப் போல் இருக்க விரும்புகிறேன்' என்று கூறுவார்களா? நீங்கள் ஒரு வழிகாட்டியாகவோ (Role Model) பின்பற்றப்படுபவராகவோ இருப்பது உங்களது விருப்பம். அல்லது யாராலும் கவனிக்கப்படாதவராக இருப்பதும் சரி. சமுதாயத்திற்குப் பலன் அளிக்கக் கூடிய வகையில் உறுப்பினர்களைச் செயல்படத் தூண்டினீர்களா எல்லாமே உங்களது விருப்பம்தான்! என்றார் KR ரவீந்திரன்.

நான் வகித்த பதவி என்பது உங்களால் நல்லது செய்வதற்காக இன்னல்களை ஏற்பதாகும். இதனால்தான் இந்தப் பொறுப்பு கிட்டத்தட்ட அற்புதமான தகுதியை அளிக்கிறது என்றார்.

ரோட்டரியின் செல்வாக்கு, பலத்தை விவரிக்கும் சம்பவத்தை ரவீந்திரன் கூறினார். RI தலைவர் என்ற முறையில் வாடிகனில் போப் பிரான்சிஸைச் சந்திக்கும் வாய்ப்பு பெற்றிருந்தார். அப்போது இரண்டு மணி நேரத்துக்கும் மேல் அவர் காத்திருந்தார். அப்போது போப் சில பணிகள் இருந்ததால், அவரது சந்திப்பு மதியத்துக்கு ஒத்திப் போடப்பட்டது. ஆனால், அன்று மாலை கொரியாவுக்கு விமானப் பயணம் மேற்கொள்ள வேண்டிய கட்டாயம் இருந்ததால், ஏமாற்றமடைந்து, மன்னிக்கவும், காத்திருக்க இயலாது என்று கூறி புறப்பட்டுவிட்டார். போப்பைச் சந்திக்காதது ஏமாற்றமே!

இரு தினங்கள் கழித்து அவருக்கு போப் அலுவலகத்திலிருந்து சந்திக்க இயலாமல் போனதற்கு வருத்தமும், எத்தனை நண்பர்களையும் அழைத்துக் கொண்டு சந்திக்க வரலாம் என்றும் அழைப்பு வந்தது. அதையடுத்து 63

# “நான் பிரபலமானவன் அல்ல என்பது எனக்குத் தெரியும்”



*“திஷர்” மாவட்ட தலைவர்களுக்கான பயிற்சிக் கூட்டத்தில் பேசிய KR ரவீந்திரன் ரோட்டரியின் நற்பெயரைப் போற்றிப் பாதுகாக்கும்படி கேட்டுக் கொண்டார். இந்த நற்பெயர் நேர்மை, நாணயம், நல்லெண்ணம் ஆகியவற்றின் மூலம் இந்த நற்பெயர் கிடைத்தது. சில சமயம் தலைவர்கள் என்ற முறையில் சில முடிவுகளை எடுக்க நேரலாம். அதைத்தான் உங்களிடம் எதிர்பார்க்கிறேன். ரோட்டரியின் சக்தி நல்லனவற்றைச் செய்வதற்குத்தான் என்று ஒவ்வொருவரும் உணர வேண்டும். அந்த சக்தி போலியோ ஒழிப்பில் நாம் செயல்படுத்தினோமே அத்தகையது.*

*ஆனால், ரோட்டரியின் நற்பெயரையும் ஆற்றலையும் தக்க வைத்துக் கொள்ளுங்கள். அவை நெறியற்ற நடத்தைகளுக்கு எதிராக செயல்படவேண்டியுள்ளது. RI தலைவர் என்ற முறையில் ரஷியாவைச் சேர்ந்த ஒருவரையும் இந்தியாவைச் சேர்ந்த ஒருவரையும் நீக்க வேண்டியதாயிற்று. எனக்குத் தெரியும், நான் பிரபலமானவன் அல்ல என்று. ஆனால், பிரபலம் என்பது தானாக ஏற்படுவது. ஆனால், குறையாத மரியாதை கிடைக்கும். அதை அடைவதற்குத்தான் பாடுபட வேண்டும். ரோட்டரி அமைப்பின் நலன் கருதி சில சமயம் புகழ் தராத முடிவுகளை எடுக்க நேரிடும் என்று ரவீந்திரன் கூறினார்.*

*அந்தப் பயிற்சிக் கூட்டத்தில் பங்கேற்றவர்களிடம், குடும்பத்துக்கோ தொழிலுக்கோ முன்பாக ரோட்டரியை வைக்காதீர்கள் என்று கேட்டுக் கொண்டார்.*

*நான் எப்போதும் எளிய தத்துவத்தைக் கடைப்பிடிப்பேன். முதலில் என் குடும்பம், அடுத்து எனது தொழில், அதற்குப் பிறகுதான் ரோட்டரி வேலை. தலைவராக இருந்தபோதும் இவான்ஸ்டன் நகரில் வசித்த போதும் நீங்கலாக இதை உறுதியாகக் கடைப்பிடித்தேன். அதையே நீங்களும் செய்யவேண்டும். உங்களது தொழிலையோ வேலையையோ கவனிக்காவிட்டால், உங்களது குடும்பத்தினர் கூட மதிக்க மாட்டார்கள். காரணம், உங்களது தொழில், வணிகம் போன்றவற்றினால் தான் நீங்கள் முதல் நிலையை அடைந்திருக்கிறீர்கள் என்று அவர் குறிப்பிட்டார்.*

நாடுகளைச் சேர்ந்த 10 ஆயிரம் ரோட்டரியினருடன் அவரைச் சந்திப்போம் என்று அவர் எதிர்பார்த்திருக்க மாட்டார். செயின்ட் பீட்டர் சதுக்கம் முழுவதும் எங்களது ரோட்டரியினரே நிறைந்திருந்தனர். ஆனால், போப் பிரான்சிஸ் இதையெல்லாம் எனக்காகச் செய்யவில்லை. ரோட்டரி என்ற அமைப்பினரைச் சந்திப்பதும் அவர்களுக்கு ஆசி வழங்குவதும் பயனுள்ளது என்று கருதினார் என்றார் KR ரவீந்திரன்.

வாடிகனில் உள்ள உலகின் தலை சிறந்த குழந்தைகள் மருத்துவமனை கம்போடியாவில் தொலைநிலை மருத்துவம் (Tele Medicine) வழியாக கம்போடியாவில் உள்ளவர்களுக்கு ரோட்டரியுடன் இணைந்து சேவை புரிந்தது என்பதை KR ரவீந்திரன் அப்போதுதான் அறிந்து கொண்டார்.

இந்த அளவுக்கு செல்வாக்கும் மரியாதையும் ரோட்டரி பெற்றுள்ள போது, கடலில் ஒரு துளியைப் போல் ஏதாவது சிறிய தவறு நேர்ந்தாலும், அது நமது கவுரவத்தையே சிதைத்து விடும். போலி ரோட்டரி சங்கங்கள், விருதுகள் வழங்குவதற்காகவே தொடங்கப்பட்ட சங்கங்கள், வாக்கு வங்கிகளைப் போல் செயல்படுபவை என்பதை நாம் அறிவோம். தயவு செய்து உங்களது ரோட்டரி சங்கம் ரோட்டரியின் நற்பெயரைச் சிதைக்காமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள் என்றார்.

TRF கருத்தரங்கில் முன்தினம் வாரிசு குறித்த பிரச்சினை எழுப்பப் பட்டதை நினைவு கூர்ந்த ரவீந்திரன், TRF தொடர்பு கொள்வதில் நேர்மையில்லாமல் செயல்படுதல், பலனாளிகளிடமிருந்து பணம் எடுத்துக் கொள்ளுதல், போலி வணிகர்கள், கணவனும் மனைவியும் மட்டும் கணக்கு வழக்குகளைக் கவனித்தல், பழைய கருவிகளைப் புதிய கருவிகளாகக் கூறி, பயன்படுத்துதல், RI அலவன்ஸை முறைகேடாகப் பயன்படுத்துதல் ஆகியவற்றைச் சுட்டிக் காட்டி, இவையெல்லாம் தடுக்கப்பட வேண்டும். அவை நற்பெயருக்கு இழுக்கு தேடித் தரும் என்றார்.

*நான் வகித்த பதவி என்பது உங்களால் நல்லது செய்வதற்காக இன்னல்களை ஏற்பதாகும். இதனால்தான் இந்தப் பொறுப்பு கிட்டத்தட்ட அற்புதமான தகுதியை அளிக்கிறது*

இத்தகைய போக்கு இந்தியாவில் மட்டுமின்றி, ஜப்பானில் மாவட்ட ஆளுநர் மீதும் ரோட்டரி தலைவர் என்ற முறையில் நடவடிக்கை எடுத்திருக்கிறேன் என்று கூறினார்.

அதனால் கோபமடைந்த மாவட்ட ஆளுநர் சிக்காகோவில் உள்ள RI அமைப்புக்கு எதிராக வழக்கு தொடுத்தார். அந்த வழக்கை எதிர்கொள்வதற்கு மிகுந்த பொருட் செலவானது. இந்த விஷயத்தில் எனக்கு ஜப்பானின் மூத்த ரோட்டரி தலைவர்கள் ஆதரவு அளித்தனர். ‘இந்த ஆளுக்கு எதிராகப் போரிடுங்கள். உங்களது வழக்குச் செலவுக்கு நிதி அளிக்கிறோம். இது போன்ற ஆட்கள் எங்கள் நாட்டுக்குத் தேவையில்லை’ என்று கூறினர். இத்தகைய அணுகுமுறை நமக்குத் தேவை என்றார் ரவீந்திரன்.■

# தெற்காசிய ரோட்டரி இன்டர்நேஷனல் அலுவலகத்தின் செய்தி

**குடும்பத்தார் நிர்வகிக்கும் கார்ப்பரேட்டுகள்/குடும்ப அறக்கட்டளைகளிலிருந்து வரும் நன்கொடைகளுக்கு TRF பரிசுக்கான வழிகாட்டல்கள்**

குடும்பத்தார் நிர்வகிக்கும் கார்ப்பரேட்டுகள்/குடும்ப அறக்கட்டளைகளிலிருந்து வரும் நன்கொடைகளுக்கு பரிசுக்கான விதிகளை சமீபத்தில் அறங்காவலர்கள் தெளிவுபடுத்தியுள்ளனர். கார்ப்பரேட் மற்றும் அறக்கட்டளை நன்கொடைகள் அனைத்தும் கார்ப்பரேட்/அறக்கட்டளை பெயரின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டும். கார்ப்பரேட், குடும்பத்தார் நிர்வகிப்பதாகவோ அல்லது அறக்கட்டளை, குடும்பத்தார் நிதி அளிப்பதாகவோ இருந்தால், முக்கிய நன்கொடையாளர் பரிசினைப் பெற அந்த கார்ப்பரேட்/அறக்கட்டளை மேற்குழுவில் உள்ள ஒரு குடும்ப உறுப்பினரை நியமிக்கலாம். குடும்பத்தார் நிர்வகிக்காத பொது அறக்கட்டளைகள் அல்லது கார்ப்பரேட்டுகளிலிருந்து கிடைக்கும் நன்கொடைக்கு கார்ப்பரேட் பரிசினைப் பெறத் தகுதி வாய்ந்தது.

கார்ப்பரேட்/அறக்கட்டளையை குடும்பத்தார் நிர்வகிக்கிறார்கள் அல்லது குடும்பத்தார் நிதி அளிக்கிறார்கள் என்பதை உறுதிசெய்யும் கார்ப்பரேட்/அறக்கட்டளை லெட்டர்பேடில் உள்ள பெறப்பட்ட கடிதத்தின் அடிப்படையில் தனிநபர் முக்கிய நன்கொடையாளர் விருது வழங்கப்படும். தற்போது, இந்த நன் கொடைகள் தனிநபர் நன்கொடையில் சேர்க்கப்படும் நன்கொடையாளர் விவர அறிக்கையில் தனியாகப் பட்டியலிடப்படாது. எதிர்காலத்தில் இந்த பரிசுகள் DHR-இல் பட்டியலிடப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, ஆனால் இதற்கு சில காலம் ஆகலாம்.

**மானிய அறிக்கை காலவரம்பு**

நிலுவையிலுள்ள அனைத்து மானியத் திட்டங்களுக்கும் மார்ச் 31, 2019 வரையிலான செயல்பாடுகளுக்குரிய இடைக்கால அறிக்கைகளை மே 31, 2019 தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும், அதன் பிறகு மானிய அறிக்கைக்கான காலவரம்பு கடந்துவிடும்.

**2018–19 ரோட்டரி ஆண்டுக்கான TRFக்கான நன்கொடைகள்**

2018–19 TRFக்கான நன்கொடைய ஜூன் 30, 2019க்குள் செலுத்த வேண்டும்.

**சரியான சங்க Invoice பெற My Rotary மூலம் உறுப்பினர் சேர்க்கையை புதுப்பிக்கவும்:**

புதிய உறுப்பினர்களை சேர்ப்பது மற்றும் நீக்குவது உட்பட உறுப்பினர் சேர்க்கை தொடர்பான தகவல்களை புதுப்பிக்கும் பொறுப்பில் உள்ள சங்க செயலாளர்கள், ஜூலை 2019-க்கான சரியான இன்வாய்ஸ் பெற, தங்கள் உறுப்பினர் சேர்க்கை விவரங்களை 2019 ஜூன் மாத இறுதிக்குள் புதுப்பிக்க வேண்டும்.

மேலும் தகவல்கள் My Rotary (https://my.rotary.org/en) என்ற வலைதளத்தில் Club Administration பக்கத்தின் கீழ் கிடைக்கும். உறுப்பினர் சேர்க்கை பற்றிய கேள்விகளுக்கு data@rotary.org என்ற முகவரிக்கு மின்னஞ்சல் செய்யுங்கள்.

**என்கேஜிங் யங்கர் புரஃபெஷனல் டூல்கிட்**

என்கேஜிங் யங்கர் புரஃபெஷனல் என்பது ஒரு ஆன்லைன் டூல்கிட், இது பின்வரும் இணைப்பில் கிடைக்கிறது https://www.rotary.org/en/engaging-younger-professionals-toolkit.

**இளைஞர் கலாச்சார பரிமாற்ற அலுவலர்கள் முன்கட்ட சந்திப்பு**

விருப்பமுள்ள ரொட்டேரியன்கள், இளைஞர் கலாச்சார பரிமாற்ற அலுவலர்கள் முன்கட்ட சந்திப்பு மற்றும் மே 31 முதல் ஜூன் 5 வரை ஹேம்பர்க், ஜெர்மனியில் நடைபெறும் RI மாநாட்டில் கலந்துகொள்ளத் திட்டமிடலாம். இந்த இணைப்பின் மூலம் பதிவு செய்யவும் http://www.riconvention.org/en/hamburg/register

**ரோட்டரி இயற்கை பேரிடர் உதவி நிதி மற்றும் மானியம்**

ரோட்டரியின் இயற்கை பேரிடர் உதவி திட்டத்திற்கு துணையாக இருக்க, அறங்காவலர்கள் ஒரு புதிய இயற்கை பேரிடர் உதவி நிதி மற்றும் மானியப் பிரிவுக்கு ஒப்புதல் அளித்துள்ளனர். இயற்கை பேரிடரால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணம் மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்கு இயற்கை பேரிடர் உதவி மானியங்கள் உதவும் மற்றும் இவை ரோட்டரி இயற்கை பேரிடர் உதவி நிதிக்கு கொடுக்கப்பட்ட நன்கொடைகள் மூலம் நிதியளிக்கப்படும். இந்த நிதி பணத்தையும் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதிகளையும் (DDF) ஏற்றுக்கொள்ளும்.

நிதியிருப்பைப் பொறுத்து, பாதிக்கப்பட்ட பகுதி அல்லது நாட்டிலுள்ள தகுதிவாய்ந்த மாவட்டங்கள் அதிகபட்ச மானியம் 25,000 டாலர் வரை விண்ணப்பிக்கலாம். ரோட்டரி இயற்கை பேரிடர் உதவி மானிய விண்ணப்பத்தை மாவட்ட ஆளுநர் மற்றும் மாவட்ட ரோட்டரி ஃபவுண்டேஷன் தலைவர் பூர்த்தி செய்து, grants@rotary.org என்ற முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்ப வேண்டும்.■

# மாவட்ட ஆளுநர்களுக்கான ஆய்வுக் கூட்டம்

ரோட்டரி செய்திக் குழு

ரோட்டரி மண்டல ஆளுநர்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் கொடைக்கானலில் கடந்த மார்ச் மாதம் நடைபெற்றது. இக்கூட்டத்தை இயக்குநர் C பாஸ்கர் நடத்தினார். உறுப்பினர்கள் நிலவரம், ரோட்டரி ஃபவுண்டேஷனுக்கு அளிக்கும் நன்கொடை, போலியோ ஒழிப்பில் பங்களிப்பு, ரோட்டரிக்குப் புகழ் சேர்ப்பதில் காட்டும் ஆர்வம், செயல்பாடுகள், மாவட்ட கணக்குகளைச் சரி பார்த்தல் ஆகிய மாவட்ட ரோட்டரி அமைப்புகளின் செயல்பாடுகள், சாதனைகள் குறித்து அந்தக் கூட்டத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

தொடக்க நிகழ்ச்சியில், மாவட்டங்களின் பல்வேறு செயல்பாடுகளை பாஸ்கர் தொகுத்து விவரித்தார். எல்லா மாவட்ட ரோட்டரி அமைப்புகளும் சிறந்த வகையில் செயல்படுகின்றன என்று குறிப்பிட்ட அவர், இந்த ரோட்டரி ஆண்டு மறக்க முடியாத சிறந்த நிகழ்வுகளுடன் நிறைவடையும்படி ஆளுநர்கள் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

RID 3190வது மாவட்டத்தின் ஆளுநர் சுரேஷ் ஹரி பேசுகையில், மண்டல, பிராந்திய தலைவர்கள் தங்களது மண்டல ஆய்வுகளை அளித்தனர் என்றார்.

ரோட்டரி ஒருங்கிணைப்பாளர்கள் ராஜேந்திர ராய், அசோக் குப்தா ஆகியோர் உறுப்பினர்களின் எண்ணிக்கை வளர்ச்சி குறித்து விவரித்தனர். அறக்கட்டளை மற்றும் பெருங்கொடை ஆலோசகர்கள் (Endowment Major Gifts Advisor and EMGA) அசோக் பஞ்ச்வாணி, சாம் பதிபண்ட்லா அறக்கட்டளை மற்றும் பெருங்கொடைகள் குறித்து விளக்கினார்.

மண்டல ரோட்டரி அறக்கட்டளை ஒருங்கிணைப்பாளர்கள் (Regional Rotary Foundation Coordinator

*ஆய்வுக் கூட்டத்தில் RID C பாஸ்கர்; மாவட்ட ஆளுநர்கள் மற்றும் சாம் பதிபந்தலா, EK சகாதேவன், ராஜதுரை மைக்கெல், விஜய் ஜலான் ஆகியோருடன்.*



and RRFC) அவினாஷ் போத்தார், விஜய் ஜலான் ஆகியோர் ரோட்டரி ஃபவுண்டேஷனுக்குப் பங்களிப்பதில் மாவட்டங்களின் செயல்பாடுகள் குறித்து தொகுத்தளித்தனர்.

Rotary Public Image Coordinators ஆஷிஷ் தேசாய், ராஜதுரை மைக்கேல் ஆகியோர் ரோட்டரியின் புகழை உயர்த்துவதற்கான செயல் மற்றும் முன்னேற்றம் குறித்த அறிக்கையை அளித்தார். RI தெற்காசிய அலுவலகத்தை சேர்ந்த ஜதீந்தர் சிங் மாவட்ட கணக்குவழக்கு கள் குறித்தும், சஞ்சய் பார்மர் TRFக்கான பங்களிப்பு உள்ளிட்டவை குறித்தும் பேசினர். போலியோ ஒழிப்புக்கான பங்களிப்பு குறித்து முன்னாள் மாவட்ட ஆளுநர்கள் EK சகாதேவன், கேசவ் கன்வர் ஆகியோர் விளக்கவுரை நிகழ்த்தினர்.

கன்னியாகுமரி யிலிருந்து பஞ்சாப் எல்லை அட்டாரி வரையிலான அமைதிப் பயணம் மேற்கொள்வது குறித்து மாவட்ட ஆளுநர் சுரேஷ் ஹரி விளக்கினார். பஞ்சாப் எல்லையில் இந்திய, பாகிஸ்தான் ரோட்டரியினர் தங்களது ரோட்டரி சங்கக் கொடிகளைப் பரிமாறிக் கொள்ள இருக்கின்றனர். இந்த அமைதிப் பயணம் தொடங்கும் இடத்திலும் நிறைவடையும் இடத்திலும் கோபுரம் அமைக்கப்படும். அதற்கான மாதிரி வடிவமைப்பு பகிர்ந்து கொள்ளப்பட்டது.

RC பெங்களூரு ஆர்ச்சர்ட்ஸ் தலைவர் D ரவிசங்கரின் செல்ல மான திட்டமாகும். அவர் தான் 100 கோடி நன்கொடை அளித்த பெருங்கொடையாளர்.

கூட்டத்தை நிறைவு செய்த இயக்குநர் C பாஸ்கர், தங்களது ஆற்றலைச் சிறந்த வகையில் வெளிப்படுத்தியதற்காக மாவட்ட ஆளுநர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

RID 3000வது மாவட்ட ஆளுநர் RVN கண்ணன் இந்தக் கூட்டத்திற்கு அனைத்து ஏற்பாடும் செய்தார்.■





# ரோட்டரியில் 31ஆண்டுகளாக ஜொலிக்கும் மகளிர்

ஜெய்ஸ்ரீ



ரோட்டரி அமைப்பு 114 ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்டது என்றாலும் பெண்கள் உறுப்பினர்களாக இடம் பெறத் தொடங்கியது 31 ஆண்டுகளுக்கு முன்புதான்.

இத்தகவலை RID 3201 ஆளுநர் AV பதியின் மனைவி வீணா பதி கூறினார். பெண்கள் உறுப்பினர்களாகச் சேர்ந்ததை ஒட்டி மாவட்ட ரோட்டரி அமைப்பு சார்பில் இரண்டாவது ஆண்டு மாநாட்டு விழா கொச்சியில் அண்மையில் கோலாகலமாக நடைபெற்றது. இன்ஸ்பயர் 2019 (Inspire 2k19) என்ற பெயரில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சிக்கு 20 ரோட்டரி சங்கங்களிலிருந்து 180 ரோட்டரி உறுப்பினர்கள் பங்கேற்றனர்.

மாநாட்டைத் தொடங்கிவைத்துப் பேசிய மாவட்ட ஆளுநர் பதி, பெண்களை ரோட்டரி அமைப்பில் இணைப்பது சமத்துவத்தைக் காப்பாற்றுவதற்கு மட்டுமல்ல. பன்முகத் தன்மை எப்போதும் அதிக பலன்களைத் தரும். வணிக, சமுதாயப் பணிகளில் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. அவர்கள் ரோட்டரி மூலம் உரிய பங்களிப்பைச் செலுத்த இயலும். அவர்களை ரோட்டரியில் ஈர்ப்பதற்கு நாம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

1950ம் ஆண்டில் இந்தியாவில் ரோட்டரி சங்க தரச் சட்டத்தில் உள்ள ஆண் என்ற சொல்லை நீக்கலாம் என்று அகமதாபாத் ரோட்டரி சங்கம் பரிந்துரைத்தது. ஆனால், அதை ரோட்டரி சட்டவிதிகளின் கவுன்சில் (CoL) கூட்டத்தில் ஏற்கப்படவில்லை. அதன் பின் 1964, 1972, 1977 ஆகிய ஆண்டுகளிலும் இதுபோன்ற தீர்மானங்கள் நிராகரிக்கப்பட்டன.

பிறகு 1978ம் ஆண்டு கலிபோர்னியா மாகாணத்தின் டுவார்த்தே ரோட்டரி சங்கத்தில் (RC Duarte) பெண்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டதால், RI சட்டத்துக்கு விரோதமானது என்று கூறி அந்த ரோட்டரி சங்கம் சர்வதேச



DG AV *பதி மற்றும் வீணா* AG *கிருஷ்ணா ஸ்ரீதரன், நீதிபதி* AK *ஜெயசங்ரன் நம்பியார்,* PDG *சுனில் சக்காரியா மற்றும் லக்ஷ்மி நாராயணன் முன்னிலையில் துவக்கி வைக்கின்றனர்.*




அமைப்பிலிருந்து நீக்கப்பட்டது. அதை எதிர்த்து அந்த ரோட்டரி சங்கம் வழக்கு தொடுத்தது. ஆனால், அதிலும் வெற்றி பெறவில்லை.

ரோட்டரி சங்கங்கள் பெண்களை இனிமேலும் ஒதுக்கக்கூடாது, உறுப்பினர்களாகச் சேர்ப்பதில் பாரபட்சம் கூடாது என்று அமெரிக்க உச்ச நீதிமன்றம் 1978 மே 4ம் தேதி உத்தரவிட்டதை அடுத்து, டுவார்த்தே ரோட்டரி சங்கம் மீண்டும் RI அமைப்பில் இணைத்துக் கொள்ளப்பட்டது. அந்த சங்கத்தின் தலைவராக ஒரு பெண்மணி பொறுப்பேற்றார்.

இன்று உலக அளவில் இரண்டு லட்சம் பெண்கள் ரோட்டரி உறுப்பினர்களாக இருக்கிறார்கள்.

பெண்களாகிய நாம் மிகப் பெரிய போராட்டத்துக்குப் பிறகே ரோட்டரியில் இணைய முடிந்தது. இந்த முடிவை எடுத்ததற்கு நான் நன்றி கூறிக் கொள்கிறேன் என்று கொச்சி ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர் ஸ்வேதா வாசுதேவன் கூறினார்.

'ரோட்டரியில் வேரூன்றினோம்' என்ற தலைப்பில் பேசிய அவர், எனது கால்கள் ரோட்டரியில் பதியப்பட்டுள்ளன. ரோட்டரியில் இரண்டாவது தலைமுறையைச் சேர்ந்த நான் குழந்தையாக இருந்தது முதல் ரோட்டரி உறுப்பினரான தந்தையுடன் ரோட்டரியில் பழகி வந்துள்ளேன். ரோட்டரி உறுப்பினர்கள் என்ற அடித்தளத்தைப் பராமரிக்கவும் விரிவுபடுத்தவும் பாலின பன்முகத் தன்மை மிகவும் முக்கியம். அதே சமயம் சில இடங்களில் தன்னார்வ சேவைத் திட்டங்களில் ஆண்களை விடபெண்கள் அதிகம் ஈடுபடுகிறார்கள். வேகமாகவும் செயல்படுகிறார்கள். பெண்கள் பிறவியிலேயே கருணையுள்ளவர்களாகவும் பல்வேறு சவால்களை எதிர்கொள்ளும் திறனுள்ளவர்கள் என்பதாலும் ரோட்டரியில் அதிக பெண்கள் இடம்பெறுவதால், பலன்கள் விரைவாகவும் சரியாகவும் போய்ச் சேருகின்றன என்றும் ஸ்வேதா குறிப்பிட்டார்.

ரோட்டரி பெண்களின் மாவட்ட தலைவர் லட்சுமி நாராயணன் பேசு கையில், பெண்கள் அதிக அளவில் சேருவதற்காக நாம் கடுமையாகப் பாடுபடவேண்டும். அவர்களை யாரும் வரவேற்பதில்லை என்ற கதையை நிராகரிக்க வேண்டும். உற்சாகமான உறுப்பினர்களைச் சார்ந்து தான் ரோட்டரியின் எதிர்காலமே அமைந்துள்ளது என்றார்.

கொச்சி ரோட்டரியில் ஒரு காலத்தில் உறுப்பினராக இருந்த கேரள உயர் நீதிமன்ற நீதிபதி A.K. ஜெயசங்கரன் நம்பியார் பெண்களின் உரிமைகள், சட்டங்கள் குறித்துப் பேசினார். ரோட்டரியால் பலன்பெற்ற நான்கு பேர் தங்களது வாழ்க்கையை ரோட்டரி எப்படி மாற்றியது என்பதை விவரித்தனர்.

கொச்சி ரோட்டரியின் ஆதரவில் இயங்கும் RCCஐ சேர்ந்த அஜிதா தனது கிராமத்தை ரோட்டரி எப்படி மாற்றியது என்று விவரித்தார். பள்ளிகளிலும் ஒரு மருத்துவ மனையிலும் கட்டடங்கள் கட்டித் தந்தும் இக்கிராமத்தில் 1990ம் ஆண்டு முதல் பல சமுதாயப் பணிகளைச் செய்து வருகிறது.

கொச்சி குளோபல் ரோட்டரி சங்கத்தின் சூர்யா திட்டம் பார்வையற்றோருக்குச் சேவை புரிவதில் ஈடுபட்டுள்ளது. அவர்களுக்குத் திறன் பயிற்சி. நடமாடும் வகுப்புகள், ஆங்கிலப் பயிற்சி, ஆளுமைப் பயிற்சி ஆகிவற்றையும் அளித்து வருகிறது. இத்திட்டத்தால் பலன்பெற்ற சுசீலா, ருவானி ஆகியோர் தங்களது வாழ்க்கையை ரோட்டரி எவ்வாறு மாற்றிவிட்டது என்று விவரித்தனர்.

நெசவுக்குப் பெயர் பெற்ற சேந்தமண்டலம் கிராமத்தைச் சேர்ந்த சரிதா கரியாப்பள்ளி கொச்சி நைட்ஸ் ரோட்டரி சங்கம் அந்த கிராமத்தில் நெசவுத் தொழிலை மீட்டெடுக்க உதவியது பற்றி கூறினார். தான் நெய்யும் இழைகள், நூல்களை சங்கமே வாங்குவதாகவும் கூறினார். ரோட்டரி வெள்ளம் பாதித்த பகுதிகளிலும் நல்ல சேவைகளைப் புரிந்துள்ளது என்றார்.■

Rotary PEOPLE OF ACTION

# பள்ளிகளை மேம்படுத்தும் மெட்ராஸ் சென்ட்ரல் சங்கம்

ரஷீதா பகத்

இந்த சூழ்நிலையைக் கொஞ்சம் கவனியுங்கள். மத்திய சென்னை ரோட்டரி சங்கம் (RC மெட்ராஸ் சென்ட்ரல்) (RID 3232) நிறைய நிதியுடன் காத்திருக்கிறது. மிக மோசமான, சேதமடைந்த, போதிய வசதியில்லாத அரசுப் பள்ளிகளை மகிழ்ச்சிப் பள்ளிகளாக மாற்றி, ஆண்-பெண் தனித்தனிக் கழிப்பறைகள், கை கழுவும் வசதி, பள்ளிக் கட்டடத்திற்கு மேசைகள், மேசை நாற்காலிகளுக்கு வண்ணம் பூசுவதற்குப் பயன்படுத்துவதற்காக அந்த நிதி கைவசம் வைக்கப்பட்டுள்ளது. ஆனால், அரசு நடைமுறையில் காணப்படும் மெத்தனம் காரணமாக அவற்றை நிறைவேற்றுவதற்கான அனுமதிக்கு காத்திருக்க நேர்ந்தது.

அதே சமயம் இரு பள்ளிகளின் முதல்வர்கள் காட்டிய உற்சாகத்தால் சென்னை பொன்னேரியிலும் எண்ணூரிலும் உள்ள இரு அரசுப் பள்ளிகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் இச்சங்கம் செய்து தந்துள்ளது. புதுப்பிக்கப்பட்ட இரு பள்ளிகளையும் DG பாபு பேரம் அண்மையில் திறந்துவைத்தார்.

ஆறு மாதங்களுக்கு முன் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த குழுவினர் சென்னை பெருநகர மாநகராட்சிப் பள்ளிகளின் மோசமான நிலைகள் குறித்து விவாதித்தனர். அப்பள்ளிகளை



தங்களது ரோட்டரி சங்கம் புதுப்பித்து மகிழ்ச்சிப் பள்ளிகளாக மாற்றுவது என்று கூட்டத்தில் முடிவெடுத்தனர்.

மத்திய சென்னை ரோட்டரி சங்கத்திலிருந்து சிறப்புத் திட்ட இயக்குநரும் முன்னாள் தலைவருமான வினோத் சாரோகி தலைமையில், சமுதாய சேவை மேம்பாட்டு இயக்குநர் M ஸ்ரீநிவாசன், மகிழ்ச்சிப் பள்ளிகள் குழுத் தலைவர் KP ஸ்ரீகுமார் ஆகியோர் கொண்ட குழு முதலில் அரசுப் பள்ளிகளைப் பற்றிய தகவல்களைத் திரட்டி, பள்ளிகளின் தேவைகள் குறித்து கண்டறிவது என முடிவு செய்தது. அதில், பல பள்ளிகளில் வகுப்பறைகள், தரைகள், கரும்பலகைகள், கதவுகள் சேத மடைந்திருந்தன. மேசை பெஞ்சுகள் இதர பொருட்கள் ஓட்டை, உடைசல் களாக இருந்தன. கூரைகள் ஒழுகும் நிலையில் இருந்தன. மின்சார இணைப்புகளோ, மின் விளக்குகளோ இல்லை. இப்படி பல சீர்கேடுகளை அக்குழு கண்டது.

**தொடக்கம்**

இத்திட்டத்தைச் செயல்படுத்த வினோத் சாரோகி முனைப்புடன் இறங்கினார். இது குறித்து ஸ்ரீகுமார், ஒரு முதலீட்டு வர்த்தகர் என்றாலும் ஆசிரியர் தொழில் மீது எனக்கு ஆர்வம் உள்ளதால், நானும் ஸ்ரீநிவாசன், எங்களது சங்கத் தலைவர் R சரண்யன் ஆகியோருடன் இணைந்து, இத்திட்டத்துக்கு துணைபுரிந்தோம் என்று கூறினார்.

முதலில் அவர்கள் தேர்ந்தெடுத்தது மேடவாக்கத்தில் உள்ள அரசுப் பள்ளியை. அங்கே 3வது, 4வது, 5வது ஆகிய மூன்று வகுப்புகளுக்கு ஒரே பொது அறையில் நடத்தப்பட்டன. 90 மாணவர்கள் ஒரே இடத்தில் அடைக்கப்பட்டிருந்தனர். அப்பள்ளியின் ஆசிரியர்கள் இரு தடுப்புப் பிரிவுகளை அமைத்துத் தரக் கேட்டனர். அப்போது மாணவர்களுக்கு ஒரு வகுப்பை முடித்து தேர்ச்சி பெற்று, அடுத்த வகுப்பில் படிப்பதை உணர்வார்கள் என்றார் அவர்.

*மூன்று வகுப்புகளைச் சேர்ந்த 90 மாணவர்கள் ஒரே அறையில் அடைக்கப்பட்டிருந்தனர். ஆசிரியர்கள் எங்களிடம் தடுப்பு பிரிவுகளையாவது செய்து தருமாறு கேட்டனர்.*

**KP ஸ்ரீகுமார்**
**தலைவர்**
**மகிழ்ச்சி பள்ளிகள் திட்டக்குழு**



அதையடுத்து, ரோட்டரி அமைப்பினர் அவ்வாறு வகுப்புகளைப் பிரித்து அமைக்க இசைந்தனர். அதற்கு ஆரம்ப நிதியை சாரோகி அளித்தார். மோகன் கோயங்கா என்ற அவரது நண்பர் ரூ.5.5 லட்சம் அளிக்க முன் வந்தார். ரோட்டரி சங்க உறுப்பினர் பூவரன் திருமலை ரூ.5 லட்சம் தருவதாக அறிவித்தார். வகுப்புகளைப் பிரித்து கட்டமைப்பது கடினமாக இருக்கவில்லை. ஆனால், அதற்கு அரசிடமிருந்து அனுமதி கிடைப்பதில் சிரமம் இருந்தது.

அதற்காக அனுப்பப்பட்ட கோப்பு கள் அரசு அலுவலகங்களில் தூங்கிக் கொண்டிருந்தன. இரு பள்ளிகளின் முதல்வர்கள் உற்சாகத்துடன் அவற்றை எப்படியாவது தேடிக் கண்டு அனுமதி பெறுவதற்குப் பெரிதும் துணை புரிந்தனர். அதிர்ஷ்டவசமாக ரோட்டரி அமைப்பினர் அந்த பள்ளி முதல்வர்களை அடையாளம் கண்டனர்.

இந்த இரு பள்ளிகளிலும் குறைந்தது 50 சதவீதம் பேர் பெண்கள் என்பது குறிப்பிடத் தக்கது. அந்த இரு பள்ளிகளில் ஒன்று பொன்னேரியில் உள்ள ஜெயகோபால் கரோடியா அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, மற்றொன்று எண்ணூர் கத்திவாக்கத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளி ஆகும். பொன்னேரி பள்ளியில் படிக்கும் 1,631 பேரும் மாணவியர். கத்திவாக்கம் பள்ளியில் 797 மாணவர்களும் 794 மாணவியரும் உள்ளனர்.



அப்பள்ளி மாநகர குடிநீர் வாரியத்தின் லாரி தண்ணீரையே சார்ந்திருந்தது.

பெண்கள் பள்ளிக்கூடம் என்பதால், முதலில் 200 மீட்டர் சுற்றளவுக்கு இரு புறக் கதவுகளுடன் சுற்றுச் சுவர் அமைக்கப்பட்டது. தரைகள், பெஞ்சுகள் புதுப்பிக்கப்பட்டன. தங்களது பள்ளிக்கூடம் மாற்றம் பெற்று மகிழ்ச்சிப் பள்ளியாக உருமாறியதைக் கண்டு பள்ளி முதல்வர், ஆசிரியைகள், மாணவர்கள் என அனைத்துத் தரப்பினரும் மகிழ்ச்சி அடைந்தனர் என்று ஸ்ரீகுமார் கூறினார்.

கத்திவாக்கம் பள்ளியின் நிலைமை மிகவும் மோசமாக இருந்தது. அப்பள்ளிக்குச் சுற்றுச்சுவர் இருந்தாலும், விஷமிகள் அவற்றை உடைத்து பள்ளிக்குள் இரவு நேரத்தில் நுழைந்து வகுப்பறைகளில் சமூக விரோதச் செயல்களைச் செய்து வந்தனர். நாய்கள் வகுப்பறைகளுக்குள் நுழைந்து வந்தன.

பள்ளிக்குக் காலையில் படிப்பதற்காக வரும் மாணவர்கள் வகுப்பறைகளில் அசிங்கத்தையும், காலியான மதுப்பாட்டில்களையும்

### மாற்றம்

இரு பள்ளிகளுமே மோசமான நிலையில் இருந்தன. பொன்னேரி பள்ளியில் 1631 மாணவிகளுக்கு ஒரே ஒரு கழிப்பறைதான் செயல்படும் நிலையில் உள்ளது. பல மாணவிகள் பள்ளிக்கூடத்தில் கழிவறையைப் பயன்படுத்தாததால், உடல் நலம் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, ரோட்டரி சங்கம் முதலில் கழிவறைகளைக் கட்டித் தரத் தொடங்கியது. புதிதாகத் தரைகள், கதவுகள், தண்ணீர் வசதி ஆகியவை நிறைவேற்றப்பட்டன. அதுவரை



DG பாபு பேரம் பள்ளிக் குழந்தைகளிடம் உரையாற்றுகிறார்.

பார்த்தால் எப்படியிருக்கும்? பாவம், அவர்களே அந்தக் குப்பைகளை அகற்ற வேண்டும். மாணவர்களையே வேறு வழியின்றி சுத்தப்படுத்தும் படி எத்தனை முறைதான் பள்ளி முதல்வரும் கேட்டுக் கேட்டு அலுத்துப் போயிருப்பார்? என்றார் ஸ்ரீகுமார்.

பல பள்ளிகளைப் போல் இந்தப் பள்ளியிலும் போதிய இட வசதி உள்ளது. 25 அறைகளில் வகுப்புகளை நடத்தலாம். அவை அனைத்தும் புதுப்பிக்கப்பட்டன. பெயிண்ட் அடிக்கப்பட்டு பளிச்சிடுகிறது. மின்சார இணைப்புகள் வழங்கப்பட்டு, பல்புகள், மின் விசிறிகள் மாற்றப்பட்டன. ஜன்னல்களில் கம்பி வலைகள் போடப்பட்டன. தரைகள் செப்பனிடப்பட்டு, கழிவறைகள் கட்டித் தரப்பட்டன. போதிய தண்ணீர் சப்ளையும் உறுதி செய்யப்பட்டது. இதுவரை ஒரே ஒரு கழிவறைதான், அதுவும் பெண்களுக்காக பயன்படுத்தப்பட்டது. மாணவர்கள் திறந்த வெளியைத்தான் பயன்படுத்தினர். தற்போது



*மாணவியருடன் சிறப்புத்திட்ட இயக்குனர் வினோத் சாரோகி.*

மூன்று கழிவறைகள் கட்டப்பட்டு இயங்குகின்றன. இந்த மாற்றத்தைப் பள்ளியின் முதல்வர், ஆசிரியர்கள், மாணவர்களாலேயே நம்ப முடியவில்லை. அவர்களது முகத்தில் காணப்படும் புன்னகையே பெரிய பரிசாக அமைந்தது. புதுப்பிக்கப்பட்ட கட்டடத்துக்கு மத்திய சென்னை ரோட்டரி சங்கத்தின் பெயர் சூட்டப்பட்டுள்ளது என்றார்.

புதுப்பிக்கப்பட்ட இரு பள்ளிகளின் தொடக்க விழாவில், இதற்கு நிதியுதவி அளித்த பல்கிட் மெட்டல்ஸ் (Pulkit Metals) நிறுவனத்தின் வினோத் கர்க், லெதர் கிராப்ட்ஸ் (Leather Crafts) நிறுவனத்தின் மோகன் கோயங்கா, கோ கலர்ஸ் (Go Colors) நிறுவனத்தின் உஷா சாரோகி, சாரோகி குடும்பத்தினர் கௌரவிக்கப்பட்டனர்.



பொன்னேரி பள்ளியில் மின்சார விளக்கு, மின் விசிறி, இணைப்பு வசதிகளை அளித்து உதவிய ரோட்டரி உறுப்பினர் GS அனில்குமார், கைகழுவும் வசதியை ஏற்படுத்திய சுதர்சன் ரங்க்தா, கத்திவாக்கம் பள்ளியில் அதைப் போல் இரு இடங்களில் கைகழுவும் வசதிகளை அமைத்துத் தந்த M ஸ்ரீநிவாசன், நிதித் தேவை ஏற்படும்போதெல்லாம் கைகொடுத்த ஸ்ரீகுமார் ஆகியோரது பணிகளை மறக்கவே முடியாது என்று ரோட்டரி சங்கத் தலைவர் சரண்யன் புகழ்ந்தார்.

இந்த முன்னோடித் திட்டத்தினால், இரு பள்ளிகளையும் சேர்ந்த 3,222 மாணவ மாணவியர் பலன் பெற்றுள்ளனர். அவர்கள் இனிமேல், வசதியாகவும் அமைதியாகவும் கல்வி கற்பார்கள். அத்துடன் அவர்களது சுகாதாரமும் காக்கப்படும் என்றார்.



இந்த வசதிகளைத் தொடர்ந்து பெறுவதற்கு சீராகப் பராமரிக்க பள்ளி முதல்வர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆளுநர் பாபு பேரம் கேட்டுக் கொண்டார். இந்தப் பள்ளிகளின் வசதிகள் சீராகப் பராமரிக்கப்படும் வகையில் பள்ளிகளுடன் ரோட்டரி சங்கம் தொடர்பில் இருக்கும் என்று ரோட்டரி சங்கத் தலைவர் சரண்யன் மாவட்ட ஆளுநருக்கு உறுதியளித்தார். மகளிர் ரோட்டரி அமைப்பினர் அந்தப் பள்ளிகளுக்கு அவ்வப்போது சென்று, சுகாதாரம், உடல் நலம் ஆகியவை குறித்து மாணவ, மாணவியருடன் கலந்த பேச திட்டமிடப்பட்டுள்ளது. இந்தப் பள்ளிகளில் மாணவர்களை இணைக்கும் ரோட்டராக்ட் சங்கங்களை அமைக்கவும் திட்டமுள்ளது.

*இந்த வசதிகள் அந்த அரசுப் பள்ளிகளை தனியார் பள்ளிகள் நிலைக்கு உயர்த்தும். கல்வியின் தரமும் உயரும்.*

**R சரண்யன்**
**தலைவர்**
**RC மெட்ராஸ் சென்ட்ரல்**

### இரண்டாம் கட்டப் பணி

அடுத்த கட்டப் பணியில் இரு பள்ளிகளிலும் கம்ப்யூட்டர் ஆய்வகத்தை அமைக்கவும் ஒவ்வோர் ஆய்வகத்திலும் 25 கணிப்பொறிகளை நிறுவவும் ரோட்டரி சங்கம் திட்டமிட்டுள்ளது என்று ரோட்டரி தலைவர் தெரிவித்தார். அத்துடன் மின்வழிப் பயிற்சி சாதனங்கள் (E-Learning Kits) அளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், கல்வி வேலைவாய்ப்பு வழிகாட்டல் மற்றும் ஆற்றுப்படுத்தல், விளையாட்டு நடவடிக்கைகள், நூலக வசதிகள் ஆகியவையும் அளிக்கப்படும். அவ்வப்போது மாணவர்களுக்காக மருத்துவ முகாம்கள் நடத்தப்படும். இந்த வசதிகள் அந்த அரசுப் பள்ளிகளை தனியார் பள்ளிகள் நிலைக்கு உயர்த்தும். கல்வியின் தரமும் உயரும். பள்ளிப் படிப்பை இடையில் நிறுத்தும் போக்கும் நீங்கும் என்று அவர் கூறினார்.

இரண்டு ஆண்டுகளில் இத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்துவதும் மேலும் 25 மகிழ்ச்சிப் பள்ளிகளை உருவாக்குவதும் இலக்கு. கல்வி எல்லோருடைய நெஞ்சிலும் முக்கியத்துவம் பெற்றுள்ளதால், நிதியைத் திரட்டுவது கடினமல்ல எனக் கண்டறிந்துள்ளோம்.

ஒவ்வொரு பள்ளிக்கும் சுமார் ரூ.13 லட்சம் செலவாகிறது. நிதி திரட்டும் வழி தெரிந்துள்ளதால், தற்போது 25 பள்ளிகளை மாற்ற இயலும் என்ற நம்பிக்கை வந்திருக்கிறது. அதற்காக உலகம் முழுதும் உள்ள அனைத்து ரோட்டரி சங்கங்களிடம் வேண்டுகோள் விடுக்கலாம். இத்திட்டத்தை உலகளாவிய நிதியில் செயல்படுத்தப்படும் திட்டமாக்கலாம்.

ரோட்டரி உறுப்பினர்கள் வசதி கள் தேவைப்படும் பள்ளிகள் எவை என்று கண்டறிந்துள்ளனர். அதற்கு நிதி திரட்டுவதில் நம்பிக்கையோடு இருக்கிறார்கள். உண்மையில் ஓரளவு நிதி பயன்படுத்தப்படாமல் உள்ளது. உதவி பெறும் பள்ளியில் குறைந்தது பாதிப் பெண்கள் உள்பட 500 பேராவது படிக்க வேண்டும் என்பதுதான் ஒரே நிபந்தனையாகும். ஆனால், அரசின் ஒப்புதலுக்காகக் காத்திருக்கிறோம் என்றார் ஸ்ரீகுமார்.

ரோட்டரி சங்கம் முதலில் எடுத்துக் கொண்ட மேடவாக்கம் பள்ளியில் வசதிகளைச் செய்து தருவதற்கு அந்தப் பள்ளி அரசின் அனுமதிக்காக இன்னும் காத்துக் கொண்டிருக்கிறது.■

# சில்க் ஸ்கிரீன் பிரிண்டிங் கலையைக் கற்கும் பெண்கள்

ரோட்டரி செய்திக்குழு



மேலே: பயிற்சியாளர்களின் கைவண்ணங்கள்.

கீழே: பயிற்சி கூடத்தில் மகளிர்.



RC கிரீன்லேண்ட் சில்சர், RID 3240, மாவட்ட தொழில் மற்றும் வணிக மையத்துடன் இணைந்து மூன்று நாள் பயிற்சி பட்டறையை ஏற்பாடு செய்தது, இதில் 25 பெண்கள் கலந்து கொண்டு சில்க் ஸ்கிரீன் பிரிண்டிங் செய்வதைக் கற்றனர். அஸ்ஸாம் பல்கலைக்கழக விஷுவல் ஆர்ட்ஸ் துறையின் முன்னாள் மாணவர்கள் இப்பயிற்சியை வழங்கினர்.

செரிகிராஃபி என்று அழைக்கப்படும் இந்தக் கலை கையிதழ்கள் மற்றும் அழைப்பிதழ்களை வடிவமைப்பதற்கு பரவலாகப் பயன்படுத்தப்படுகிறது. பயிற்சியாளர்கள் சணல், துணி மற்றும் ரெக்ஸின் போன்றவற்றில் பல்வேறு வடிவமைப்புகளை உருவாக்க கற்றுக் கொடுத்தனர். பயிற்சி பட்டறையின் முடிவில் மேஜை விரிப்புகள், ஜாக்கெட் துணிகள், பைகள், மெத்தை விரிப்புகள் மற்றும் தரை விரிப்புகள் போன்றவற்றை கவர்ச்சிகரமாக வடிவமைக்க கற்றுக் கொண்டதால் பயிற்சி பெற்றவர்கள் குதூகலத்துடன் இருந்தனர் என்று சங்க செயலாளர் அதனு நாக் கூறுகிறார்.

அவர்களின் படைப்புகள், கண்காட்சியில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது, இது அவர்களின் திறமையை பிரபலப் படுத்துவதற்கு உதவியாக இருந்தது. ரொட்டேரியன்கள் மற்றும் உள்ளூர்வாசிகளிடமிருந்து சிலருக்கு ஆர்டர்கள் கிடைத்தது என்றார் நாக். ■

# பிஞ்சு இதயங்களை காக்கும் மீனம்பாக்கம் ரோட்டரி சங்கம்

கிரண் ஜெஹரா




சென்னையைச் சேர்ந்த நான்சி என்ற நான்கு மாதக் குழந்தை உயிருடன் இருப்பதற்கு ஒரே சாட்சி அவள் மூச்சு விடும் சமயம் சிறிய மார்பகம் ஏறி இறங்குவது தான். அவளுடைய எடை வெறும் 1 கிலோவிற்கும் குறைவு. சென்னையில் உள்ள MIOT மருத்துவ மனையில் உள்ள ICU-இல் அனுமதிக்கப்பட்டிருந்தாள். மருத்துவமனை நடைபாதை யில் தூங்குவது, ஒரு நாளைக்கு ஒரு வேளை சாப்பிடுவது எங்களுக்கு ஒரு பிரச்சனையே இல்லை, ஆனால் நான்சி உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கிறாள் என்று அவள் தாயார் சொல்கிறார். குழந்தையின் ஆரோக்கியம் முன்னேறுவதைப் பார்த்து அவர் இப்போது நிம்மதி அடைகிறார், இதற்குக் காரணம், RC மீனம்பாக்கம், RID 3232 வின் லிட்டில் பிக் ஹார்ட்ஸ் திட்டம் தான். இந்த ரோட்டரி முயற்சியானது பிறக்கும்போதே இதய குறைபாடுகளுடன் (CHD) பிறக்கும் வறுமையில் வாடும் குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கான அறுவைச் சிகிச்சைகளை செய்கிறது.

இதுவரை, இந்த சங்கம் TRF, RI மாவட்டங்கள் 3232, 9800 மற்றும் 7040-ஐச் சேர்ந்த ரோட்டரி சங்கங்கள் மற்றும் ஜெனிசிஸ் அறக்கட்டளை யுடன் இணைந்து 100 குழந்தைகளுக்கு இதுபோன்ற அறுவைச்சிகிச்சைகளைச் செய்துள்ளது, என்கிறார் இதை எடுத்து நடத்தும் சங்கத்தின் திட்டத் தலைவர் B தாட்சாயிணி. MIOT மருத்துவமனையில் திட்டத்தின் மைல்கல்லை நினைவுகூறும் ஒரு நிகழ்வில், வெற்றிக்கான வாய்ப்பை நீங்கள் கண்டீர்கள், தடையை இல்லை. இந்த திட்டத்தின்



*RID C பாஸ்கர், PDG CR ராஜூ, RC மீனம்பாக்கம் தலைவர் சங்கர் நாராயணன் பிள்ளை மற்றும் திட்டத் தலைவர் B தாட்சாயணி ‘லிட்டில் பிக் ஹார்ட்ஸின்’ 100 அறுவை சிகிச்சை மைல்கல் விழாவில்.*




மூலம் நீங்கள் எங்களுக்கு ஊக்கம் அளித்திருக்கிறீர்கள் என்று சங்கத்தைப் புகழ்ந்தார் RID C பாஸ்கர்.

ஜெனிசிஸ் அறக்கட்டளை என்ற அரசு சாரா அமைப்பு அறுவை சிகிச்சைகளுக்காக நிதி வேண்டுவதை தாட்சாயிணி பார்த்தபோது, அவர்களுடன் சேர்ந்து நிதி திரட்ட கூடுதல் சங்கங்களையும் TRFஐயும் ஈடுபடுத்தி இந்த செயல் திட்டத்தை விரிவாக்க நினைத்தார். ஆப்பிரிக்கா மற்றும் இத்தாலியில் உள்ள ரொட்டேரியன்களை அணுகுவதற்கு கனடாவில் உள்ள ரொட்டேரியன்கள் மற்றும் நண்பர்கள் உதவினர். எங்களிடம் 30,000 டாலர் இருந்தது, TRF 45,000 டாலர் கொடுத்தனர். DDF உடன் சேர்த்து மொத்தப் பணம் 78,000 டாலர் ஆனது.

MIOT மருத்துவ மனையின் குழந்தைகளுக் கான பொதுப் பிரிவில், இசக்கி சந்தியா என்ற சென்னையைச் சார்ந்த ஒரு 10 வயது பெண், டிஸ்சார் ஜிற்காகக் காத்திருக்கிறார். மனநிலை சரியில்லாத பெண் அவள். அவளுடைய பெற்றோர்கள் அவளை ஒரு மருத்துவ முகாமுக்கு அழைத்துச் சென்றனர், அங்கு இலவச CHD அறுவை சிகிச்சைக்காக மற்ற குழந்தைகளுடன் அவள் தேர்ந்தெடுக்கப்பட்டாள். இசக்கி தான் எனக்கு உலகம். இந்த மருத்துவ மனைக்கு அவள் அழைத்து வரப்பட்டது கடவுளின் விருப்பம், எங்கள் உறவினர்களில் பலர் அவளை கைவிடும்படி கேட்டுக்கொண்டிருந்த போதிலும் வெற்றிகரமான அவளுக்கு அறுவை சிகிச்சை கிடைத்துள்ளது, என்றார் அவளுடைய அப்பா.

*இசக்கி சந்தியா தன் தாயாருடன்.*





*நைஜீரியாவை சேர்ந்த குழந்தைக்கு இதய அறுவை சிகிச்சை.*

ஜெனிசிஸ் அறக்கட்டளை ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீவத்சன் கூறியதாவது, அறுவை சிகிச்சைகாகத் தேர்ந்தெடுக்கப்படும் குழந்தைகளில் பாலின வேறுபாடு கடந்த சில வருடங்களில் குறைந்து அதிகளவு சிறுமிகள் பலன டைகிறார்கள். “இந்த நிதி யாண்டில், 49% சிறுமிகள் பலனடைந்து பாலின விகிதம் 50-50 ஆனதை நாங்கள் பார்த்தோம். சிகிச்சை அளிக்கப்படும் சிறுமிகளின் எண்ணிக்கை கடந்த ஆண்டில் 11% உயர்ந்துள்ளது.

ரோட்டரியில் குழந்தை நோயாளிகளுக்கும் மற்ற குழந்தைகளுக்கும் இடையில் பாகுபாடு இல்லை என்று சுட்டிக்காட்டினார், MIOTல் குழந்தைகள் கார்டியாக் மையத்தின் இயக்குனர் மற்றும் தலைமை குழந்தை மருத்துவர் மருத்துவர் டாக்டர் ராபர்ட் சீயல்ஹோ, நைஜீரியாவில் இருந்து ஏழு மாத குழந்தையின் வழக்கையை மேற்கோள் காட்டினார். டாக்டர் சீயல்ஹோ அவளுக்கு இரத்தமில்லா திறந்த மார்பு அறுவைசிகிச்சை செய்ய வேண்டியிருந்தது. அதிக இரத்த இழப்பை தடுக்க ஒரு மினியேச்சர் இதய நுரையீரல் இயந்திரத்தை நாங்கள் பயன்படுத்தினோம். இரத்த உயிரணுக்கள் செறி வூட்டப்பட்ட நிலையில் இருக்க பிளாஸ்மாவை அகற்ற ஹெமோ ஃபில்டர்கள் பயன்படுத்தப்பட்டன... ஒரு குழந்தையின் உயிரைக் காப்பாற்றுவதில் நிறைய சிக்கல்கள் உள்ளன, என்று அவர் கூறினார்.

டாக்டர் சீயல்ஹோவும் அவருடைய குழுவும் இத்தகைய குழந்தைகளின் பெற்றோருக்கு ஆலோசனை வழங்குவதில் கஷ்டத்தை சந்திக்கிறார்கள். சிரமத்திற்கு ஏற்ற பலன் இருக்கிறது ஏனெனில் அரை மணி நேரத்தில் அதன் முடிவுகளை நீங்கள் பார்க்கலாம். இந்த குழந்தைக்கு வாழ்க்கை முழுவதும் மருந்து தேவைப் படாது, மேலும் ஒரு சில நாட்களில் வீட்டிற்கு செல்ல உடல் நிலை அனுமதிக்கும், என்று அவர் கூறினார். 100 CHD அறுவை சிகிச்சையை நடத்த சென்னை - சூர்யா மருத்துவமனை, மெட்ராஸ் மெடிக்கல் மிஷன் மற்றும் MIOT மருத்துவமனை ஆகிய மூன்று மருத்துவ மனைகளுடன் இந்தச் சங்கம் இணைந்துள்ளது.

புகைப்படங்கள்:
கிரண் ஜெஹரா

# கண்டேவியில் ஒரு மருத்துவ யாத்திரை

ரஷீதா பகத்



குஜராத், கண்டேவி கிராமத்தில் ஏழு நாட்கள் ரோட்டரி மருத்துவ முகாம் அண்மையில் நடைபெற்றது. இந்தியாவின் ரோட்டரி சங்கத்தினரும், அமெரிக்காவில் உள்ள இந்திய வம்சாவளி மருத்துவர்களும் இணைந்து நடத்திய இந்த மருத்துவ முகாமில், கிராமப்புற, பழங்குடிப் பகுதிகளைச் சேர்ந்த மொத்தம் 6,200 பேர் பங்கேற்று பலனடைந்தனர். அவர்களில் 700க்கும் மேற்பட்டோருக்கு தொடர் சிகிச்சை அளிக்க வேண்டும் என்பது கண்டறியப்பட்டது. சில குழந்தைகளுக்கு சிக்கலான ஓபன் ஹார்ட் சர்ஜரிகள், ஒருவருக்கு இரண்டு முழங்கால் சிகிச்சை, 11 பேருக்கு லால்வுகள் மாற்றுச் சிகிச்சைகள், இருவருக்கு முதுகுத் தண்டு சிகிச்சை, ஐந்து பேருக்கு ஆஞ்சியோபிளாஸ்டி, மற்றும் 150 பேருக்கு விழித் திரை (காடராக்ட்) சிகிச்சை செய்யப்பட்டன.

TRF உயர்தரமான உதவியும் அதன் வேகமும் பெரிதும் துணை புரிந்தன என்று புன்னகையுடன் குறிப்பிட்டார் கண்டேவி முன்னாள் தலைவர் பரிமள் நாயக். அவர் சுமார் 60 கி.மீ. தொலைவில் உள்ள சூரத்தைச் சேர்ந்தவர்.

இதற்கு TRF, விண்ணப்பித்த 26 நாட்களிலேயே 1,00,200 டாலர் (சுமார் ரூ.70 லட்சம்) அளித்து உதவியது. இது தான் TRF காட்டும் வேகம் என்று பிரமிப்பு கலந்த உணர்வுடன் அவர் பாராட்டினார்.

இத்திட்டப் பணிக்காக ரோட்டரி சங்கமே மொத்தம் 10 ஆயிரம் டாலர் (சுமார் ரூ.7 லட்சம்) திரட்டியது. கண்டேவி ரோட்டரி சங்கம் (RID 3060) தொடங்கி, கடந்த இருபது ஆண்டுகளாக அந்த சுற்று வட்டாரப் பகுதிகளில் உள்ள ஏழைகளுக்கு உதவி வருகிறது. இதற்காக மொத்தம் 27 லட்சம் டாலர் மதிப்புக்கு 29 உலகளாவிய நிதியத்தைப் பெற்றுள்ளது.

கண்டேவி ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த சிலரது நண்பர்கள் வெளிநாடு வாழ் இந்தியர்கள். அதில் ஒருவர் அமெரிக்கா, வடக்கு ஒஹியோவில் உள்ள இந்திய மருத்துவர் சங்கத்தைச் சேர்ந்த அங்குள்ள மருத்துவர்களையும் துணை மருத்துவர்களையும் 2010ம் ஆண்டு அறிமுகப்படுத்தினார். அவர்கள் அனைவரும் தாய்நாடான இந்தியாவில் மருத்துவ சேவை புரிய விரும்பினர். இந்தக் குழுவில் பொது சர்ஜன்கள், மருத்துவ நிபுணர்கள், மகப்பேறு மருத்துவர்கள், நரம்பியல் நிபுணர்கள் இங்கு வந்து ஏழை மக்களுக்குச் சிகிச்சை அளித்தனர்.

அமெரிக்காவிலிருந்து வந்த மருத்துவர்களும் துணை மருத்துவர்களும் 10 நாட்கள் இங்கே தங்கி இங்குள்ள மருத்துவ மனைகள், தொடக்கப் பள்ளிகள், இடைநிலைப் பள்ளிகளில் 9 பரிசோதனை முகாம்கள் நடத்தினர் என்று நாயக் கூறினார்.



இந்த மருத்துவ குழுவிற்கு ஸ்வேதல் தேசாய் தலைமை வகித்தார். அவர் அண்மையில் தொடங்கப்பட்ட சிக்லி ரோட்டரி சங்கத்தின் தலைவர் ஆவார். சிக்லி கண்டேவிக்கு 10 கி.மீ. தொலைவில் உள்ளது. அங்கே தேசாய்க்கு மிகப் பெரிய பண்ணை வீடு உள்ளது. அவர் மருத்துவக் குழுவைச் சேர்ந்த அனைவருக்கும் தேவையான ஏற்பாடுகளை மேற்கொண்டார்.



இந்த அறுவைச் சிகிச்சை உள்ளிட்ட மருத்துவப் பணிகளில் ஈடுபடுத்துவதற்காக வாபி என்ற இடத்தில் உள்ள LG ஹரியா ரோட்டரி மருத்துவமனை உள்பட நான்கு அறக்கட்டளை மருத்துவ மனைகள் அடையாளம் காணப்பட்டன.

மருத்துவ பரிசோதனை செய்து கொண்டவர்களில் சிலருக்கு மட்டும் 'அம்ருதம்' குஜராத் அரசின் மருத்துவ நல திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மருத்துவ அட்டை வைத்திருந்தனர். இத்திட்டம் பிரதமர் நரேந்திர மோடி குஜராத் மாநிலத்தின் முதலமைச்ச ராக இருந்தபோது, 2012ம் ஆண்டு தொடங்கப்பட்டது.

வறுமைக் கோட்டுக்குக் கீழே உள்ளவர்களுக்கே இந்த அட்டை வழங்கப் படும். இதை வைத்திருப் போர் ரூ.3 லட்சத்துக்கு உரிய மருத்துவ சிகிச்சையைப் பெறலாம். ஏற்கெனவே ஆயுஷ்மான் பாரத் யோஜனா திட்டம் செயல்முறையில் இருந்த போதும் இப்பகுதியைச் சேர்ந்த கிராமத்தினர், பழங்குடியினர், ஏழை நோயாளிகள் யாரிடமும் இந்த அட்டை இல்லை. எனவே, TRFன் துணை யோடு உலகளாவிய நிதியில், அனைத்து நோயாளிகளும் மருத்துவப் பரிசோதனை, சிகிச்சை களை இலவசமாகப் பெற முடிந்தது. ரோட்டரியின் உதவி இல்லாமல் இந்த ஏழைகளுக்கு உரிய சிகிச்சை கிடைத்திருக்காது என்றும் நாயக் குறிப்பிட்டார்.



முகாமில் மக்கள் வெள்ளம்.

இந்தியா பல புண்ணியத் தலங்களைக் கொண்ட நாடு. எனவே, இந்தத் திட்டத்தை மருத்துவப் புனிதப் பயணம் என்று குறிப்பிடுகிறோம். இதற்கு அமெரிக்காவின் பேக்கர்ஸ்ஃபீல்டு ரோட்டரி சங்கம் மற்றும் RID 5240 முழு ஆதரவு கொடுத்தது. அவர்கள் உலகளாவிய நிதியைப் பெறுவதற்கான எங்களது சர்வதேச கூட்டாளிகள். இந்தத் திட்டத்திற்கு மாவட்ட வளர்ச்சி நிதி (DDF) அளித்து, மாவட்ட ரோட்டரி அமைப்பும் உதவியுள்ளது என்றார் அவர்.

அத்துடன் இத்திட்டத் தைச் செயல்படுத்துவதற்கு RID 1260 ஆதரவும் கனடா நாட்டு மிஸ்ஸிஸாகா சென்டர் ரோட்டரி சங்கம் ஆகியவற்றின் ஆதரவும் பெறப்பட்டது. TRF மற்றும் எங்களது மாவட்டம் உள்பட எங்களது கூட்டாளிகள் செய்த உதவிக்கு நன்றி கூற வார்த்தைகளே இல்லை. அவர்களது ஆதரவு இல்லாமல் 700 பேருக்கு மேற்பட்டோருக்கு மருத்துவ உதவிக் கரம் நீட்டியிருக்க முடியாது. அவர்கள் இனிமேல் நல்ல சுகாதாரமான வாழ்வை வாழ முடியும் என்றும் நாயக் கூறினார்.■

# சென்னை ரோட்டரியுடன் பணியாற்றிய கனடா ரோட்டரி

V முத்துக்குமரன்

அமெரிக்கா, கனடா, இலங்கை, மலேசியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த 38 ரோட்டரி உறுப்பினர்கள் கும்மிடிபூண்டி அருகே கண்ணன்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த இருளர்கள் உள்ளிட்ட பழங்குடியினருடன் பழகி, உரையாடியதை காலத்துக்கும் மறக்கமாட்டார்கள்.


அந்தப் பகுதியில் RC மெட்ராஸ் (RID 3232) தனது உலகளாவிய கூட்டாளிகளான கனடா நாட்டின் கட்டாரக்கி கிங்ஸ்டன் (Cataraqui Kingston), மோன்ட்ரியல் க்ளேடன் (Montreal Clayton) மற்றும் வாட்டர்டவுன் மோன்ட்ரியல்-லேக் ஷோர் (Watertown Montreal-Lakeshore) ரோட்டரி சங்கங்களைச் (RID 7040) சேர்ந்த 12 பேர் கொண்ட குழு அப்பகுதியில் 80 கழிவறைகளைக் கட்டித் தந்துள்ளது. சென்னை ரோட்டரி சங்கம் அப்பகுதியில் கடந்த ஐந்து ஆண்டுகளாக குடிநீர், சுகாதார திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

RC மெட்ராஸ் 90 ஆண்டுப் பழைமை வாய்ந்த இச்சங்கம் நாட்டின் மூன்றாவது பழைய சங்கமாகும். திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் கழிவறைகளைக் கட்டித் தரும் பணியில் ஈடுபட்டு வருகிறது. இந்த மாவட்டங்களில் பல கிராமங்களில் கழிவறை வசதியின்றி திறந்தவெளியையே கழிப்பிடமாக மக்கள் பயன்படுத்துகிறார்கள்.

கண்ணன்கோட்டையில் RC மெட்ராஸ்ம 321 கழிவறைகளைப் பொதுமக்களுக்குக் கட்டித் தருகிறது. ஏற்கெனவே காஞ்சிபுரம் மாவட்டம் பாண்டூரில் 223 கழிவறைகள் கட்டியுள்ளது. பையனூரில் 120 கழிவறைகள் கட்டி நிறைவடையும் நிலையில் உள்ளன.

மூன்று கிராமங்களில் மொத்தம் 665 கழிவறைகளைக் கட்டித் தரத் திட்டமிட்டுள்ளோம். இவை பூர்த்தி

*RC கட்டாரக்கி கிங்ஸ்டனைச் சேர்ந்த ஜான் கேல், RC மதராஸ் சங்கத்தலைவர் ரஞ்சித் பிரதாப், ரிக் ஃபியடோரெக் மற்றும் Rtn விஜய பாரதி.*



## சென்னை ரோட்டரி சங்கத்தின் காலத்தை விஞ்சிய மரபு




*RC மதராஸ் தலைவர் ரஞ்சித் பிரதாப் சிறப்புத் தபால் தலையை சங்கத்தின் 90வது வருடத்தை கொண்டாடும் வகையில் வெளியிடுகிறார். சங்க உறுப்பினர்கள் NK கோபிநாத், V ஸ்ரீராம் மற்றும் நிகில் ராஜ் ஆகியோரும் உடன் உள்ளனர்.*

*இந்தியர்கள் வரலாற்று நூல்களைப் படிப்பதும் அதற்கு நேரம் ஒதுக்குவதும் மிகவும் அரிது. வரலாறு பெரும்பாலம் கவனிக்கப்படாத பொருளாகிவிட்டது. இது துரதிர்ஷ்டம் என்று சென்னை வரலாற்று ஆய்வாளரும் மியூசிக் அகாடமியின் செயலாளருமான V ஸ்ரீராம் குறிப்பிட்டார். இவர் ரோட்டரி உறுப்பினர் ஆவார்.*

*காலத்தை விஞ்சிய மரபு (A Timeless Legacy) என்ற புத்தகத்தின் மூன்றாவது பதிப்பை வெளியிட்டுப் பேசுகையில் இவ்வாறு கூறினார். சென்னையின் பல்வேறு வரலாற்றுச் சம்பவங்களையும் திட்டங்களையும் பதிவு செய்யும் இந்த நூலை சென்னை ரோட்டரி சங்கத்தின் (RC Madras) பெரும் திட்டத்தைத் தயாரித்துள்ளது.*

*இச்சங்கத்தின் முன்னாள் தலைவரும், சென்னை துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் முன்னாள் தலைவருமான GG ஆர்ம்ஸ்ட்ராங் இரண்டாம் உலகப் போர் காலத்தில் சென்னை நகர மேம்பாட்டில் பெரும் பங்களிப்பு செலுத்தியுள்ளார்.*

*முதல் உலகப் போரிலும் இரண்டாம் உலகப் போரிலும் இந்தியாவில் குண்டு போடப்பட்ட ஒரே நகரம் சென்னை தான். அதன் விளைவாக தெற்காசியாவில் நேச நாடுகள் போய் வருவதற்குச் சென்னை உகந்த நகராகி விட்டது. 1945ம் ஆண்டு இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்ததும் சென்னை நகரின் மக்கள் தொகை 8 லட்சத்திலிருந்து 16 லட்சமாக உயர்ந்தது. சென்னைத் துறைமுகத்தை ஆர்ம்ஸ்ட்ராங் சிறப்பாக நிர்வகித்ததே இதற்குக் காரணம். அவரது வாழ்க்கையும் சென்னை ரோட்டரி சங்கத்தின் (RCM) வரலாறும் இணையாகப் பயணிக்கின்றன என்றார் ஸ்ரீராம்.*

*மாவட்ட ஆளுநர் பாபு பேரம் பேசுகையில், சென்னை ரோட்டரி சங்கத்தின் மரபை ஆவணப்படுத்துவதும் பழைய தகவல்களைத் திரட்டுவதும் மிகப் பெரிய சவால் என்று கூறி, இந்தப் புத்தகத்தைப் புதுப்பித்து புதிய தகவல்களுடன் வெளியிடுவதில் ஈடுபட்ட ரோட்டரி சங்கத் தலைவர் ரஞ்சித் பிரதாப், ஆவணங்களைக் காக்கும் கமிட்டியின் தலைவர் NK கோபிநாத் ஆகியோர் பாராட்டத் தக்கவர்கள் என்றார்.*

யானால், 6840 பேர் பயன்பெறுவர். இந்தக் கிராமங்களில் திறந்தவெளிக் கழிப்பிடங்கள் அதிகமாக இருப்பதால், இவ்வாறு கழிவறைகள் கட்டித் தருவது மிகவும் தேவயானது என்று ரோட்டரி சமுதாய நல சேவை (Community Service) பிரிவின் இயக்குநர் S ரவி கூறினார்.

இதுவரை 774 கழிவறைகள் ரோட்டரி சங்கம் மூலம் கட்டித் தரப்பட்டுள்ளன. வெகுமதிகள், மாவட்ட ஒதுக்கீட்டு நிதி (District Designated Funds) ஆகியவற்றைக் கொண்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. சென்னை ரோட்டரி சங்கம், கனடா ரோட்டரி சங்கங்கள் இணைந்து இதில் ஈடுபட்டுள்ளன. இப்பணி 2014-15ம் ஆண்டு முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆரம்பத்தில் திருவள்ளூர் மாவட்டம் அமரம்பேடு கிராமத்தில் 100 கழிவறைகள் முன்னோடித் திட்டமாகக் கட்டித் தரப்பட்டன. அது நல்ல பலனைத் தந்ததால், இப்பணி தொடர்கிறது என்று ரவி கூறினார்.

கண்ணன்கோட்டையில் கழிவறைகளைக் கட்டித் தந்த பின் திறப்பு விழா நடைபெற்றது.அதில், சங்கத் தலைவர் ரஞ்சித் பிரதாப் சக ரோட்டரி சங்க உறுப்பினரும் PDG JB காம்தாரைப் பாராட்டி நன்றி கூறினார். காம்தார் தென்னிந்தியாவிலிருந்து ஆர்ச் க்ளம்ப் சொசைட்டியில் (AKS) இடம்பெற்ற முதல் உறுப்பினர் ஆவார். அவர் காலப் பரிசாக (Term Gift) 30 ஆயிரம் டாலர் வழங்கியுள்ளார். இது கண்ணன்கோட்டையில் 321 கழிவறைகளைக் கட்டுவதற்கான முன்தொகை (Seed Money) ஆகும். மீதி கழிவறைகள் இரு மாதங்களில்

நிறைவு செய்யப்படும். இத்திட்டம் செயல்படுத்தப்படும் பகுதிகளைப் பார்வையிட்ட குழுவில் காம்தாரும் இடம்பெற்றுள்ளார்.

கட்டித் தரப்படும் கழிவறைகளைப் பொதுமக்கள் தூய்மையாகப் பராமரிக்க வேண்டும். குறிப்பாகக் குழந்தைகள் கழிவறைளையே பயன்படுத்த வேண்டும் என்று ரோட்டரி சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள Dr விஜயா பாரதி கேட்டுக் கொண்டார்.

முன்னாள் தலைவர் NK கோபிநாத், சென்னை ரோட்டரி சங்கத்திலிருந்து 18 மாவட்ட ஆளுநர்கள் பொறுப்பேற்றுள்ளனர். 20 சங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கும்மிடிபூண்டி, சேலையூர், செம்பாக்கம் ஆகிய இடங்களில் எங்களது ரோட்டரி சங்கமும் மயிலாப்பூர் ரோட்டரி சங்கமும் தையல் கலை, கம்ப்யூட்டர் டேட்டா மையம், ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி ஆகிய திறன்களை பெண்களுக் கும் வேலையில்லா இளைஞர்களுக்கும் அளித்துள்ளன என்று கூறினார்.

1944ம் ஆண்டில் இச்சங்கம் ராணி மேரிக் கல்லூரிக்குப் பின்புறம் குடிசைப் பகுதியை தத்தெடுத்துப் பணிகளை மேற்கொண்டுள்ளது. அங்கு சமுதாய மையம் அமைத்து ரோட்டரி நகர் என்றே உருவாக்கியது. இந்த ஆண்டு அந்த இடம் பவள விழா கொண்டாடுகிறது.

உலகளாவிய கூட்டாளிகளான கட்டாரக்கி கிங்ஸ்டன் ரோட்டரி சங்கத்தின் தலைவர் ரிக் ஃபியேடோரெக் (Rick Fiedorec) பேசுகையில், சென்னையில் ஐந்து ரோட்டரி சங்கங்களுடன் இணைந்து பல பணிகளை மேற் கொண்டு வருகிறோம். தமிழகம் முழுவதும் ஐந்து ஆண்டுகளாக மொத்தம் 20 லட்சம் டாலர் மதிப்பில் 16 திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன என்றார்.

சென்னையில் முன்னாள் மாவட்ட ஆளுநர் S கிருஷ்ணசாமியுடன் முன்னாள் மாவட்ட ஆளுநர் பில் கிரே (Bill Gray) 2002ம் ஆண்டு ஜூன் மாதம் காலை சிற்றுண்டியில் நடத்திய சந்திப்பு தான் இந்த சமுதாய நலத் திட்டங்களில் வெற்றிகரமான கூட்டாளிகளை இணைத்தது.

சென்னை சோழா ரோட்டரி சங்கத் தலைவர் SB ரமேஷ், செயலாளர் A வெங்கட ரெட்டி ஆகியோா் சமுதாய நிலை மாற்றத்தில் நடத்தை மாற்றம் மிக முக்கியமானது என்று வலியுறுத்தினர்.



'நலந்தானா' என்ற தன்னார்வத் தொண்டு நிறுவனம் கிராமப் பகுதிகளில் கழிவறைகளின் அத்தியாவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுவதற்காக வீதி நாடகங்கள், பொம்மலாட்டம், பிராசரம் என பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறது.

அந்த சந்திப்பின் போது சென்னை, கோயம்புத்தூர் நகரங்களில் இரு திட்டங்களைச் செயல்படுத்தும் இலக்குடன் கட்டாரக்கி கிங்ஸ்டன் ரோட்டரி சங்கம் சார்பில் பங்கேற்ற கிரேயுடன் கிருஷ்ணசாமி விவாதித்தார். அது மிகப் பெரிய வெற்றிக்கான வழியை ஏற்படுத்தித்தந்தது. அதற்கு PRIP வில்ஃப் வில்கின்ஸன் (Wilf Wilkinson) துணை புரிந்தார் என்று கூறிய கிருஷ்ணசாமி, தான் விடுத்த கோரிக்கைக்கு கிரே 8 மணி நேரத்திலேயே சாதகமான பதிலை அளித்தார் என்றார்.

### சிறுவர் நகர சொசைட்டி

1989ம் ஆண்டு அமரம்பேடு கிராமப்புற மாணவர்களுக்காக 35 ஏக்கரில் விடுதி வளாகம் அமைக்கப்பட்டது. அந்தக் கட்டடத்தை அப்போது ரோட்டரி அறக்கட்டளை அறங்காவலராக இருந்த RI முன்னாள் தலைவர் வில்ஃப் வில்கின்ஸன் 2009ம் ஆண்டு திறந்துவைத்தார்.

மாணவர்களுக்கு, உணவு, தங்குமிடம், உடைகள் ஆகிய அனைத்து வசதிகளும் அளிக்கப்படுகின்றன. அவர்கள் அங்குள்ள அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் என்று ரவி கூறினார்.

இங்கே தங்கியிருந்த 2,800 மாணவர்களுக்கு மேல் பள்ளிப் படிப்பை முடித்து விட்டு சென்று விட்டனர்.

இங்கு தொழிற்பயிற்சி மையம் அமைப்பது என பல திட்டங்களை யோசித்து வருகிறோம். இந்தப் பயிற்சி மையத்தில் தொழில் நுட்பப் பயிற்சி, கைவேலைப் பயிற்சி ஆகியவை அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று பிரதாப் கூறினார்.

RC மெட்ராஸ்க்கு கைகொடுத்து உதவியவர்களில் 8 பேர் அமெரிக்காவின் RID 7570வை சேர்ந்தவர்கள். கொழும்பு மற்றும் கொழும்பு மேற்கு ரோட்டரி சங்கங்களைச் சேர்ந்த 10 பேர் இலங்கையர், செரம்பன் ரோட்டரி சங்கத்திலிருந்து 8 மலேசியரும் இடம்பெற்றுள்ளனர். இவர்கள் அனைவரும் திருவள்ளூர் மாவட்டத்துக்கு வருகை புரிந்தனர்.■

# தூலேயில் ரோட்டரி இரத்த வங்கி மற்றும் டயாலிசிஸ் மையம்

ரோட்டரி செய்திக் குழு




*மருத்துவ வசதிகள் துவக்க விழாவில் PRID மனோஜ் தேசாய், மத்திய அமைச்சர் சுபாஷ் பாம்ரே மற்றும் DG பிங்கி பட்டேல்.*

ஒரு இரத்த வங்கி மற்றும் ஒரு டயாலிசிஸ் மையம் என்ற இரு மருத்துவ திட்டப்பணிகளை RC தூலே கிராஸ்ரோடு, RID 3060, ஏற்பாடு செய்துள்ளது. இதை DG பிங்கி பட்டேல், IPDG ருச்சிர் ஜானி மற்றும் DRFC ஆஷிஷ் அஜ்மீரா ஆகியோர் முன்னிலையில் PRID மனோஜ் தேசாய் மற்றும் பாதுகாப்புத்துறைக்கான மத்திய இணையமைச்சர் சுபாஷ் பாம்ரே ஆகியோர் துவக்கி வைத்தனர்.

ரூ.58 லட்ச மதிப்பில் புதிதாக தொடங்கிய திருமதி KC அஜ்மீரா ரோட்டரி இரத்த வங்கி, இரத்தக் கூறுகளை வகைபடுத்தும் பிரிவு உள்ள நவீன வசதியுடனும் மலிவான விலையில் இரத்தம் ஏற்றுவதை வழங்க இதர அதிநவீன நடைமுறைகளையும் கொண்டதாக இருக்கும்.

ஓர் NGO மருத்துவமனையில் இரண்டாவது திட்டப்பணியான அமரர் ஜெயந்திபாய் ஹுகும்சந்த் குச்சேரியா ரோட்டரி டயாலிசிஸ் மையத்தில் ஆறு மெஷின்கள் உள்ளது. மலிவான விலையில் ஒவ்வொரு மாதமும் குறைந்தபட்சம் 250 முதல் 300 நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பது தான் இதன் நோக்கம், என்று கூறினார் சங்கத் தலைவர் நிலேஷ் கோதி. இந்த மையம் ரூ.65 லட்ச மதிப்பில் அமைக்கப்பட்டுள்ளது.

TRF உடன் அமெரிக்காவைச் சேர்ந்த RC எல்மிரா ஹைட்ஸ் RID 7120 சங்கம் தூலேவில் இந்த இரு திட்டப்பணிகளையும் அமைக்க உதவியது.■

# சைக்கிள் பேரணி மூலம் எழுத்தறிவு மற்றும் தூய்மை பிரபலமாக்குகிறது

RC பாவ்நகர், RID 3060, மாநகராட்சி மற்றும் காவல் துறையுடன் இணைந்து, எழுத்தறிவு மற்றும் தூய்மை பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்த, வருடாந்திர நிகழ்வான சைக்கிள் பேரணியை நடத்தியது.

25 கி.மீ. மற்றும் 14 கி.மீ. தூரம் பயணிக்கும் இரண்டு பேரணிகளை, DG பிங்கி படேல் மற்றும் (பாவ்நகர்) போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரல் டோமர் சாஹேப், ஒரே நேரத்தில் கொடியசைத்து துவக்கி வைத்தார்கள். இதில் 4,000க்கும் மேற்பட்டவர்கள் கலந்துக் கொண்டனர்.

இந்த பேரணியின் முடிவில், இச்சங்கம் 25 ஏழை மாணவர்களுக்கு இலவசமாக சைக்கிள் வழங்கியது.



*புதிய சைக்கிள்களுடன் பள்ளி மாணவியர்.*

### தடுப்பூசி மையம்

ரோட்டரி சேவை மையத்தில் உள்ள இந்த சங்கத்தின் நிரந்தர தடுப்பூசி மையம், நகர மக்களிடம் மிகவும் பிரபலமானது. 1999ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதிலிருந்து இந்த மையம் வறுமைக் கோட்டில் இருக்கும் மக்களுக்கு, எல்லா விதமான நோய்களுக்கும் தடுப்பூசிகளை, இலவசமாகவோ அல்லது குறைந்த விலையிலோ அளித்து வருகிறது.■

# ரோட்டரி சங்கத் தலைவர்கள் ஏற்பாடு செய்த மாவட்ட மாநாடு

ரோட்டரி செய்திக் குழு

ரோட்டரி இன்டர்நேஷனல் 3232வது மாவட்டம் சார்பில் பிரேரணா என்ற தலைப்பில் நடைபெற்ற மாவட்ட மாநாடு சில விஷயங்களில் மிகவும் வித்தியாசமானது. முதலில் அந்த நிகழ்வுக்குத் தலைவர், செயலாளர், பொருளாளர் என்று யாருமே இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. மாவட்டத்துக்கு உள்பட்ட 118 ரோட்டரி சங்கங்களின் அனைத்து தலைவர்களும் பல்வேறு பொறுப்புகளைப் பகிர்ந்து கொண்டு அலுக்காமல் உழைத்தது நினைவில் நிற்கும் நிகழ்ச்சியாக்கினர்.

இந்த மகத்தான மாற்றம் வித்தியாசமானது. புதிய வழியைக் காட்டுவது. ஒரு கேப்டன் இல்லாமல் கிரிக்கெட் அணியைக் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். அனைத்து 11 வீரர்களும் திட்டமிட்டு, விளையாடி உலகக் கோப்பையை வென்றால் எப்படியிருக்கும்! அதைப் போல்தான் இந்தப் பணியும் என்று மாவட்ட ரோட்டரி செயலாளர் S விஜயகுமார் கூறினார். அத்துடன் மாநாட்டுக்கான பதிவுக் கட்டணம் குறைவாக இருந்ததால், ஆண்கள், பெண்கள் நிகழ்ச்சியில் உற்சாகமாகப் பங்கேற்றனர்.

முன்பெல்லாம் உணவுடன் சேர்த்து ஒருவருக்குப் பதிவுக் கட்டணம் ரூ.3 ஆயிரம் என இருந்தது. தற்போது இந்த மாநாட்டில் ரூ.1000 எனக் குறைக்கப்பட்டது நல்ல வரவேற்பு பெற்றது. வருகை தருவோரின் விருப்பத்துக்கு ஏற்ப உணவையும் ஏற்பாடு செய்தோம் என்று விஜயகுமார் கூறினார். மாநாட்டில் 3,300 பேர் பங்கேற்றனர்.

மாநாட்டை தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித் தொடங்கிவைத்தார். RI இயக்குநர் C பாஸ்கர், மாவட்ட ஆளுநர் பாபு பேரம் ஆகியோர் பங்கேற்றனர். சமுதாயத்திற்கு ரோட்டரியும், ரோட்டரி அமைப்பினரும் ஆற்றி வரும் சேவையை ஆளுநர் பெரிதும் போற்றினார்.

ரோட்டரிக்காகவும் TRF பங்களிப்பைச் செலுத்திய மாவட்ட முன்னாள் ஆளுநர் Sv Rm ராமநாதனுக்கு, RI தலைவரின் பிரதிநிதியான RID 3211 சேர்ந்த ஜான் டேனியல் முன்னிலையில் ரோட்டரியின் தன்னை மிஞ்சிய தொண்டு (Service above Self) விருதினை ஆளுநர் வழங்கினார்.

ரோட்டரி அமைப்பில் 12 புதிய சங்கங்களை உருவாக்கியதற்கும், 685 புதிய உறுப்பினர்களை சேர்த்ததற்கும் மாவட்ட ஆளுநர் பாபு பேரம் மற்றும் ரோட்டரி தலைவர்களை C பாஸ்கர் பாராட்டினார்.

உங்களது சேவை பலரை ரோட்டரியில் இணைந்து பணியாற்றத் தூண்டு கோலாக அமைந்துள்ளது பாராட்டத்தக்கது. அத்துடன் 134 பெண் உறுப்பினர்களை இணைந்ததற்கு மிகுந்த பாராட்டுக்குரியது. ரோட்டரி சங்கங்கள் டயாலிசிஸ் மையங்களை அமைத்துள்ளது வரவேற்கத் தக்கது. இது இன்றைய காலத்தின் தேவை, குறிப்பாக நீரிழிவு நோய் அதிகரித்து வரும் வேளையில் இது மிக முக்கியமாகும் என்றார்.





PDG *நடராஜன் நாகோஜீ, நந்தினி, மீரா ஜான், மாலா பாஸ்கர், சாந்தி ராஜீ மற்றும் நல்லம்மை ராமநாதன்.*

மாவட்ட ரோட்டரியின் செயல்பாடுகளை மாவட்ட ஆளுநர் பாபு பேரம் காணொலிக் காட்சி நிகழ்த்தி விவரித்தார்.

மாநாட்டை ஒட்டி, "மாறிவரும் வர்த்தகத்தின் போக்கு மற்றும் பெருகி வரும் வாய்ப்புகள்" (New trends in education) என்ற தலைப்பில் குழு விவாதம் நடைபெற்றது. ரோட்டரி உறுப்பினர் S V வீரமணி நெறியாளராக இருந்து நடத்தினார்.

குழு விவாதத்தில் டான்ஃபோஸ் (Danfoss) நிறுவன மேலாண் இயக்குநர் P ரவிச்சந்திரன், இந்திய தொழிலகக் கூட்டமைப்பின் (CII) தமிழக மண்டல முன்னாள் தலைவர் M பொன்னுசாமி, டன் அண்ட் ப்ராட்ஸ்ட்ரீட் (Dun Bradstreet) நிறுவன செயல் இயக்குநர் சங்கீதா சுமேஷ், ஆத்யந்த் கேபிடல் (Atyant Capital) நிறுவன நிர்வாக இயக்குநர் ராகுல் சரோகி பங்கேற்று தங்களது கருத்துரைகளை வழங்கினர்.

திருநங்கைகளின் மேம்பாட்டுக்காகப் பாடுபடும் பெரிஃபெர்ரி (PeriFerry) நிறுவனர் நீலம் ஜெயின் திருநங்கையர்களின் வேலை வாய்ப்புகள், தொழில் நடத்துவதற்கான வாய்ப்புகளை விவரித்தார். ரோட்டரி அவர்களுக்கென குறிப்பிட்ட வேலை வாய்ப்புகள், தொழில்களைக் கண்டறிவதில் ஈடுபடலாம். அதற்கான பயிற்சிக்கும் ஏற்பாடு செய்யலாம் என்று யோசனை கூறினார்.

"ரோட்டரி நேற்றும் இன்றும்" (Rotary & then and now) என்ற தலைப்பில் விவாதம் நடைபெற்றது. அதை நெறிப்படுத்திய PDG A S வெங்கடேஷ் பேசுகையில் ரோட்டரி அவ்வப்போது காலத்துக்கு ஏற்ப தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் அமைப்பு என்று கூறினார்.

இந்தியக் கடற்படையில் இணைந்து சாகசப் பயணம் மேற்கொண்ட ஆறு பெண் அதிகாரிகளின் சாகசம் மாநாட்டில் பாராட்டப்பட்டது. அவர்கள் INSV Tarini கப்பலிலேயே உலகம் முழுவதும் பயணம் செய்தனர். "நாவிகா சாகர் பரிகர்மா" (Navika Sagar Parikrama) என்ற இப்பயணம் முழுக்க முழுக்க பெண்களே உலகம் முழுவதும் சாகசம் நிகழ்த்தியதாகும். இப்பயணத்துக்கான தயாரிப்பு, பயிற்சி, பயணத்தின் அனுபவம் ஆகியவற்றை அவர்கள் விவரித்தனர்.

"க்ரைசாலிஸ்" (Chrysalis) நிறுவன முதன்மை செயல் அலுவலர் (CEO) சித்ரா தேவி, கல்வியில் புதிய போக்கு (New trends in education) என்ற தலைப்பில் விளக்க உரையை சுவைபட நிகழ்த்தினார். சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகத்தின் தலைவர் P ரவிச்சந்திரன் இந்திய பொருளாதார மேம்பாட்டில் துறைமுகங்கள் ஆற்றிய பங்களிப்பை விளக்கிப் பேசினார். ■



*தமிழக ஆளுநர் பன்வரிலால் புரோஹித்,* PDG Sv Rm *ராமநாதனுக்கு விருது வழங்குகிறார்.* RID C *பாஸ்கர்,* RIPR *ஜான் டேனியல், நல்லம்மை ராமநாதன்,* DG *பாபு பேரம், அனிதா மற்றும் மாநாட்டின் ஆலோசகர்* M *சக்ரவர்த்தி.*

# பெண்களுக்கு வலிமை சேர்க்கும் கராத்தே

V முத்துக்குமரன்



RC *சென்னை ஈஸ்ட்* RA *புரம் தலைவர்* P *வாசு அரசுப் பள்ளி மாணவியருக்கு கராத்தே கற்றுக்கொடுக்கிறார்.*

தற்காப்பு பயிற்சியில் 23 அரசுப் பள்ளிகள் மற்றும் பெண்கள் கல்லூரிகளைச் சேர்ந்த 5,600 மாணவி களுக்கு பயிற்சி கொடுத்ததில் தான் படைத்த சாதனையைப்பற்றி RC சென்னை ஈஸ்ட் RA புரம் ரோட்டரி சங்கத் தலைவர் P வாசு விளக்குகிறார்.

பெண் குழந்தைகளுக்கு அதிகாரமளிப்போம் என்ற சங்கத் திட்டப்பணியின் கீழ் இரண்டு ஆண் மற்றும் இரண்டு பெண் பயிற்சியாளர்கள் கொண்ட ஒரு குழுவை வழி நடத்துகிறார், இதன்மூலம் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளைச் சேர்ந்த மாணவிகளுக்கு கராத்தே பயிற்சி அளிக்கிறார். வாசு ஒரு பயிற்சி பெற்ற பிளாக் பெல்ட் லெவல் 5 கராத்தே வல்லுநர், ஜப்பானில் உள்ள இஷின்ரியூ கராத்தே மையத்தில் பயின்றவர். நான் 26 வருடங்களாக சென்னை நகர காவல்துறை, முன்னாள் பாதுகாப்பு வீரர், பள்ளி மற்றும் கல்லூரி மாணவிகளுக்கு இந்தக் கலையை கற்றுக்கொடுத்துக் கொண்டிருக்கிறேன், என்றார்.

கடந்த ஜூலை மாதம் இந்த பயிற்சியைத் தொடங்கிய போது, ரோட்டரியின் திறன் வளர்ப்பு சேவையின் ஒரு அங்கமாக பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் “இலவச பயிற்சி பட்டறைகள்” மூலம் தற்காப்புக் கலையை சுமார் 5,000 மாணவி களுக்கு கற்றுக்கொடுக்கும் தன் திட்டத்தை வாசு அறிவித்தார்.

அச்சுறுத்தலை எப்படி சமாளிப்பது; பயத்தை எப்படிப் போக்குவது; கிடைக்கும் ஆயுதங்களை வைத்து எப்படி தன்னைக் காத்துக்கொள்வது போன்ற மூன்று அம்சங்களின் மூலம்



பெண்களின் தன்னம்பிக்கையில் வியக்கத்தக்க மாற்றத்தை அவர் ஏற்படுத்தினார். ஆபத்தில் இருக்கும் போது உங்கள் கைகளில் என்ன பொருள்கள் கிடைக்கிறதோ, அதை வேகமாகப் பயன்படுத்த வேண்டும் என்று சொல்வேன். உதாரணமாக, ஒரு கூர்மையான முள் கரண்டி, வளையல்கள் அல்லது ஒரு பெப்பர் ஸ்ப்ரே... இவற்றில் எதையாவது தாக்க வருபவனுக்கு எதிராகப் பயன்படுத்த வேண்டும். அரசுப்பள்ளியில் நடைபெற்ற செய்முறை விளக்கம் கொண்ட 2-3 மணிநேர பயிற்சி பட்டறையின் முடிவில், ஒரு மாணவியின் தன்னிச்சையான பதில் என்னை ஆச்சர்யப்படுத்தியது: "சார், தாக்க வருபவனுக்கு எதிராக மண், கல் அல்லது கையில் என்ன கிடைக்கிறதோ அதைப் பயன்படுத்துவோம்," என்று சொன்னாள்.

பள்ளி அதிகாரிகளிடம் அனுமதி வாங்குவது மற்றும் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்வது போன்றவற்றில் மற்ற 10 சங்கங்களும் இன்னர் வீல் உறுப்பினர்கள் அருள்மலர் (பே சிட்டி) மற்றும் ஃபாத்திமா (மெட்ராஸ் நார்த்) ஆகியோரும் உறுதுணையாக இருந்தார்கள்.

### மாபெரும் இறுதிச்சுற்று

சமீபத்தில் செல்லம்மாள் பெண்கள் கல்லூரியைச் சேர்ந்த 1,000 பெண்கள் தாங்கள் கற்றுக்கொண்ட கலையை பார்வையாளர்களுக்கு வெளிக்காட்டினர், இதில் IRS அதிகாரி V நந்தக்குமார், வருமான வரித் துறை (சென்னை பிராந்தியம்) மற்றும் மாவட்ட ஆளுநர் பாபு பேரம் ஆகியோர் கலந்து கொண்டனர். வாசு அடுத்த வருடம் சென்னைப் பகுதியில் சுமார் 20,000 பெண்களுக்கு பயிற்சியளிக்க இப்போது தயாராக இருக்கிறார்.■

---

# புல்வாமா தியாகிகளுக்கு ரோட்டரியின் மரியாதை

ரோட்டரி செய்திக் குழு




**இடதுபுரத்திலிருந்து:** DG *பிரவீண் கோயல்,* RC *சண்டிகார் தலைவர்* AP *சிங்,* DIG V K *கவுந்தல் ஓர் வீரரின் குடும்பத்திற்கு காசோலை வழங்குகின்றனர். கிங்ஸ்* XI *பஞ்சாப் அணி செயல் அதிகாரி ஆனந்த் சர்காரியா மற்றும் அனித் தலைவர்* R *அஸ்வின்.*


பிப்ரவரி மாதம் புல்வாமா தாக்குதலில் கொல்லப்பட்ட ஐந்து CRPF வீரர்களின் குடும்பங்களுக்கு ரூ.25 லட்சத்திற்கான காசோலையை IPL கிரிக்கெட் அணி கிங்ஸ் லெவன் பஞ்சாப் உடன் இணைந்து RC சண்டிகார், RID 3080 வழங்கியது.

இச்சங்கம் அடையாளப் படுத்திய ஐந்து CRPF வீரர்களில் நான்கு பேர் பஞ்சாபை சேர்ந்தவர்கள் ஒருவர் இமாசலப்பிரதேசத் தைச் சேர்ந்தவர், மார்ச் மாதத்தில் நடந்த நிகழ்ச்சியில் அவர்களின் ஒவ்வொரு குடும்பங்களுக்கும் தலா ரூ.5 லட்சம் வழங்கப்பட்டது.

புல்வாமா வீரர்களுக்கு உதவி செய்ய ஒரு கருவியாக தங்களைத் தேர்ந்தெடுத்ததற்கு கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக்கு சங்கத் தலைவர் A P சிங் நன்றி தெரிவித்தார். நமது எல்லைகளைக் காக்கும் வீரர்களுக்கு தீபாவளியன்று சுமார் 5,000 கிலோ இனிப்புகளை வழங்கும் மற்றொரு திட்டப்பணியை மூன்று வருடங்களுக்கு முன்பு தொடங்கியதை நினைவு கூர்ந்தார்.

இந்த திட்டப்பணிக்கு RC சண்டிகாருடன் இணைந்து செயலாற்றியதற்கு நன்றி கடன் பட்டுள்ளோம், நமக்காக ஒவ்வொரு நாளும் தங்களின் உயிரை பணயம் வைக்கும் நமது வீரர்களின் குடும்பங்களைத் தொடர்பு கொள்ள இவர்கள் தான் உதவினர் என்றார் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் செயல் அதிகாரி அனந்த் சர்காரியா.


விழாவில் சங்கத் தலைவருடன் சேர்ந்து, DG பிரவீன் கோயல், சர்காரியா, கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணிக் கேப்டன் ரவிச்சந்திரன் அஷ்வின் மற்றும் இதர ரொட்டேரியன்கள் கலந்து கொண்டனர். CRPF பஞ்சாப் சார்பாக மூத்த DIG V K கவுந்தால் கலந்துகொண்டு உயிர்நீத்த வீரர்களின் குடும்பங்களுடன் கலந்துரையாடினார்.■



# புடாபெஸ்ட், இஸ்தான்புல் நகரங்களில் துருக்கி கெபாப்

ரஷீதா பகத்





உலகில் எல்லா இடங்களிலும் துருக்கி நாட்டு கெபாப் உணவுவகைகளைக் காணலாம். அதிர்ஷ்டம் இருந்தால், உங்களுக்குப் பிடித்தமானதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். சில நேரம் அவை சுவையாக இருக்கும். சில சமயம் அப்படி இருக்காது. அண்மையில் ஸ்லோவேனியா தலைநகர் லிஜுப்லிஜ்னாவுக்கு எட்டுமணி நேர ரயில் பயணத்துக்காக ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்ட் ரயில் நிலையத்திற்கு வந்தோம். நாங்கள் நான்கு பேர் ஆன்லைன் மூலம் ரயில் டிக்கெட் எடுத்தோம். அது வெறும் 15 யூரோதான் (சுமார் ரூ.1175) அதனால், அது உண்மையான டிக்கெட் தானா என்பது ரயிலில் ஏறும் வரையில் சந்தேகமாக இருந்தது.

ஐரோப்பிய நாடுகளில் இதர ரயில்களைப் போல் அதுவும் வசதியாகவே இருந்தது. ஆனால், ரயிலிலோ, ரயில் நிற்கும் நிலையங்களிலோ சாப்பிடவோ குடிக்கவோ எதுவும் கிடைக்கவில்லை. ஆம், நம்ம ஊர் ரயில் பயணத்தின்போது இட்லி வடை முதல் சமோஸா, ஆம்லெட் வரையில்; பிரியாணி முதல் தயிர்சாதம் வரையில் வகைவகையாகக் கிடைக்கும் என்று உங்களைப் போல் நானும்தான் நினைத்துக் கொண்டிருந்தேன்.

சரி போகட்டும் இந்தக் கட்டுரை துருக்கி நாட்டு உணவு வகையைப் பற்றித்தான். கெபாப் உணவு வகை புடாபெஸ்ட் ரயில் நிலையத்தில்













உணவகத்தில் கிடைத்தது. ஆனால், வாயில் வைக்க முடியாது. முடிந்தவரை வாயில் திணித்தோம். மீதியை எறிந்து விட்டோம். கடந்த முறை துருக்கிக்குச் சென்றபோது உணவு கிடைத்த மாதிரி இப்போது இல்லை. இஸ்தான்புல், கப்போடிசியா (Cappadocia) ஆகிய இரு நகரங்களிலும் இதே கதிதான்.

நெட்ஃப்ளிக்ஸில் துருக்கி தொடரைப் பார்க்க நேர்ந்தது. நான் காதலிப்பது போல் காதலிப்பாய்.. (Love me as I am) என்ற அழகான தலைப்பில் உள்ள அந்தக் கதையில் கதாநாயகியின் தந்தை ஒரு கெபாப் (kofteci) கடை வைத்திருப்பார். துருக்கியின் அனடோலியா (Anatolia) பகுதியிலேயே அதுதான் சிறந்த உணவகம். கதாநாயகியின் தந்தை இஸ்தான்புல் வந்து அங்கேயும் கெபாப் கடையைத் திறப்பார்.

அந்தத் தொடரில் அழகு நகரான இஸ்தான்புல், போஸ்ஃபெரஸ் (Bospherous) நீரிணை, நீல மசூதி (Blue Mosque) என அழைக்கப்படும் சுல்தான் அகமது மசூதி, உலகின் பண்டைய அருங்காட்சியகம் உள்ள ஹேகியா சோபியா (Hagia Sophia) ஆகியவை அழகாகக் காட்டப்படும். இதில் போஸ்ஃபெரஸ் நீரிணை கருங்கடலையும் மர்மாரா கடலையும் இணைக்கும். ஐரோப்பிய ஆசிய பகுதிகளின் எல்லையாகவும் அமைந்து ள்ளது. 12 ஆண்டுகளுக்கு முன் இஸ்தான்புல்லுக்குச் சென்றிருக்கிறேன்.

இப்போது கணவருடன் வந்திருக்கிறேன். அமெரிக்க விசாவோ,





ஐரோப்பிய நாடுகளுக்கான செங்கன் விசாவோ இருந்தால், 50 டாலர் (சுமார் ரூ.1050) செலுத்தி துருக்கி விசாவை ஆன்லைன் மூலம் பெறலாம்.

கப்போடிசியா நகரில் துருக்கி நாட்டு மீட்பால் (Turkish meatball) எனப்படும் அசைவ உணவைச் சுவைத்தோம். நல்ல சுவையாக இருந்தது. இறைச்சி மிகவும் மிருதுவாகவும் சாறு நிறைந்தும் இருந்தது. அத்துடன் வழங்கப்பட்ட பிரெட்டும் சுவையானது. ஐரோப்பாவில் இதைப் போல் எங்கும் கிடைக்காது.

பாரம்பரிய கெபாப் உணவும் மிக சுவையாக இருந்தது. சுட்ட மீன், இறால் இங்கே பிரதானம். அழகான இஸ்தான்புல் நகரில் தனியாகச் சுற்றுலா மேற்கொண்டபோது முஸ்தபா என்பவர் வழிகாட்டியாக இருந்து, நல்ல உணவகத்துக்கு அழைத்துச் சென்று சுவையான உணவை அறிமுகப்படுத்தினார். இங்கு










மிளகுத்தூள் அல்லது மிளகாய்ப்பொடி போட்ட உணவும் அரிசி சோறும்தான் துருக்கியின் வழக்கமான உணவை அறிந்துகொண்டோம். சில சமயம் சுவைத்தோம். எப்போதும் அல்ல. சூப்புகள் மிகவும் சுவையாக இருந்தன. எது எப்படியோ கெபாப்தான் உணவின் ராஜா. ஒரு முறை பாலாடைக் கட்டியும் மிளகு, அபர்ஜென் என்ற ஒரு வகை பழத்தையும் கலந்து சாப்பிட்டோம். அது ஆளைத் தூக்கியது, அப்படி ஒரு சுவை!

துருக்கியில் ஆலிவ் (இடலை) மரங்கள் அதிகம் வளரும். ஆலிவ்களை காலை உணவாக உண்கிறார்கள். எங்களது ஹோட்டலில் மத்திய தரைக்கடல் நாடுகளின் வாச னைத் திரவியங்களையும் சேர்த்து உப்பில் ஊற வைத்த ஆலிவ்கள் காலை உணவில் அளித்தார்கள். பசி யைத் தூண்டும் விதத்தில் மெஸ்லி என்ற வகை காய்கறி கலவை உணவும்

*துருக்கியில் ஆலிவ் (இடலை) மரங்கள் அதிகம் வளரும். ஆலிவ்களை காலை உணவாக உண்கிறார்கள்.*



உண்டு. அல்லது ஸ்டாட்டர் எனப்படும் சிற்றுணவும் உண்டு. இவையெல்லாம் மத்திய கிழக்கு நாடுகளிலும் கிரீஸ், வடக்கு ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளிலும் பிரபலம். ஸ்டாட்டர் உடன் பிரெட், ஆலிவ், பூண்டு, ஆலிவ் எண்ணெய் கலந்த கூழ் போன்ற உணவு ஆகியவை பரிமாறப்படும். இறுதியாக அழகாக நறுக்கப்பட்ட காய்கறிகளை கலைநயத்துடன் ஆலிவ் எண்ணெய், மசாலாப் பொருட்களுடன் சேர்த்து அளிப்பார்கள்.

ஆனால், எங்களது பயணத்தில் மிகச் சிறந்த உணவைப் பற்றி இந்தியப் பத்திரிகையாளரின் கணவர் ஒருவர்தான் கூறினார். இஸ்தான்புல் நகரில் பணியாற்றுகிறார் அவர். அவர் எங்களைப் படகில் ஐரோப்பிய எல்லைப் பகுதியிலிருந்து ஆசிய எல்லைக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்தார். அவர் யோசனைப்படி இஸ்தான்புல்லில் கடிகோய் என்ற இடத்துக்குச் சென்றோம். நம்புங்கள் இருபதே நிமிடத்தில் ஐரோப்பாவிலிருந்து ஆசியாவுக்குள் சென்றுவிட்டோம்.

உள்ளூர் வாசிகள் ஐரோப்பா மோகம் கொண்டிருப்பதாலும் ஹேகியா சோபியா அருங்காட்சியகம், நீல மசூதி எனப்படும் சுல்தான் அகமது மசூதி ஆகியவை இருப்பதாலும் ஐரோப்பிய பகுதி நன்றாக இருக்கும் என எல்லோரும் எதிர்பார்ப்போம். ஆனால், ஆசிய





*டர்க்கிஷ் டிலைட் என்னும் இனிப்பு வகை.*






எல்லைப் பகுதிதான் ஆடம்பரமாக இருந்தது.

கடிக்கோய் (கோழிக்கோடு மாதிரி உச்சரிக்கப்படுகிறது) பகுதியில் அங்காடிகள் ஜொலிக்கின்றன. கடைகளின் சொர்க்கபுரி! அங்கே எனக்கு ரொம்ப பிடித்தது காலணிகள்தான்! விலையும் நியாயமாக இருந்தது. இரண்டு ஜோடி வாங்கினேன். அப்புறம் ஸ்காட் ரொம்பவும் பரிந்துரை செய்த சியா என்ற இடத்தில் உணவகத்துக்குச் சென்றோம். அங்கே செல்ல காய்கறிச் சந்தைகள் நிறைந்த குறுகிய சந்து பொந்துகளில் நுழைய வேண்டியதாயிற்று. பச்சைப் பசேலென்று பச்சை மிளகாய், காய்கறிகள் குவியல் குவியலாக ஆலிவ், மீன், இறைச்சிகள் விற்கப்பட்டன. அது மட்டுமின்றி, பார்த்தாலே நாக்கில் எச்சில் ஊறும் கேக் வகைகள் விற்பனை செய்யும் கடைகளும் இருந்தன.

சியாவில் இரு சமையல் கலை வல்லுநர்கள் சின்ன தந்தூர் உணவகத்தில் நான், ரொட்டி





ஆகியவற்றைத் தயாரித்துக் கொண்டிருந்தனர். அங்கே கோதுமை மாவை அழகாகப் பிசைந்து, துணியைப் போல் ஆக்கி, உயரே தூக்கி வீசி, லாகவமாகப் பிடித்து ரொட்டி, நான் தயாரிப்பது பார்க்கவே ஜோராக இருந்தது! அப்புறம் ஒவ்வொரு ரொட்டி, நான் ஆகியவற்றையும் சுடுவதற்காக தணல் அடுப்பில் உள்ளே நீண்ட கரண்டியின் மூலம் (படம்) அழகாக வைத்ததும் அழகான காட்சி! பல்வேறு வகையான நான்கள் தயாரிக்கப்பட்டன. அங்கே மிகவும் மெல்லிசான பிஸ்ஸா ரொட்டியையும் பார்த்தோம். அது துருக்கி பிஸ்ஸா என்று பெருமையுடன் கூறினார் ஒரு சமையல் கலை வல்லுநர். பேசிக்கொண்டே நானில் மசாலா, காய்கறியையும் சேர்த்து அடுப்பில் வைத்தார். ஆட்டிறைச்சி, மாதுளம்பழ சாஸ், சுட்ட வெங்காயம் என ஒரே அடுப்பில் சுட்டு எடுத்து பரிமாறினர். சும்மா சொல்லக் கூடாது அப்படி ஒரு சுவை!

மெனுவில் ஏராளமான உணவு வகைகள் இடம்பெற்றிருந்தன. ஒவ்வொன்றுமே வாயில் நீர் ஊறச் செய்பவை. கசகசா கலந்த கெபாப், யோகார்ட் கெபாப் (ஆட்டிறைச்சி துண்டுகளுடன் யோகார்ட்), உப்பு கெபாப், தக்காளி, மாதுளை கலந்த வெல்லப் பாகு - இவற்றுடன் விசேஷமான சியா கெபாப் ஆடு மாட்டு இறைச்சி, வாதுமை கொட்டை, பாலாடைக் கட்டி, கொத்துமல்லி வகைகள் ஆகியவையும் புதினாவும் கலந்த உணவு வகைகள் எனமிக அற்புதமான உணவு வகைகள் இருந்தன.

புடாபெஸ்ட் ரயில் நிலையத்தில் இந்த வகை உணவுகளைப் பொட்டலம் கட்டி எடுத்துச் சென்ற போது, இதர கெபாப் வகைகளையும் சுவைக்கும் வாய்ப்பு கிடைக்குமா என்று நினைத்துப் பார்த்தோம். சிக்கன் அல்லது சீஸ் (பாலாடைக் கட்டி) பர்கர் பொதுவாகப் பாதுகாப்பாக இருக்கும். இவை ஒருபுறம் இருக்க துருக்கி நாட்டு உணவை நான் முயற்சி செய்து பார்க்கவில்லை. அதுவும் அங்கே நிறைய கிடைத்தது!

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

Rotary PEOPLE OF ACTION

# பார்வைக் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு ஆடியோ புத்தகம்

ரோட்டரி செய்திக்குழு



நூபுர் சந்து (வலதிலிருந்து இரண்டாவது) பார்வையற்றோருடன் தில்லி தேசிய பார்வையற்றோர் சங்கத்தில்.

தேசிய வீரத்துக்கான விருதைப் பெற்ற குழந்தைகளைப் பெருமைப்படுத்தும் விதமாக, RID 3070 RC ஜம்மு எலைட் உறுப்பினர் நுபுர் சந்து, குடியரசு தினத்தன்று பாரத் கே பஹதூர் பச்சே (இந்தியாவின் வீரம் செறிந்த குழந்தைகள்) என்ற ஒரு ஆடியோ புத்தகத்தை அர்ப்பணித் துள்ளார். RC இந்தோர் மார்ஷல்ஸ், சாகர் ஃபீனிக்ஸ் மற்றும் அமெரிக்கா RC ரேண்டால்ஃப் மெட்ரோகாம் போன்ற சங்கங்களின் ஆதரவுடன் இப்புத்தகம் 27,000 பார்வைக் குறை பாடுள்ள குழந்தைகளுக்குச் சென்றடையும். இந்தப் புத்தகம் 2019 ஜெய்ப்பூர் இலக்கிய விழாவிலும் வெளியிடப்பட்டு, தேசிய பார்வையற்றோர் சங்கத்தின் பாராட்டினைப் பெற்றது.

ரேடியோ மிர்ச்சி 98.3 FM-ஐச் சேர்ந்த RJ நிஷாந்த் விக்ரம் குரல் கொடுத்து, இக்பால் சிங் ஹுண்டல் இசை அமைத்த இப்புத்தகம், டெய்ஸி (DAISY) தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. பார்வைக் குறைபாடு உள்ளவர்கள், எழுதப் படிக்கத் தெரியாதவர்கள், முதிய வயது அல்லது இதர குறைபாடுகளால் படிக்க முடியாத வர்களுக்காக வடி வமைக்கப்பட்டுள்ளது. ■

Convention countdown

# உங்களுடனே வரும் வழிகாட்டி

ஹேன்க் சர்டின்

ஜூன் 1 முதல் 5 வரை நடக்கும் RI மாநாட்டுக்காக ஹேம்பர்க், ஜெர்மனிக்கு செல்வதற்கு முன்பு, சில இலவச ஆப்களை பதிவிறக்கம் செய்து கொள்ளுங்கள், இந்நிகழ்ச்சி மற்றும் நகரத்தைப் பற்றியும் அறிந்துகொள்ள முடியும்.

மாநாட்டுக்குச் செல்வதற்கு ரோட்டரி நிகழ்ச்சிகள் அவசியமான ஒன்று. இதனுடன் உங்கள் தினசரி செயல்பாடுகளைத் திட்டமிடுவது, சிறப்பு பேச்சாளர்களைப் பற்றி அறிந்துகொள்வது மற்றும் அமர்வு குறித்த கையிதழ்களை பதிவிறக்கம் செய்துகொள்வது போன்றவற்றைச் செய்யலாம். மற்ற ரொட்டேரியன்களைத் தொடர்புகொள்வது, புகைப்படங் களைப் பகிர்ந்து கொள்வது, அமர்வு களுக்கு மதிப்பீடு செய்வது மற்றும் மாநாட்டு ஏற்பாட்டாளர்களுக்கு கருத்துரைகளை அனுப்புவது போன்றவற்றையும் செய்யலாம். மே 9 முதல் இந்த ஆப் கிடைக்கும்; உங்கள் ஆப் ஸ்டோரில் Rotary Events என்று தேடினால் கிடைக்கும்.




இந்த HVV ஆப் ஹேம்பர்க்கின் டிரான்சிட் அமைப்பில் பயணிக்க உங்களுக்கு உதவும். இதைத் திறக்கும் போது, உங்களைச் சுற்றியுள்ள பகுதியின் மேப்பை பார்க்க முடியும். உங்கள் ஹேம்பர்க் மாநாட்டு பதிவில் நகர ரயில்கள், பேருந்துகள் மற்றும் படகுகளில் கூட பயணிப்பதற்கான ஒரு பாஸ் உள்ளது, எனவே டிக்கெட்டுகளைப் பற்றி கவலைப்படத் தேவையில்லை.

2019 (ஜூன் 1-5)
**ஹாம்பர்க் ரோட்டரி மாநாட்டிற்கு riconvention.org இணையத்தளத்தில் பதிவு செய்யுங்கள்.**

© The Rotarian

Rotary PEOPLE OF ACTION

# “இலட்சிய நோக்கம்” கொண்ட ரோட்டரி கார் பயணம்

V முத்துக்குமரன்

சமூக சேவைகளின் மூலம் உத்வேகம் பெற்ற இரண்டு ரொட்டேரியன்கள், “சுயநலமற்ற சேவைகளின் மூலம்” சமூக வளர்ச்சிக்குப் பாடுபடுபவர்களுக்கு ஆதாரமாக இருக்கும் ஊக்கம் மற்றும் ஆர்வத்தைக் கண்டறிவதற்கான ஒரு உலகம் சுற்றும் பயணத்தை ஆரம்பித்துள்ளனர். RI D 3142, RC நியூ பாம்பே சீசைடு சங்கத்தைச் சேர்ந்த டாக்டர் சுதிர் பல்தோடா மற்றும் அவருடைய நண்பர் RID 3141, RC பாம்பே நார்த் சங்கத்தைச் சேர்ந்த பிரவீன் மேத்தா ஆகிய இருவரும் டொயோட்டா ஃபார்ச்சூனர் காரில் தங்களின் சமூகத்திற்கான வாழ்க்கை அமைக்க சமூக சேவை ஆற்றிக்கொண்டு வெளிச்சத்திற்கு வராமல் இருக்கும் நபர்களைச் சந்திக்க உலகத்தைச் சுற்றக் கிளம்பியுள்ளனர் என்று சொல்கிறார் RC நியூ பாம்பே சீசைடு தலைவர் B V ரவிபிரகாஷ்.




Dr *சுதீர் பல்தோடா மற்றும் ப்ரவீன் மேத்தா கார் பயணம் துவங்கும் முன் ரோட்டரியினருடன்.*

நான்கு கண்டங்கள் மற்றும் 60 நாடுகளில் 300-க்கு அதிகமான நாட்கள் அவர்கள் பயணம் செய்வார்கள் மற்றும் தங்கள் சமூகத்தில் மாற்றத்தைக் கொண்டு வந்த குறைந்த பட்சம் 120 ஆட்களையாவது சந்திக்க ஆர்வமாக உள்ளனர் என்றார் ரவிபிரகாஷ்.


ஏப்ரல் 8 ஆம் தேதி மும்பையில் இருந்து துவக்கப்பட்ட கார் பயணத்தில், உதய்பூர், தில்லி, முஜாஃப்ஃபர்நகர் வழியாக பூட்டானைச் சென்றடைந்தனர். அவர்கள் தாய்லாந்து, கம்போடியா, வியட்நாம் வழியாகப் பயணம் செய்து ரஷ்யாவுக்குள் நுழைந்து, கிரீஸ், ஜெர்மனி, பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்து சென்றடைவார்கள்.



RC *நியூ பாம்பே சீசைடு தலைவர்* B V *ரவிபிரகாஷ் மற்றும் ரோட்டரியனருடன்.*

இங்கிலாந்தில் இருந்து தங்கள் காருடன் அமெரிக்காவிற்கு கப்பலேறுவார்கள். பிறகு சிலி, அர்ஜென்டினா வழியாக, தரைவழிப் பயணம் செய்து, பிரேசில் நாட்டைச் சென்றடைவார்கள், ஒட்டு மொத்தமாக இந்த கார் பயணம் 70,000 கி.மீ., கொண்டதாக இருக்கும் என்றார் ரவிபிரகாஷ்.

உலகம் முழுவதும் உள்ள ரோட்டரி சங்கங்கள் கொடிகளை மாற்றிக்கொள்வார்கள், மேலும் தங்களின் வலைப் பூக்கள், வீ-லாக்ஸ் மூலம் இப்பயணத்தை பதிவு செய்துகொண்டே வருவார்கள். மக்களுக்காக தங்களின் உலகம் சுற்றும் பயணத்தை விவரிக்க புத்தகமாகத் தொகுத்து வழங்க உள்ளனர்.■




# க்ரைம் நாவல்கள்

சந்தியா ராவ்


*திக், திக் திகில் கதைகள் - மனத்தின் வக்கிரமா, சுவாரஸ்யமா?*

கிரிமினல் மைண்ட்ஸ் (Criminal Minds) என்று தொலைக் காட்சித் தொடர் ரசிகர்களின் அமோக வரவேற்பைப் பெற்றுள்ளது. பல்வேறு டிஜிட்டல் ஊடகங்களில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ள நிகழ்ச்சிகளில் அதுவும் ஒன்று. அதே சமயம், கொலை, சதி, மர்மம், திகில் கதைகளைப் படிப்பதில் ஏராளமானோர்க்கு ஆர்வம் இருப்பதையும் அறிவீர்களா? உண்மையில், பல தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் புத்தகங்களை அடிப்படையாகக் கொண்டவை என்பதால் பிரபலமாகின்றன.

சில சமயம் கற்பனைப் பாத்திரங்கள் மர்மக் கொலைக் கதைகளிலிருந்து அமைக்கப்படுகின்றன.

பல ஆண்டுகளுக்கு முன் இந்தியா டுடே இதழில் பணியாற்றிய தோழி தனது தந்தை துப்பறிபவர் என்று கூறியிருக்கிறார். அப்போது, அவரை, நீண்ட கோட், தலையில் தொப்பி, கறுப்புக் கண்ணாடி அணிந்தபடி எப்போதும் கையில் பூதக் கண்ணாடியுடன் இருப்பார் என்று கற்பனை செய்து பார்த்தேன். ஆனால், அவர் திருமணம் ஆகும் நிலையில் உள்ள ஆண் பெண்களைப் பற்றித் துப்புத் துலக்குபவர் என்பதை அறிந்தேன். திருமணத்திற்குரிய ஆண், பெண் குணம், பழக்க வழக்கம் குறித்து அறிந்து சொல்வதற்காக இப்படி துப்பறிவார்கள். ஏன், தங்களது குழந்தைகளைப் பற்றி ரகசியமாக அறிந்து கொள்வதற்காக பெற்றோர்கள் துப்பறியும் ஏஜென்சிகளை நாடுவது உண்டு என்று ஒரு தொலைக்காட்சி பேட்டியில் துப்பறியும் நிபுணர் கூறியுள்ளார்.


க்ரைம் நாவல்கள் எல்லாம் மிகைப்படுத்தப்பட்டவை. எழுத்தாளர் ஜூலி ஷாவை (Julie Shaw) பொறுத்தவரையில், எல்லாமே உள்நாட்டுத் தயாரிப்புதான். அவரது மை மாம் ஷெர்லி (My Mam Shirley), மை அங்க்கிள் சார்லி (My Uncle Charlie), அவர் வின்னி (Our Vinnie) ஆகிய நாவல்கள் அவரது சொந்த குடும்பச் சம்பவங்களை வைத்து எழுதப்பட்ட க்ரைம் படைப்புகள். அவரது கதையில் வரும் சார்லி ஹட்ஸன் ஜூலியின் தந்தை கேய்த்தின் சகோதரர். யார்க்ஷையர் நகரில் 1940ம் ஆண்டுகளில் வாழ்ந்த அவர் சூதாட்டம், விபசார விடுதி நடத்தியவர், நிஜத்தில் ஜூலி மீது அன்பு வைத் திருந்தவர். டென்ஸில் மேய்ரிக் கிளாஸ்கோ நகரில் 30 ஆண்டுக்கு முன்பு காவலராகப் பணியாற்றியவர். அவரைத்தான் ஜூலி 7 நாவல்களில் துப்பறியும் தலைமை இன்ஸ்பெக்டராக டேலி என்ற பாத்திரமாக வடித்தார்.




ஆனால், பெரும்பாலான எழுத்தாளர்கள் தங்களது ஆய்வு, கற்பனை, சிந்தனை வளம், எழுத்துத் திறன் ஆகியவற்றையே கையாளுகிறார்கள். புத்தகத்தைக் கையால் எடுத்தால் படித்து முடித்த பிறகே கீழே வைக்கும்படி சுவையாக எழுதுகிறார்கள். க்ரைம் படைப்புகளுக்கு இதுதான் அடிப்படை. இந்த நடைமுறை பிரபலமாக இருக்கிறது. படிக்கப் படிக்க வயிற்றில் புளியைக் கரைக்கிற மாதிரி விறுவிறுப்பு, திருப்பங்கள் எல்லாம் இருக்கும்.

உண்மை சில சமயம் கற்பனையை விட நம்ப முடியாத மாதிரி இருக்கும். உண்மைச் சம்பவங்களின் அடிப்படையில்தான் பல க்ரைம் நாவல்கள் படைக்கப்படுகின்றன. அதில் கொலை, கொள்ளை, பயங்கரவாத சதி ஆகியவற்றில் உண்மையைத் துப்பறிவோர் தேடுவார்கள். இந்த விஷயத்தில் பெரும்பாலும் உளவு பார்ப்பது, ராணுவ அறிவியல் ஆகியவை சார்ந்த த்ரில்லர் கதைகளை எழுதிய அமெரிக்க நாவலாசிரியர் டாம் க்ளன்சியை (Tom Clancy) குறிப்பிட வேண்டும்.

அவரது டெப்ட் ஆஃப் ஆனர் (Debt of Honour) நாவலில், அமெரிக்க நாடாளுமன்றக் கூட்டம் (காங்கிரஸ்) நடைபெற்றுக் கொண்டிருக்கும் கட்டடத்தை நோக்கி ஒரு விமானி விமானத்தை ஓட்டிச் செல்வது போல் சம்பவம் வரும். நியூயார்க் நகரில் உலக வர்த்தக மையத்தின் இரட்டைக் கட்டடம் பயங்கரவாதிகளால் தகர்க்கப்பட்டபோது, பிரபலமான இந்த நாவலின் அந்த சம்பவத்தைப் பலர் நினைவுகூர்ந்தனர். 2013ம் ஆண்டு க்ளன்சி இறந்தபோது, அவரைப் பற்றிப் பேசிய அரசியல் விமர்ச கர் கிறிஸ்டோபர் மாத்யூ, க்ளன்சி தனது படைப்புகளில் குறிப்பிட்ட மூன்று சம்பவங்கள் உண்மையாகவே நடந்துள்ளன என்று குறிப்பிட்டார். க்ளன்சி பிசாசுடன் சமரசம் (Ghost Recon) என்ற தலைப்பில் ஒரு வீடியோ விளையாட்டை 2001ல் வெளியிட்டுள்ளார். அதில் ஜார்ஜியா புரட்சியாயளர்களுக்கும் ரஷிய தேசியவாதிகளுக்கும் இடையில் சண்டை நடப்பது போல் அமைக்கப்பட்டிருக்கும். அந்த விளையாட்டு 2008 ஏப்ரல் மாதம் வடிவமைக்கப்பட்டது. உண்மையிலேயே ஜார்ஜியர்களுக்கும் ரஷியர்களுக்கும் இடையில் 2008ம்




ஆண்டு ஆகஸ்ட் மாதம் சண்டை மூண்டது.

க்ளன்சியின் உயிரோடோ பிணமாகவோ (Dead or Alive) நாவலில் ஒசாமா பின்லேடனைப் போல் ஒரு கதா பாத்திரத்தை உருவாக்கியிருக்கிறார். அந்தக் கதா பாத்திரம் லாஸ் வெகாஸில் அரசு சிறப்புப் படையினரால் கொல்லப் படுவதாகவும் அமைந் திருக்கும். அந்த நாவல் வெளியாகி சில மாதங்கள் கழித்து அதைப் போலவே பாகிஸ்தானில் அபாட்டாபாத் என்ற இடத்தில் ஒளிந்து கொண்டிருந்த பின் லேடன் அழிக்கப்பட்டார்.


மேற்கு ஆசியாவில் பயங்கரவாத நடவடிக்கைகளை முறியடிக்க அமெரிக்க அரசு ரகசியமாக தொலைபேசிகளை ஒட்டுக் கேட்டதையும் ராணுவம் மேற்கொண்ட ரகசிய நடவடிக்கைகளையும் கணினி வல்லுநர் எட்வர்டு ஸ்னோடென் (Edward Snowden) அம்பலப்படுத்தினார். இதைப் போன்ற நிகழ்வை க்ளன்சி தனது க்ளியர் அண்ட் ப்ரசன்ட் டேஞ்சர் (Clear and Present Danger) என்ற நாவலில் முன்கூட்டியே எழுதியுள்ளார். எழுத்தாளர்களின் கற்பனையில் தீர்க்கதரிசனமும் இருக்கிறது.

க்ரைம் நாவல்களைப் படிப்பது நமது மூளையின் செல்களுக்குப் புத்துணர்ச்சி ஊட்டுகிறது. ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த உளவியல் நிபுணர் மிரியம் ஹென்கி, மர்மங்கள் நமது மூளைக்கு வேலை தருகின்றன. இயற்கையாக உடலில் உள்ள ரசாயனத்தைத் தூண்டுகின்றன. நமது ஆர்வத்தை நீடிக்கச் செய்கின்றன. மர்மத்தையும் மர்ம முடிச்சு நாமே அவிழ்க்க முயலும்போதும் நமக்குள் எண்டார்ஃபின் என்ற திரவம் சுரக்கும். அப்படி சுரப்பதை நாம் விரும்புகிறோம் என்று கூறுகிறார்.

அடிப்படையில், மர்மக் கதைகள், க்ரைம் புனைவுகள், புலனாய்வுக் கதைகள் யதார்த்தத்திலிருந்து நம்மைத் தப்பிக்கச் செய்கின்றன. படிப்பவருக்கு எந்த வித நிஜ ஆபத்து இல்லாத அபாயம் இருக்கும். இறுதியில் நீதி நிலைநாட்டப்படும். களைப்புற்ற வாச கர்களுக்கு இதமானது.

புனைகதைகளில் வரும் துப்பறிவோர் எல்லோரும் சரியானவர்கள் என்று கூறிவிட முடியாது. அவர்களிலும் கறுப்புப் பக்கங்கள் உண்டு. மோசமான உறவுகள் இருப்பதுண்டு. மோசமான நிகழ்வுகளும் இருக்கும். மதுப் பழக்கம், போதைப் பொருள் பழக்கம் ஆகியவை இருப்பதுண்டு. ஏன், அதிர்ச்சி நிகழ்வால் ஏற்படும் மனச் சிக்கல்களும் ஏற்படுவதுண்டு. அடிப்படையில் அவர்களது தனிப்பட்ட வாழ்க்கை குழப்பமானது. அதே சமயம் வேலை என்று வந்துவிட்டால், அகதா கிறிஸ்டியின் கதாபாத்திரமான ஹெர்குலே போய்ட்ராட் (Hercule Poirot) போல அவர்களது விகற்ப எண்ணம் அவர்களை அதி மேதாவிகளாக மாற்றிவிடும். ஏன் ஆன் க்ளீவெஸ் (Ann Cleeves) படைப்பில் ஷெட்லாண்ட் (Shetland) என்ற பிரிட்டிஷ் தொலைக்காட்சித் தொடரில் வரும் ஜிம்மி பெரெஸ் (Jimmy Perez) கதா பாத்திரம் நிதானம் தவறாமல் இருந்தாலும், அவரது மகள் கேஸ்ஸி (Cassie) சிக்கலான மனநிலை கொண்டவள். அவளது தாய் இறந்துவிட்டாலும், அவளது மாற்றான் தந்தையும் பெற்றெடுத்த தந்தையும்தான் அவளைக் கவனித்துக் கொள்கிறார்கள்.

பொதுவாகப் பார்த்தால், க்ரைம் புனைகதைகள் குற்றச் சம்பவங்களைப் பற்றியவை அல்ல, மனிதர்களைப் பற்றியவை. சில சமயம் இந்த மாதிரியான புனைகதைகள் குழப்புவதுண்டு. அகதா கிறிஸ்டியின் ஜேன் மார்ப்பிள் கொலைகளைத் துப்புத் துலங்குவது ஸ்டீக் லார்சனின் வரும் திடுக்கிடும் நிகழ்வுகளுக்கு மாறானது. சில புனைகதைகளில் கதாநாயக பாத்திரம் துப்புத் துலக்குபவராக இல்லாமல், பாதிக்கப்பட்டவராகவோ, குற்றவாளியாகவோ இருக்கக் கூடும். ஸ்காண்டிநேவிய நாட்டு மர்மக் கதைகளில் இதைப் போல் வருவதுண்டு.




ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு வகையான க்ரைம் கதை ஆசிரியர்கள் உள்ளனர். அவற்றில் இத்தாலி எழுத்தாளர் உம்பெர்டோ எகோ (Umberto Eco) எழுதிய தி நேம் ஆஃப் தி ரோஸ் (The Name of the Rose) கதையைக் குறிப்பிட வேண்டும். 14வது நூற்றாண்டில் மடாலயத்தில் நடந்த ஒரு வரலாற்றுக் கொலைச் சம்பவத்தைப் பற்றிய அந்த நாவலைப் படிக்க வேண்டும்.

ஜோ பன்டிங் (Joe Bunting) எழுதிய "மக்கள் ஏன் துப்பறியும் கதைகளை விரும்புகிறார்கள்?" (Why people like detective stories?) என்ற தலைப்பிலான கட்டுரையில், விடுகதைகள், புதிர்கள், கணக்குகள் அத்துடன் குறுக்கெழுத்து (அல்லது சுடோகு) ஆகியவற்றைத் தீர்ப்பதில் மக்கள் ஆர்வம் காட்டு கிறார்கள். துப்பறியும் நாவல்களில் வருவோர் நிஜ வாழ்க்கையில் வரமாட் டார்கள். நமது மண்டைக்குள் நுழைந்து விடுகிறார்கள். அவ்வாறு செய்வது வாழ்வைப் புரிந்து கொள்ள உதவியாக இருக்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

க்ரைம் நாவல்களைப் படிப்பது மூளைக்கு நிச்சயமாக வேலை தருகிறது. மன அழுத்தத்தையும் தணிக்கிறது. நல்ல புத்தகம் நல்ல மனநிலையை ஏற்படுத்துகிறது. க்ரைம் நாவல்கள் நண்பர்களைப் பெற்றுத் தருவதுடன் நம்மை இழுத்து விடுகின்றன..

கட்டுரையாளர் குழந்தைகள்
எழுத்தாளர் மற்றும் மூத்த
பத்திரிகையாளர்

வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்




## RC சிதம்பரம் — RID 2981

சிதம்பரம் ரயில்நிலையத்தில் ஒரு காவல் உதவி மையம் DG S பிரையோன் இந்த சங்கத்திற்கு பணி நிமித்த வருகையின்போது திறந்து வைத்தார். இந்த மையம் அமைக்க ரொட்டேரியன் SR ராமநாதன் நன்கொடை வழங்கினார்.

## RC ராசிபுரம் — RID 2982

ராசிபுரம் அருகிலுள்ள புதுபாளையம் கிராமத்தில் உள்ள விவசாயிகளுக்கு ரூ.36,000 மதிப்புள்ள ஆடுகள் வழங்கப்பட்டது. இந்த சங்கம் அனைத்து ஆடுகளையும் 2,000 ரூபாய்க்கு காப்பீடு செய்துள்ளது. பயனாளிகள் சங்கத்திற்கு ஆடுகளில் ஒன்றை திருப்பித் தருவார்கள், இது மற்றொரு ஏழை விவசாயிகளுக்கு வழங்கப்படும். இது 10 வருடங்களுக்கு மேலாக நடந்துகொண்டிருக்கும் ஒரு திட்டப்பணி.





## RC தில்லி சவுதெக்ஸ் — RID 3011

தலைநகருக்கு அருகிலுள்ள மஸ்ஜித் மாத் கிராமத்தில் மாபெரும் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. 200-க்கும் மேற்பட்டவர்களுக்கு பல்வேறு பிரச்சனைகளுக்கான சிகிச்சை வழங்கப்பட்டது. இரத்தசோகை, கால்சியம் குறைபாடு மற்றும் சில பொதுவான நோய்களுக்கான மருந்துகள் நோயாளிகளுக்கு வழங்கப்பட்டது.

## RC மதுரை — RID 3000

ஆண்டார்கொட்டாரம் கிராமத்தில் பெண்களுக்கான ஒரு பிரத்யேக மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்பட்டது, இதில் மதுரை வேலம்மாள் மருத்துவமனையைச் சேர்ந்த ஐந்து மருத்துவர்கள் மற்றும் மருத்துவ ஊழியர்கள், பிரசவகால பிரச்சனைகள், கர்ப்பப்பை பிரச்சனைகள் மற்றும் நீரழிவு போன்றவை குறித்து நோயாளிகளுக்குப் பரிசோதனை செய்தனர். இந்த முகாம் மூலம் சுமார் 200 பெண்கள் பயனடைந்தனர்.



# சங்க சேவைகள்

**RC காஸியாபாத்** — RID 3012
அரசுப்பள்ளியில் WinS திட்டப்பணியின் ஒரு அங்கமாக குடிநீர் மற்றும் கைகழுவும் தொட்டிகளுடன் கூடிய மாணவ மாணவிகளுக்குத் தனித்தனியான கழிவறைக் கட்டிடங்களை DGE தீபக் குப்தா திறந்துவைத்தார்.



**RC கர்னல்** — RID 3080
பால்பண்ணையில் பெண்களுக்கு ஐந்து-நாள் தொழிற் பயிற்சி மங்களூருவில் உள்ள விலங்கு நல வாரியத்தில் நடத்தப்பட்டது. இதில் நிபுணரான ரொட்டேரியன் Dr V K கல்ரா 30 பங்கேற்பாளர்களிடையே உரையாற்றினார். மீரட் கால்நடை மருத்துவக்கல்லூரி முதல்வர் Dr ராஜ்பீர் சிங் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.



**RC நாசிக் ரோடு** — RID 3030
சின்னாரில் உள்ள பிரேவ்ஸ் பள்ளி மாணவர்களுக்கு ஒரு பல் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. 250-க்கு மேற்பட்ட மாணவர்கள் பலனடையும் வகையில் வாய் சுகாதாரம் குறித்த ஒரு விழிப்புணர்வு நிகழ்ச்சியும் நடத்தப்பட்டது.




**RC ஃபரித்கோட்** — RID 3090
அரசுப்பள்ளியில் உலக கைகழுவும் தினம் கடைபிடிக்கப் பட்டது, கைகளை கழுவி எப்படி சுத்தமாக இருப்பது என்பதை ரொட்டேரியன்களுக்கு செய்முறை விளக்கத்தை மாணவர்கள் செய்து காட்டினர்.



**RC தூலே ஃபெமினா** — RID 3060
ரொட்டேரியன்கள் மற்றும் ஆசிரமவாசிகள் முன்னிலையில் பாலிகா ஆசிரமத்தில் சானிடரி நேப்கின்களை வழங்கும் ஒரு இயந்திரத்தை DG பிங்கி பட்டேல் தொடங்கி வைத்தார். ஆசிரம பெண்களிடையே மாதவிடாய் சுகாதாரத்தை இந்த வசதி மேம்படுத்தும்.



**RC மொராதாபாத் அச்சீவர்ஸ்** — RID 3100

நகரில் உள்ள வேத் மந்திர் பள்ளியில் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு ரொட்டேரியன்கள் புதிய போர்வைகளை வழங்கினர். வித்யா மந்திர் மற்றும் டைம்ஸ் ஆஃப் இந்தியா உடன் இணைந்து இந்த சங்கம் ‘ஐன்ஸ்டீனை கண்டறிவோம்’ என்ற போட்டியை 7ஆம் வகுப்பு முதல் 12 வகுப்பு மாணவர்களுக்கு நடத்தியது.



**RC மிரா ரோடு** — RID 3141

தொழிலில் சிறந்து விளங்கியோருக்கான நான்கு விருது கள்; பொது வாழ்வில் அருமையான பணிகளைச் செய்தவர்களுக்கு மூன்று சேவை விருதுகள்; விளையாட்டில் சிறந்து விளங்கும் குழந்தைகளுக்கு வளர்ந்து வரும் வீரர் விருதுகள் இரண்டு; மற்றும் ரொட்டேரியன் ஆனந்த் பட்கல் அவர்களுக்கு மீரா பாயந்தர் ரத்தன் விருது போன்றவை வழங்கப்பட்டது.




**RC ஜெம்ஸ் நிஜமாபாத்** — RID 3150

நகர முக்கியத் தெருக்களில் 100-க்கு மேற்பட்டோர் ராயல் என்ஃபீல்டு பைக்குகளில் போக்குவரத்து விழிப்புணர்வு, அமைதி மற்றும் ஒற்றுமை குறித்த ஒரு பேரணி நடத்தினர். பேரணியை முடிக்கிற நேரத்தில், பைக் ஓட்டியவர்கள் மூவர்ண கொடியுடன் இந்தியா மேப் போல நின்றனர், இது மக்கள் மத்தியில் ரோட்டரியைப் பிரபலப்படுத்தியது.



**RC நெல்லூர்** — RID 3160

நகரில் உள்ள APSRTC பேருந்து நிலையம், ரோட்டரி சங்க அரங்கம் மற்றும் காந்தி சிலை மையம், முதுகூர் பேருந்து நிலையம் போன்றவற்றில் போலியோபிளஸ் நிகழ்ச்சி நடத்தப்பட்டது, இதனால் சுமார் 1,000 குழந்தைகளுக்கு சொட்டுமருந்து கொடுக்கப்பட்டது. ரோட்டரி பொது மருத்துவமனையில் சுமார் 200 நோயாளிகளைப் பரிசோதித்து இலவச மருந்துகள் வழங்கினார்கள்.



**RC மப்பூசா** — D 3170

RC பர்தேஸ் கோஸ்டல் என்ற கோவாவில் 20வது புதிய சங்கம் 58 உறுப்பினர்களுடன் தொடங்கப்பட்டது, “அதிகமான ஸ்தாபக உறுப்பினர்கள் கொண்ட சங்கம் என்ற 20 வருட சாதனையை உடைத்துள்ளது, முன்னதாக இந்த சாதனையைச் செய்தவர் DG ரவிக்கிரண் குல்கர்னி,’’ என்று சொன்னார் சங்கத் தலைவர் அஜய் மேனன்.



# சங்க சேவைகள்

**RC கொச்சி ஈஸ்ட் — RID 3201**

சூர்யா என்ற மாவட்ட முன்னுரிமைத் திட்டப்பணியின் கீழ் வைக்கம் தாலுகா வெச்சூரில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான தேஜஸ் சிறப்பு பள்ளிக்கு ஒரு பள்ளிப்பேருந்து நன்கொடையளிக்கப்பட்டது. ரொட்டேரியன்களின் முன்னிலையில் மாவட்ட இயக்குனர் ராஜ்மோகன் நாயர் இந்தப் பேருந்தை கொடியசைத்துத் துவக்கி வைத்தார்.




**RC காட்பாடி — RID 3231**

டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனையின் உதவியுடன் சங்கத்தின் ஹேப்பி வில்லேஜ் கரிகேரியில் ஒரு கண் மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. சுமார் 250 பேர் பயனடைந்த இந்த முகாமில், 25 பேர் கண்புரை அறுவை சிகிச்சைக்காக சென்னைக்கு அனுப்பப்பட்டனர்.






**RC சென்னை கொரட்டூர் — RID 3232**

தகவல் மற்றும் ஒலிபரப்புத்துறை மத்திய அமைச்சகத்தின் ஃபீல்டு அவுட்ரீச் பீரோ உடன் இணைந்து சித்த மருத்துவ முகாம் நடத்தப்பட்டது. தென்னிந்தியாவின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த சித்த வைத்தியர்கள் கலந்து கொண்டு 1,000-க்கும் அதிகமான நோயாளிகளுக்கு சிகிச்சையளித்தனர். DGND முத்து பழனியப்பன் வைத்தியர்களைப் பாராட்டினார்.



**RC பாட்னா — RID 3250**

நகரில் உள்ள ராஜேந்திர நகர் சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையில் கண்புரை அறுவைச்சிகிச்சை ஏற்பாடு செய்யப்பட்டது, இதில் 10 நோயாளிகள் சிகிச்சை பெற்றனர். மருந்துகள் மற்றும் போர்வைகளை இந்த சங்கம் அவர்களுக்கு வழங்கியது.





**RC ஜேபூர் — RID 3262**

இந்திய ஓமியோபதி மருத்துவ கழகத்துடன் இணைந்து மூன்று நாள் நடமாடும் ஓமியோபதி மருத்துவ முகாம் ஒன்று நடத்தப்பட்டது. 340-க்கும் அதிகமான நோயாளிகளுக்கு பரிசோதனை செய்து மருந்துகள் வழங்கப்பட்டது.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்
வடிவமைப்பு: L குணசேகரன்

# Subscribe NOW!




## for Rotary News Print Version & e- Version

## For the Rotary year 2019 – 2020

**Annual Subscription (India)**

| Print version | e-Version |
|---|---|
| ₹420/- | ₹360/- |

(with effect from July 2019)

**As concerned citizens of the world, those of you who are alarmed at the degradation of the environment and slaughter of trees, kindly opt for our e-Version.**

Print version ☐ e- Version ☐

| | English | Hindi | Tamil |
|---|---|---|---|
| No. of Copies | | | |

For every new member the pro-rata is ₹35 a month.

Please attach the TYPED list of individual members with their complete address, PIN code, Mobile number and e-mail ID. Intimate language preference (English/Hindi/ Tamil) against each member's name. Please do not send the Semi-annual Report for address list.

Rotary Club of ........................................ RI District ....................

Name of the President/Secretary ........................................

Address ........................................

........................................

........................................

City .................... State .................... PIN ☐☐☐☐☐☐

STD Code .................... Phone: Off. .................... Res. ....................

Mobile ....................E-mail ....................

Cheque/DD No. .................... Dated .................... for Rs. ....................

Drawn on ........................................

in favour of "ROTARY NEWS TRUST" payable at CHENNAI is enclosed.

Date: President/Secretary

Mail this form to:
Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008.
Tamil Nadu, India. Ph: 044 4214 5666, e-mail: rotarynews@rosaonline.org

# Subscription norms

1. Subscription is for the Rotary year (July to June).
2. **It is mandatory for every Rotarian to subscribe to a Rotary magazine.**
3. The annual subscription for print version is ₹420 per member.
4. Subscription for the full year must be sent in July, in the prescribed form.
5. Those joining after July can pay only for the remaining Rotary year at ₹35 an issue.
6. Subscription account of the club with *Rotary News* is a running account and does not cease at the end of June every year.
7. Names of all members, with their complete postal address with **PIN CODE,** mobile number and e-mail ID must be typed and sent along with the form and DD/cheques payable at par.
8. Copies of Semi Annual Report **SHOULD NOT** be sent as address list.
9. Language preference (English, Hindi and Tamil) should be stated alongside member's name.
10. **Members, please ensure that your name is included in the Subcribers' list that your club sends us. Often, names of members who have paid their subscription, are left out from the club list.**
11. Clubs must inform *Rotary News* about reduction in number of members, if any, before or in May. Please help reduce wastage of copies.
12. Clubs are liable to pay for the number of magazines we despatch according to the list available at Rotary News Trust.
13. Unpaid dues of the club will be shown as outstanding against the club. Any payment received subsequently will be adjusted against earlier dues.
14. **Clubs with subscription arrears will be notified to RI and may face possible suspension.**
15. We are in the process of tallying our subscriber list with RI membership from India.
16. If you want to switch to *The Rotarian*, please do so. But inform us **immediately** to avoid receipt of *Rotary News*. Or else your club will have to pay for it.

# உண்பதில் கவனம்

ஷீலா நம்பியார்

உண்பதில் கவனம் என்பது சாப்பிடும் போது கவனத்தை சாப்பாட்டிலேயே வைக்கும் ஒரு பழக்கம். சாப்பிடுவதில் இது ஒரு தனிப்பட்ட அணுகுமுறை.

எப்போதும் உணவு மற்றும் சாப்பிடுவதை பசி மட்டுமே தூண்டாது. சொல்லப்போனால் பசி வெறும் ஒரு காரணம் மட்டுமே. இந்த நிஜ உலகில் பசி மற்றும் வயிறு நிறைந்த உணர்வு போன்றவை மட்டும் தான் சாப்பிடுவதற்கான தூண்டுகோலாக இருக்கிறது. தற்போது மிகப்பெரும் பிரச்சனையாக இருக்கும் உடல் பருமன் ஏற்படாமல் நமது எடையைப் பராமரிக்க இது நமக்கு உதவி செய்யும். ஆனால் எண்ணிலடங்கா உணவு வாய்ப்புகள் மற்றும் உணவு தொடர்பான சமூக மற்றும் உணர்வு ரீதியான தாக்கங்கள் போன்றவற்றையும் நாம் சந்திக்கிறோம். சாப்பிடுதல் நமது சுயநினைவையும் தாண்டி சில காரணிகளால் அடிக்கடி கட்டுப்படுத்தப்படுகிறது. பசி யைத் தவிர மற்ற தூண்டுதல்களால் முறையற்று, கவனமில்லாமல் சாப்பிடும்போது, நமது பசி உணர்வு மழுங்கிவிடுகிறது, இது குறிப்பாக சிறுவயது முதலே மிதமிஞ்சி உணவு சாப்பிடும் போதோ அல்லது போதுமான அளவு சாப்பிடும் பழக்கத்தின்போதோ தெரிகிறது.

குழந்தைகள் விருப்பப்படாத போது பெரியவர்கள் அடிக்கடி கட்டாயப்படுத்துகிறார்கள். “தட்டில் இருப்பதை முழுவதும் காலி செய்” என்பது ஒரு குழந்தைக்கு பெற்றோர் கொடுக்கும் அறிவுரையை நாம் அடிக்கடி கேட்டிருப்போம், ஆனால் உண்மையிலேயே குழந்தைக்கு எவ்வளவு உணவு தேவை என்பது அவர்களுக்குத் தெரியாது. பெரும்பாலான நேரங்களில் உணவு விருந்தாகவும் அல்லது சிலசமயம் தண்டனையாகவும் இருக்கிறது. சோகம், மனஅழுத்தம், கோபம் அல்லது வெறுப்பில் இருக்கும் போது நாம் சாப்பிடுகிறோம், மிக முக்கியமாக உடனடியாக நமக்கு மனநிறைவைத் தரக்கூடிய அனைத்து விதமான தவறான உணவுகளை சாப்பிடுகிறோம். நீங்கள் மனஅழுத்தம் அல்லது சலிப்புடன் இருக்கும்போது ஒரு கிண்ணம் நிறைய புரோக்கோலியை சாப்பிடுவது அரிதாக இருக்கும். ஆனால் அதேவேளையில் உப்பு/இனிப்பு/புளிப்பு, மொறுமொறுப்பான அல்லது ஒரு பாக்கெட் சிப்ஸ் அல்லது சாக்லேட் கேக் போன்றவற்றை அடிக்கடி சாப்பிடுவீர்கள்.

சாப்பாடுக்கான நமது உணர்வுகளைத் தவிர வெளிப்புற காரணிகளும் எவ்வளவு அல்லது என்ன சாப்பிடவேண்டும் என்பதைத் தீர்மானிக்கிறது. உதாரணமாக - அறையில் உள்ள விளக்கு வெளிச்சம் சாப்பிடும் அளவைத் தூண்டும். துரித உணவகங்களில் ஏன் பளீரென்ற விளக்குகளைப் பயன்படுத்துகிறார்கள் என்று எப்போவாவது ஆச்சர்யப்பட்டிருக்கிறீர்களா? இவை சாப்பிடும் அளவை அதிகரிக்கும். உங்களைச் சுற்றி எத்தனை ஆட்கள் இருக்கிறார்கள் என்பது நீங்கள் சாப்பிடும் அளவைத் தீர்மானிக்கும், அமைதியான, ஆராவாரமற்ற, மங்கிய விளக்குகள் உள்ள ஒரு ஆடம்பரமான உணவு விடுதியில் ஒவ்வொருவரும் சிறிய அளவே பரிமாறுவது, மெல்லிய குரல்களில் பேசிக்கொள்வது போன்றவை கொஞ்சமாக சாப்பிட்டு உங்களைத் திருப்தியடைய வைக்கும், அதேவேளையில் அதிக சத்தம், கணக்கற்ற உணவு கொண்ட ஒரு ஆர்ப்பாட்டமான பஃபேயில் உங்களுக்குத் தேவையானதை விட அதிகமாக சாப்பிடுவீர்கள். சுற்றுப்புறம் என்பது முக்கியமானது. அதேபோல் கரண்டிகளின் அளவும் முக்கியம். ஒரு ஆய்வில், மக்கள் தங்களுக்கு மிகச் சிறிய அளவிலான தட்டுகளில் உணவு வழங்கப்பட்டபோது, (எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடலாம் என்ற போதிலும் கூட) வழக்கத்தை விட 25 சதவீதம் குறைவாகவே சாப்பிட்டனர்.

நமது கவனத்தை கொடூரமாக சிதறவைக்கும் மற்றொரு தூண்டுதல் என்னவென்றால், உணவு நேரத்தில் டிவி, போன் அல்லது ஏதாவது திரையைப் பார்த்துக்கொண்டே கவனமில்லாமல் சாப்பிடுவது. விளம்பரங்கள் நமது உணர்வுகளுடன் விளையாடும். யோசித்துப் பாருங்கள், மிகப்பெரிய உணவு நிறுவனங்கள் தங்களின் தயாரிப்புகளை விற்கவும் உடனடியாக நாம் அதை சாப்பிட வேண்டும் என்று நம்மை நம்ப வைக்கவும் விளம்பரங்களை உருவாக்க மிக அதிகமான பணத்தை செலவழிக்கிறார்கள்.

### உண்பதில் கவனமின்மை

என்ன சாப்பிடுகிறோம் அல்லது ஏன் சாப்பிடுகிறோம் என்பது பற்றி கவனமே இல்லாமல் தன்னிச்சையாக சாப்பிடுவது என்பது இப்போது சகஜமாகிவிட்டது. உங்களுக்கு தேவையில்லாத போதும் கூட, மூன்று முறை முழு சாப்பாடு மற்றும்



இரண்டு முறை நொறுக்குத்தீனிகளும் தினமும் சாப்பிட்டாக வேண்டும் என்பதை உங்களில் எத்தனை பேர் உண்மையிலேயே நம்புகிறீர்கள்? பசிக் கிறதா என்று எப்போதாவது உங்களை நீங்களே கேட்டிருக்கிறீர்களா? உணவுகளைத் தேர்வு செய்வதற்கான காரணங்களைப் பற்றி உங்களுக்குத் தெரியாதபோது அல்லது என்ன சாப்பிட்டோம் என்பது பற்றி ஞாபகம் இல்லாமலோ எவ்வொரு பிரச்ச னைக்கும் உணவு தான் தீர்வு என்று கண்மூடித்தனமாகச் சாப்பிட்டால், நீங்கள் கவனமில்லாமல் சாப்பிடுகிறீர்கள் என்று அர்த்தம்.

குழுவுடனோ அல்லது குடும்பங்கள் ஒன்றாக இருக்கும் தருணங்களிலும் மனதளவில் மகிழ்ச்சியாக இருக்கும் போதும் கவனமில்லாமல் சாப்பிடுகிறோம்.

**கவனத்துடன் எப்படி சாப்பிடுவது:**

உங்கள் உடல் சொல்வதைக் கேளுங்கள் - வயிறு நிறைந்த உணர்வை நாம் பெரும்பாலான நேரங்களில் கண்டுகொள்ளாமல் விடுகிறோம். அல்லது நமக்கு விருப்பமான உணவை சாப்பிடுவதால் ஏற்படும் அசௌகரியத்தை அலட்சியப்படுத்துகிறோம்.

உங்கள் மூளை சொல்வதை கவனிக்கவும் - சாப்பிடுவதை ஒரு மனதுக்கு உகந்த அனுபவமாக மாற்றுங்கள் - இதை எப்போதும் செய்யமுடியாமல் போகலாம். ஒரு மதியநேரத்தில் நொறுக்குத் தீனி சாப்பிட்டு, சாயங்கால நேரத்தில் ஒரு முழு சாப்பாட்டிற்கு உட்காரலாம், அப்போது ஒரு உரையாடலை ஆரம்பித்து, அதை ருசித்து மகிழுங்கள். உணவு, சுவை மற்றும் உடன் இருப்பவர் போன்றவற்றில் கவனம் செலுத்துங்கள். அந்தத் தருணத்தில் கவனத்தை செலுத்துங்கள்.



உங்கள் உடல் மற்றும் உணவு குறித்து தனிப்பட்ட எண்ணத்துடன் இருங்கள் - உணவுக்கும் உங்களுக்கும் பந்தம் சரியில்லாமல் இருந்தால், அது உங்களுக்கும் உங்கள் உடலுக்கும் இடையேயான தொடர்பில் பிரதிபலிக்கும். உதாரணமாக எடையைக் குறைக்க முயற்சி செய்யும் போது உணவு குறித்த விடாப்பிடியான எண்ணங்களை அது ஏற்படுத்தலாம். உங்கள் உடலுக்கு உண்மையிலேயே என்ன தேவை என்பதில் கவனம் செலுத்தாமல், நீங்கள் பசியிலிருந்து நவீன சத்தில்லா உணவு முறைக்கு மாறலாம். எனவே உங்கள் ஜீரணமாகாத லாக்டோஸை பகிர்ந்து கொள்ளாமல் போகலாம். உங்கள் உடல் எப்படி பதில்வினையாற்றுகிறது என்பதில் கவனம் செலுத்தினால் மட்டுமே உங்களால் அதற்கேற்றவாறு செயல்படமுடியும்.

உணவைப் புரிந்துகொள்ளுங்கள் - நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள் என்பதில் கவனம் செலுத்தும் போது உணவின் அடிப்படை நுணுக்கத்தையும் ஊட்டச்சத்தையும் புரிந்துகொள்ளவேண்டும். என்னென்ன உணவு வகைகள் உள்ளது? சைவ உணவை உண்பவர் புரதச் சத்துக்கு என்ன சாப்பிடவேண்டும்? பரிமாறுவதற்கான அளவுகள் என்னென்ன? இந்த உணவில் சேர்க்கைகள்/பதப்படுத்திகள் இருக்கிறதா? இந்த கேள்விகளை யெல்லாம் கேட்டுக்கொண்டு பதில் சொல்லுங்கள். உணவைப் பற்றி தேவையான விஷயங்கள் தெரியும்போது சரியான உணவுகளைத் தேர்வு செய்வது மிக எளிது.

வெளிப்புற குறிப்புகள் எப்படி நீங்கள் சாப்பிடுவதை தூண்டுகிறது என புரிந்துகொள்ளுங்கள். உணவு மற்றும் பானத்திற்கான விளம்பரங்கள் நம்மை அதிகமாகத் தூண்டுகிறது. இது ஒரு வெளிப்புற தூண்டுதல் மட்டுமே உங்கள் உடலுக்கு அவசியமானதல்ல என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். தட்டுகள், ஸ்பூன்கள் மற்றும் கிண்ணங்கள் போன்றவற்றின் அளவு நாம் எவ்வளவு சாப்பிட முடியும் என்பதைத் தூண்டுகிறது. பெரிய தட்டுகள் மற்றும் கிண்ணங்கள் நம்மை அதிகமாக சாப்பிட ஊக்கப்படுத்துகிறது. வாசனை, தோற்றம் மற்றும் மற்றவர்கள் சாப்பிடும் சத்தம் போன்றவைகள் கூட நாம் எவ்வளவு சாப்பிடுகிறோம் என்பதைத் தூண்டுகிறது. விளக்கு வெளிச்சம், இசை, நம்மைச் சுற்றிய உரையாடல் போன்றவை நமது சுய பழக்கவழக்கத்திற்கு ஒரு முக்கியமான குறிப்பாகும்.

உங்களைத் தூண்டுபவைகளைக் கவனிக்கவும். சில குறிப்பிட்ட தூண்டிகள் தான் உங்களை அதிகமாகவோ அல்லது குறைவாகவோ சாப்பிட வைக்கிறது. அவற்றைக் குறித்துக் கொள்ளுங்கள். உதாரணமாக -

சாப்பிடத் தூண்டும் நேர்மறை காரணிகள் - (குடும்பம் ஒன்றாக இருப்பது, கொண்டாட்டம், விருந்து போன்றவை)

- கவனத்துடன் சாப்பிடும் விதிகளை பின்பற்றுங்கள்
- சாப்பிடுவதை ருசித்து சாப்பிடுங்கள்

சாப்பிடத் தூண்டும் எதிர்மறை காரணிகள் - (மனஅழுத்தம், கோபம், மனச்சோர்வு, சலிப்பு போன்றவை)

- சாப்பிடுவதற்கு பதிலாக மாற்று செயல்களைச் செய்ய ஒரு பட்டியலைத் தயார்செய்யுங்கள்.
- சாப்பாடு உங்களின் தற்போதைய பிரச்னைக்கு தீர்வல்ல என்பதைப் புரிந்துகொள்ளுங்கள்.

இதன் ஆசிரியரை
*sheelanambiar@gmail.com*
என்ற இணையதளத்தில்
தொடர்பு கொள்ளலாம்.
*Website: www.drsheelanambiar.com*

**ரோட்டரி நியூஸ் ஆண்டு சந்தா செலுத்தும் வழிகள்:**

*இப்போது நீங்கள்*
**ரோட்டரி நியூஸ் ஆண்டு சந்தாவை**
*ஆன்லைன் மூலமும் செலுத்தலாம்.*
*எங்கள் வங்கி விவரம்:*

| | | |
|---|---|---|
| Bank | : | HDFC Bank<br>SB Account |
| Branch | : | Egmore, Chennai |
| A/c Name | : | Rotary News Trust |
| A/c No. | : | 50100213133460 |
| IFSC Code | : | HDFC0003820 |

*ஆன்லைனில் பணம் செலுத்தியப் பின், உங்கள் சங்கப்பெயர், சங்கத் தலைவர்/செயலாளர் பெயர், பணம் செலுத்திய தேதி, எவ்வளவு செலுத்தினீர்கள் மற்றும்* UTR *எண் இவற்றை மறக்காமல் எங்களுக்கு இமெயில் செய்து விடுங்கள்.*

*சந்தாவை உங்கள் வங்கியில் காசோலை அல்லது ரொக்கமாக கட்டினால் உங்கள் சங்கப் பெயரை மட்டும் அங்கு குறிப்பிடுங்கள்.* "Rotary club of" *என்பதை தவிர்க்கவும்.*

## RI Exchange Rate - May 2019

**$1 = ₹70**

## Rotary at a glance

| | | |
|---|---|---|
| Rotarians | : | 12,24,128 |
| Clubs | : | 35,930 |
| Districts | : | 538 |
| *Rotaractors | : | 161,311 |
| Clubs | : | 9,927 |
| *Interactors | : | 551,839 |
| Clubs | : | 23,993 |
| RCC | : | 10,303 |

*Estimated

As on April 11, 2019


## Membership Summary

As on April 1, 2019

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians | Rotaract Clubs | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|
| 2981 | 114 | 4,716 | 212 | 41 | 232 | 203 |
| 2982 | 69 | 3,108 | 163 | 69 | 117 | 53 |
| 3000 | 130 | 5,467 | 535 | 233 | 686 | 203 |
| 3011 | 82 | 3,501 | 736 | 47 | 115 | 25 |
| 3012 | 91 | 3,584 | 804 | 54 | 131 | 56 |
| 3020 | 77 | 4,076 | 228 | 56 | 466 | 349 |
| 3030 | 91 | 4,949 | 619 | 81 | 326 | 179 |
| 3040 | 95 | 2,114 | 240 | 33 | 135 | 142 |
| 3053 | 69 | 3,069 | 545 | 10 | 57 | 96 |
| 3054 | 128 | 6,321 | 1,113 | 77 | 324 | 475 |
| 3060 | 103 | 4,355 | 567 | 59 | 127 | 138 |
| 3070 | 103 | 3,171 | 342 | 47 | 164 | 58 |
| 3080 | 81 | 3,453 | 302 | 74 | 226 | 109 |
| 3090 | 79 | 2,019 | 65 | 36 | 39 | 122 |
| 3100 | 78 | 1,929 | 118 | 12 | 78 | 146 |
| 3110 | 116 | 3,862 | 317 | 30 | 52 | 104 |
| 3120 | 76 | 3,244 | 397 | 31 | 63 | 52 |
| 3131 | 132 | 5,526 | 1,229 | 95 | 312 | 90 |
| 3132 | 98 | 3,939 | 414 | 38 | 216 | 151 |
| 3141 | 95 | 5,663 | 1,355 | 111 | 273 | 84 |
| 3142 | 95 | 3,511 | 663 | 76 | 205 | 64 |
| 3150 | 95 | 3,618 | 367 | 60 | 249 | 109 |
| 3160 | 73 | 2,568 | 159 | 27 | 48 | 81 |
| 3170 | 126 | 5,707 | 638 | 59 | 347 | 164 |
| 3181 | 81 | 3,664 | 331 | 57 | 271 | 115 |
| 3182 | 85 | 3,382 | 257 | 28 | 278 | 95 |
| 3190 | 128 | 5,112 | 697 | 125 | 371 | 52 |
| 3201 | 144 | 5,447 | 346 | 95 | 141 | 49 |
| 3202 | 130 | 5,079 | 258 | 78 | 447 | 47 |
| 3211 | 139 | 4,490 | 291 | 8 | 98 | 128 |
| 3212 | 99 | 4,122 | 329 | 95 | 292 | 142 |
| 3231 | 82 | 3,433 | 320 | 49 | 216 | 305 |
| 3232 | 119 | 4,967 | 799 | 116 | 350 | 83 |
| 3240 | 88 | 3,123 | 402 | 49 | 170 | 171 |
| 3250 | 102 | 3,927 | 690 | 61 | 217 | 177 |
| 3261 | 73 | 2,649 | 346 | 9 | 112 | 43 |
| 3262 | 91 | 3,438 | 421 | 38 | 77 | 76 |
| 3291 | 147 | 3,753 | 734 | 84 | 136 | 601 |
| **India Total** | **3,804** | **150,056** | **18,349** | **2,348** | **8,164** | **5,337** |
| 3220 | 72 | 2,025 | 285 | 77 | 213 | 73 |
| 3271 | 88 | 1,543 | 255 | 54 | 19 | 16 |
| 3272 | 147 | 2,525 | 384 | 51 | 40 | 40 |
| 3281 | 208 | 5,807 | 854 | 222 | 94 | 189 |
| 3282 | 148 | 4,162 | 422 | 124 | 49 | 43 |
| 3292 | 117 | 4,641 | 718 | 122 | 130 | 113 |
| **S Asia Total** | **4,584** | **170,759** | **21,267** | **2,998** | **8,709** | **5,811** |

*Source: RI South Asia Office*

# On the racks





## Listening to the Animals: Becoming the Supervet

Author : **Noel Fitzpatrick**
Publisher : **Hachette India**
Pages : **375; ₹499**

In this memoir, Noel Fitzpatrick recounts the surprising journey where he leaves behind a farm animal practice in rural Ireland to set up *Fitzpatrick Referrals* in Surrey, one of the most advanced small animal specialist centres in the world. We meet the animals that paved the way, from calving cows and corralling bullocks to talkative parrots and bionic cats and dogs. Noel has listened to the many lessons that the animals in his care have taught him. He also shares the time spent with his beloved Keira, the scruffy Border Terrier who has been by Noel's side at all times, when he went through the unbelievable highs and crushing lows of his extraordinary career.


As heart-warming and life-affirming as the TV show with which he made his name, *Listening to the Animals* is a story of love, hope and compassion, and about rejoicing in the bond between humans and animals.




## NUMI - The Guarded Loop

Author : **Nupur Sandhu**
Publisher : **Blue Rose Publishers**
Pages : **120; ₹190**

The book takes us through the mystic and intriguing journey of Nuha, a sensitive young girl. She has already hit the quintessential milestones of life, yet continues to look for the oasis, searching for vistas unknown. She morphs from a jovial youngster to an enlightened soul, after inculcating the art of being in sync with the supreme Creator.





## Stress Proof

Author : **Dr Mithu Storoni**
Publisher : **Hachette India**
Pages : **261; ₹399**

In this book, Mithu Storoni gives you all the tools you need to handle stress and positively boost your mental and physical well-being. The author helps you to prevent small stressful incidents turning into a situation where you are faced with inflammation, anxiety, depression and other cronic health issues.


The different chapters examine common stress agents and suggest simple ways to minimise their harmful effects.




## Doing Good in The World

Translated by : **Dr Sudhir Rashingkar**
Publisher : **Dilipraj Publication**
Language : **Hindi and Marathi**
Pages : **220; ₹300**

In the book on TRF, Rashingkar describes the Foundation's journey over 100 years, documenting its history, programmes and the difference Rotarians have made around the world.




## A Century of Service: The Story of Rotary International

Translated by : **Dr Sudhir Rashingkar**
Publisher : **Dilipraj Publication**
**Hindi and Marathi**
Pages : **320; ₹450**

With special permission from RI, Sudhir Rashingkar has translated this book that showcases the spirit of service of Rotary International, a nonprofit dedicated to improving the human condition. The book talks about how Rotarians remain committed to helping their communities and the world beyond. It also throws light on the men and women behind the world's premier service organisation. The book contains stories of ordinary people doing extraordinary work.

**The above two books are available to Rotarians at concessional price of ₹500 plus courier/postage charges.**

Compiled by Kiran Zehra
Designed by Krishnapratheesh S

# இங்கிலாந்து – போர்ச்சுக்கல்
# இரு துருவங்கள்!

LBW

TCA ஸ்ரீனிவாச ராகவன்

இந்த ஆண்டு கோடை சுற்றுலாவுக்கு எங்கே செல்வது என்று யோசிக் கிறீர்களா, போர்ச்சுக்கல் நாட்டுக்குப் பயணம் செய்யுங்கள். கடந்த கோடை காலத்தில் அங்கே சென்றிருந்தேன்.

போர்ச்சுக்கல் மாலுமி ஹென்றி என்று அழைக்கப்பட்ட ஹென்றி இளவரசரின் தேசம். அவர்தான் கி.பி.1425ம் ஆண்டு முதல் 1450 வரையில் மேற்கு ஆப்பிரிக்கக் கடலோரப் பகுதியில் வணிகத்துக்காகப் பயணம் செய்த போர்ச்சுகீசிய கடலோடி.

ஹென்றி இளவரசரைப் பற்றி நிறைய புத்தகங்கள் இருந்தாலும் சைமன் வின்செஸ்டர் எழுதிய அட்லாண்டிக் புத்தகம்தான் ஜோர்! போர்ச்சுக்கல் ஓர் அற்புதமான சுற்றுலா செல்ல ஏற்ற நாடு. இரண்டு பேருக்கு ஒரு நாளைக்கு 100 யூரோ நாணயம் (சுமார் ரூ.7800) போதும்.

நாங்கள் போர்ச்சுக்கல் வடக்கு நகரமான போர்ட்டோவில் எங்களது சுற்றுலாவைத் தொடங்கினோம். அங்கிருந்து தெற்கே லிஸ்பன் நகருக்குப் பயணமானோம். வழியில் ட்யூரோ பள்ளத்தாக்கு என்ற இடத்தில் உள்ள மலைப் பிரதேச நகரான பினோய்ர் சென் றடைந்தோம். அங்கிருந்து 250 மைல் தொலைவில் டோமர் என்ற சின்ன ஊர் உள்ளது. அங்குதான் அரண்மனை, தேவாலயம் எழுப்பி ஹென்றி இளவரசர் வாழ்ந்து வந்தார். அங்கே இப்போது எல்லா கட்டடங்களும் சிதலமடைந்து விட்டன. மூன்று ரயில்களைப் பிடித்துத்தான் அங்கே சென்றோம். மொத்தம் 20 ஆயிரம் பேர் மட்டும் இருக்கும் அந்த ஊர் அழகானது. அங்கே விஸ்கி மதுபானம் இரண்டு யூரோவுக்கு (ரூ.150) கிடைக்கிறது. சாப்பாடு 6 யூரோ (ரூ.450)தான். ஜூலை மாதம், ஐரோப்பாவில் சுற்றுலா சீசன்!

சில நாடுகளில் வரலாறும் மாவீரர்களும் எப்படியெல்லாம் கொண்டாடப்படுகிறார்கள் என்பதுதான் விஷயம்.

போர்ச்சுக்கல் இந்தியாவின் ஒரு சிறிய பகுதியை மட்டுமே ஆண்டிருந்தாலும் ஆட்சி நடத்திய காலம் அதிகம். போர்ச்சுக்கல் அப்பகுதியை 450 ஆண்டுகள் ஆண்டது. இங்கிலாந்து 190 ஆண்டுகள்தான் இருந்தது. போர்ச்சுகீயர்களின் ஆளுகைக்குள் கோவா 1510ம் ஆண்டு முதல் 1962ம் ஆண்டு வரையில் இருந்தது. அதற்கு வழியமைத்து சாதனை புரிந்தவர் வாஸ்கோட காமா தான். ஆனால், அவரையே போர்ச்சுக்கல் மறந்துவிட்டது. மன்னர் குடும்பத்தைச் சேர்ந்த பார்த்தலோமியோ டயஸ், படைத் தலைவராக இருந்த பெத்ரோ ஆல்வாரெசு காப்ரால் ஆகிய கடலோடிகள் மிகக் கடினமான கடல் வழிப் போக்குவரத்துகளைக் கண்டறிந்தனர். எனினும், இந்த சாகசப் பயணத்தில் பல கப்பல்கள் கரைக்குத் திரும்பவில்லை. ஏராளமானோர் கடலில் மூழ்கி இறந்துவிட்டனர்.

அவர்களில் இந்தியக் கடற்கரையை அடைந்த வாஸ்கோட காமா இந்திய மண்ணில் காலடி எடுத்துவைத்து, இங்கேயே மரணமடைந்தார். அவரது உடல் கொச்சியிலிருந்து லிஸ்பன் நகருக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அவர் இந்தியாவை நோக்கிப் பயணம் தொடங்கிய இடத்துக்கு அரை கிலோமீட்டர் தொலைவில் பெரிய தேவாலயத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது. தற்போது பெலெம் என அழைக்கப்படும் அந்த இடம் வாஸ்கோட காமாவை மறந்துவிட்டது. கேக் வகைகளுக்குப் பெயர்பெற்ற இடமாகிவிட்டது.

வாஸ்கோட காமா, பெர்டினென்ட் மகலன் ஆகியோர் கடல்வழிப் பயணம் மேற்கொள்ளாமல் இருந்தால், போர்ச்சுக்கல் கடல் வழி வணிகம் மூலம் வளமும் காலனி செல்வாக்கும் கொண்ட நாடாக மாறியிருக்காது. ஆனால், இதற்கு இங்கிலாந்து கதையே வேறு.

இங்கிலாந்தில் தங்களது மாவீரர்களை தங்களது தேவாலயங்களில் போற்றிக் கொண்டாடுகிறார்கள். போர்ச்சு க்கல் நாட்டில் அப்படி இல்லை. இங்கிலாந்தில், வரலாற்றில் கண்ட சின்னப் போரையும் மிகச் சாதாரண வீரர்களின் பங்களிப்பையும் ஆஹா ஓஹோ என்று போற்றுகிறார்கள். போர்ச்சுக்கல் நாடு போரைப் போற்றுவதில்லை. அது ஏன், வாஸ்கோட காமா நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தில் கூட அவரைப் பற்றிய குறிப்பு இல்லை.

ஒரு நாட்டின் காலனியாதிக்க ஆக்கிரமிப்பு வெட்கப்படக் கூடியது. அதைப் பற்றி பாடம் நடத்தி வந்த பிரிட்டன் தற்போது அதைக் கைவிட்டுவிட்டது. இத்தனைக்கும் அந்நாடு கலை, அரசியல், தத்துவம், அறிவியல் ஆகியவற்றில் சாதனைகளை நிகழ்த்தியுள்ளது.

போர்ச்சுக்கல் நாடு கி.பி. 1500 முதல் 1650 வரையில் ஒரே கடல்வழி சக்தியாகத் திகழ்ந்தது. இருந்தாலும், அதில் பங்களிப்பு செலுத்திய மாவீரர்களின் சிலைகளைப் பார்ப்பது அரிது. மாறாக இங்கிலாந்தில் செல்லப் பிராணிகளுக்குக் கூட சிலை உண்டு. காரணம், போர்ச்சுக்கல் கடவுளின் பெயரால் காலனி ஆதிக்கம் செலுத்தியது. ஆனால், இங்கிலாந்து வணிகத்துக்காக காலனி ஆதிக்கம் செய்தது. ■

2019 HAMBURG

Rotary | BE THE INSPIRATION

# GOLDEN OPPORTUNITY to Meet Global Leaders






We cordially invite you

for the **Traditional**

**South Asian Reception**

@

Hotel Grand Elysee

Rothenbaumchaussee, Hamburg

between 05.00 pm – 07.00 pm



RID C. Baskar
&
Malathi Baskar

Chairman, Dr Saga
PDG Dr EK Sagadhevan
& Dr. Usha, RID 3202

The registration charges per person is Rs. 5,000.00 (EUR 65 / US $ 75)

**PDG Dr EK Sagadhevan, Chairman** – South Asian Reception
Lotus Hospital, 90, Thayumanavar Sundaram Street, Kollampalayam,
Erode – 638 002 Tamil Nadu, India Mob: +91 99944 77725E-mail: pdgdrsaga@gmail.com

Regn. No. RNP – TN/CCN/677/2019–2021
Registered with Registrar of News Papers for India TNTAM/2018/76372

Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹35

Rotary News Tamil published on 1st of every month

ADVT

Rotary
District 3012

BE THE INSPIRATION
R.I. THEME 2018-19

# Great Community Projects
## by Clubs of District 3012



**DR. SUBHASH JAIN AKS**
District Governor 2018-19

### Solar Panel at Shelter Home "Sewa Ashram", Narela (Haryana) Donated by Rotary Club of Delhi Metro





### Umeed ...Ek Nai Zindagi Ki "Victims of Burnt Cases" (Yearly Project) Rotary Club of Noida invites Teams of Doctors from Germany & Austria who perform the Operations at Parkash Hospital, Noida 45 Major Surgeries & 21 Minor Surgeries were performed.





### Physiotherapy Machines donated to Jai Shri Ram Charitable Hospital, Pitam Pura, Delhi by Rotary Club of Delhi Karma



